# பசுமையான உர யுகத்தை நோக்கி

**கமத்தொழில் அமைச்சு**

80/5 ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை,
ராஜகிரிய, இலங்கை.

தொலைபேசி : +94 11 2 868 920
தொலைநகல் : +94 11 2 863 497
மின்னஞ்சல் : info@agrimin.gov.lk
இணையம் : www.agrimin.gov.lk

CREATIVE WRITING, PHOTOGRAPHY
LAYOUT & DESIGN

613/3, High Level Road, Gangodawila,
Nugegoda, Sri Lanka.
+94 11 302 4950 | +94 71 224 11 00
kalawainfo@gmail.com

# வருடாந்த அறிக்கை

## 2017

வரையறுக்கப்பட்ட இலங்கை உரக்கம்பனி


**வரையறுக்கப்பட்ட இலங்கை உரக்கம்பனி**
லக்பொஹொர சுவர்ணஜயந்தி மாவத்தை,
ஹுனுப்பிட்டிய, வத்தளை.

தொலைபேசி. : 011-2 930 298/ 99 | தொலைநகல் : 011-2 947 763
மின்னஞ்சல் : lakpohora@sltnet.lk | இணையம் : www.lakpohora.lk

# விருதுகள்




CNCI சாதனையாளர் விருது 2014
தேசிய மட்டத்திலான திறமைக்கான விருது




வருடாந்த அறிக்கைகள் விருது 2014
தகுதிக்கான விருது



தேசிய கமத்தொழில் வியாபார விருது 2014
வெள்ளி விருது




ISO 14001: 2004
சுற்றுச்சூழல் தரச் சான்றிதழ்




JASTECA CSR விருது 2014
தகுதிக்கான விருது



அக்கிமொட்டோ 5S விருது 2014
தகுதிக்கான விருது



தேசிய வியாபாரத்திற்கான
சிறந்த விருது 2014
தங்க விருது



SLCBCC வியாபார நட்சத்திரம் 2014
வெள்ளி விருது



மனிதவள முகாமைத்துவ விருது 2014
வெள்ளி விருது



தேசிய உற்பத்தித்திறன் விருது 2013/14
இரண்டாம் இடம்



மனிதவள முகாமைத்துவ விருது 2013
வெள்ளி விருது

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| இதுவரையிலான பயணம் | 08 |
| கூட்டாண்மைத் தகவல் | 10 |
| இலக்கு மற்றும் நோக்கு | 14 |
| இயற்கையினால் முன்னோக்கிச் செல்லும் உலகம் | 16 |
| நிதி ரீதியலான முக்கிய கட்டங்கள் | 19 |
| கடந்த 10 வருடகால நிதி பற்றிய முக்கிய கட்டங்கள் | 20 |
| தலைவரின் செய்தி | 22 |
| பொது முகாமையாளரின் அறிக்கை | 24 |
| பணிப்பாளர் சபை | 28 |
| சிரேஷ்ட  முகாமைத்துவக் குழு | 34 |
| முகாமைத்துவ மதிப்பீடு மற்றும் பகுப்பாய்வு | 38 |
| மனிதவள முகாமைத்துவம் | 44 |
| கூட்டாண்மை ஆட்சி | 47 |
| கம்பனியின் நிறுவன ரீதியிலான கட்டமைப்பு | 49 |
| இடர் முகாமைத்துவம் | 50 |
| கணக்காய்வு மற்றும் இடர் முகாமைத்துவ குழுவின் அறிக்கைகள் | 53 |
| எமது புவியியல் ரீதியிலான விரிவாக்கம் | 62 |
| நிதிக்கூற்றுகள் | 64 |
| பணிப்பாளர் பொறுப்புகளுக்கான அறிக்கை | 67 |
| தலைவர் மற்றும் நிதியியல் முகாமையாளரின் பொறுப்பு அறிக்கை | 68 |
| கணக்காய்வாளர் நாயகத்தின் நிதயியல் அறிக்கை | 69 |
| இலாப நட்ட மற்றும் முற்றுமடங்கிய வருமானக் கூற்று | 82 |
| நிதி நிலைமைக் கூற்று | 83 |
| உரிமையாண்மையில் கூற்று | 84 |
| காசு பாய்ச்சல் கூற்று | 85 |
| நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புகள் | 86 |
| பிரதிநிதிப் பத்திரம் | 112 |




# நெல் பயிர்ச் செய்கைக்கான
# நேரடியான உரம்

எங்களால் விவசாயிகளால் வழங்கப்படும் நேரடியான உரவகையில் யூரியா, மியூரியாட், பொட்டாஷ், மூன்று உயரிய பொஸ்பேட், துத்தநாக சல்பேட்டு போன்றன அடங்கியுள்ளன.

நிகழ்ச்சியமான மற்றும்
வெகுமதிகளுடன் நிறைந்த
# இதுவரையிலான பயணம்

## 1964

கௌரவ பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்க அவர்களின் தலைமையில் கைத்தொழில், உணவு மற்றும் கூட்டுறவு அமைச்சின் கீழ் ரூ. 58,000 முதலீட்டில் இலங்கை உரக் கூட்டத்தாபனம் ஆரம்பிக்கப்ப பட்டதுடன், அதன் முதல் தலைவராக அமைச்சின் மேலதிகச் செயலாளரான சேம் சில்வா அவர்களாவார். தலைமைக் காரியாலயம் டார்லி வீதியில் அமைக்கப்பட்டதுடன் 80,000 மொட்ரிக் டொன் களஞ்சியப்படுத்தக்கூடிய கொள்ளளவுடைய களஞ்சியச்சாலை ஒன்றை ஹுனுபிட்டியவில் ஆரம்பிக்கப்பட்டது.

வேனொன்று வாடகைக்கு எடுத்துக்கொள்ள பணம் இல்லாமையால் கூட்டுத்தாபனத்தின் முதல் ஊழியர்களில் ஒருவரான கே.கே. அன்டனி அவர்கள் புதிதாக உருவாக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தில் வெளியேற்றப்படும் கடதாசிகளுக்காக 12 வளையும் கூடைகளைக் கொண்டு அவற்றை தனது சைக்கிளில் ஏந்திக்கொண்டு மீண்டும் தலைமைக் காரியாலயத்தை நோக்கி சைக்கிளில் சென்றுள்ளார்.

## 1966

மணிக்கு 35 மெகாவொட் கலவைக் கொள்ளளவைக் கொண்ட ஹுனுபிட்டிய வளாகத்தில் கலவை செயற்பாடுகள் ஆரம்பமானது. இங்கு 70,000 மொட்ரிக் டொன் கலக்கப்பட்டது. இறக்குமதி, உற்பத்தி மற்றும் விநியோகம் தொடர்பாக தனியார் நிறுவனங்களில் காணப்பட்ட ஏகபோகம் அதனூடாக சரிந்தது.

## 1970

கூட்டுத்தாபனத்தில் உ்பத்திகள் “லங்கா பொஹொர” இலங்கை உரம் என்ற பெயரில் விநியோகங்கள் ஆரம்பிக்கப்பட்டது.

## 1976

அனுமதி முறையை ரத்து செய்யப்பட்டு உர மானியத்தை அறிமுகம் செய்யப்பட்டது.

## 1977

திறந்த பொருளாதாரத்தை அறிமுகப்படுத்தப் பட்டதோடு இலங்கை உரக் கம்பனியில் காணப்படும் துறை முன்னுரிமை நிலைமை இழக்கப்பட்டது. தனியார் துறையின் போட்டிகளுக்கு வலுவான ரீதியில் பதிலளித்ததுடன், கூட்டுத்தாபனமம் அதுவரை கூட்டுறவுகளுக்கு மற்றும் விவசாய சேவை மையங்களுக்கு மட்டும் வரையறையுடன் காணப்பட்ட விநியோக வலைப்பின்னல் அங்கீகரிக்கப்பட்ட வநியோக பிரதிநிதிகள் வரை விரிவாக்கப்பட்டது.

## 1978

ஜெர்மனி அரசின் வெகுமதிகளாக 28 மில்லியன் ரூபாய் மற்றும் தொழிநுட்ப உதவியுடன் மாகோ, வெளிகம, பொலன்னருவை மற்றும் அனுராதபுர பிராந்திய களஞ்சியசாலைகளை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

## 1980

புதிதாக உருவாக்கப்படும் களஞ்சியங்கள் 13,000 மெட்ரிக் டொன் முதல் 16,000 மெட்ரிக் டொன் வரையான கொள்ளளவுடைய முழுமையாக செயற்பட்டது. முதன் முறையாக, கூட்டுத்தாபனத்தினால் விநியோக பொருட்கள் உற்பத்தி மற்றும் விநியோகம் ஆரம்பிக்கப்பட்டது.

## 1986

உர விநியோகம் மேலோங்குவதற்காக அரசினால் உர ஒருங்கிணைப்புக் குழு ஆரம்பிக்கப்பட்டது. இக்குழுவினால் விவசாய சமூகத்திற்காக உர பாவனை தொடர்பாக ஆரம்பக் கல்வி, பயிற்சி மற்றும் விழிப்புணர்வு வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டது.

**1988**

ஜெர்மனி அரசிடம் 22 மில்லியன் ரூபாய் பெற்றுக்கொண்டு ஹூனுபிட்டிய மத்தியக் களஞ்சியச்சாலையின் புணரமைப்பு நடவடிக்கைகள் பூரணப்படுத்தப்பட்டது. மணிக்கு 30 மெட்ரிக் டொன் கொள்ளளவுடைய புதிய கலவை இயந்திரமொன்று பொறுத்தப்பட்டது.

**1992**

அரசினால் இச்சொத்துக்களை நீக்குவதற்கு தீர்மானிக்கப் பட்டதுடன் இது கூட்டுத்தாபன வரலாற்றில் ஒரு தீர்க்கமான வருடமாக அமைந்தது. ஹூனுபிட்டிய களஞ்சியச்சாலை இலங்கை உரக் கூட்டுத்தாபனமாக மாற்றப்பட்டதுடன், களஞ்சியங்களில் புவியியல் விரிவாக்கத்தின் அடிப்படையில் வரையறுக்கப்பட்ட பொறுப்புக்களுடன் மேலும் ஐந்து நிறுவனங்கள் ஆரம்பிக்கப்பட்டது. பின் அவற்றில் மூன்று தனியார் துறைக்கு விற்கப்பட்டதுடன் தமன்கடுவ உர நிறுவனம் மற்றும் இலங்கை உரக் கூட்டுத்தாபனம் வேறு இரண்டு நிறுவனங்களாக தொடர்ந்து செயற்பட்டது.

**1994**

உர மானியம் சிறப்பாக செயல்படுவதற்கு பிரதான பொறுப்பு இலங்கை உரக்கம்பனிக்கு நியமிக்கப்பட்டது. யுத்தம் நடைபெற்ற இக்காலத்தில் கடும் சவால்களுக்கு மத்தியில் கடைகள் மற்றும் தொலைதூர கிராமப் புறங்களுக்கு உரம் வழங்குவதில் மிக அர்ப்பணிப்புடன் செயற்பட்டது.

**2002**

செத்தம் வீதியில் இலங்கை உரக் கம்பனியின் தலைமைக் காரியாலயம் ஹூனுபிட்டிய வளாகத்திற்கு கொண்டுவரப்பட்டது.

**2005**

அப்போதைய அரசாங்கத்தினால் வரலாற்றுமிக்க நெல் உர மானியமொன்று ஆரம்பிக்கப்பட்டது. விவசாயிகளின் 70%க்கு சலுகையை வழங்கி பைக்கு 350 ரூபா மாத்திரமான மானிய விலையுடன் 50 கி.கிராம் உரப் பையொன்று பெற்றுக்கொடுக்கும் பாரிய வேலைத்திட்டமொன்றை மேற்கொண்டது.

**2007**

நிகரச் சொத்துக்களின் பெறுமதியானது 330 மில்லியன் நட்டமுடன் கூடிய தொகையை கொண்டிருப்பதோடு நிறுவன நிதியியல் ரீதியாக அதிக ஆபத்தான நிலையில் காணப்பட்டது.

**2008**

அரச பிரதிநி நிறுவனங்கள் தனியார் மயமாக்க மாட்டாது என அரசு வழங்கிய உறுதியின் காணரமாக இலங்கை உரக் கம்பனி புதிய முகாமைத்துவ சபை ஒன்றை நியமித்ததுடன், 2007 ஆம் ஆண்டு 07 ஆம் இலக்க கம்பனி சட்டத்தின் கீழ் நிறுவனம் மீண்டும் பதிவு செய்யப்பட்டது.

**2010**

திறமையான முகாமைத்துவ தீர்மானத்தின் மூலம் செயற்படும் நிறுவனம் ஆபத்தான நிலையிலிருந்து விலக ஆரம்பித்தது. அந்நிறுவனம் முழுமையாக மாற்றமடைவதன் தேவை நிறுவனத்தினால் 2013 ஆம் ஆண்டில் 1606 மில்லியன் ரூபாய் நிகரச் சொத்துப் பெறுமதி தனதாக்கிக் கொள்வதோடு இலாபமாக 99 மில்லியன் ரூபாய் திறைசேரிக்கு கிடைக்கப் பெற்றது.

**2013**

உயர் தரத்திலான 52 உரக் களஞ்சியச் சாலைகள் அமைக்கப்பட்டதுடன், அந்நிறுவன GPS தொழிநுட்பத்துடன் போக்குவரத்து வலைப்பின்ன ஒன்று அமைக்கப்பட்டது





# கூட்டாண்மை தகவல்

**நிறுவன பெயர்**

வரையறுக்கப்பட்ட இலங்கை உரக்கம்பனி

**நிறுவன பதிவு இலக்கம்**

PB 499

**சட்ட இயல்பு**

இலங்கையின் திறைசேரி செயலாளரின் பூரண உரித்துடைய வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் ஒருங்கிணைக்கப்பட்ட நிறுவனமாகும்.

**அலுவலக பதிவு மற்றும் முகவரி**

வரையறுக்கப்பட்ட இலங்கை உரக்கம்பனி
லக்பொஹொர சுவர்ண ஜெயந்தி மாவத்தை,
உனுப்பிட்டிய, வத்தளை, இலங்கை.
தொலைபேசி : 011 2 930 298 / 99
தொலைநகல் : 011 2 947 763
மின்னஞ்சல் : lakpohora@sltnet.lk
இணையதளம் : www.lakpohora.lk

# பணிப்பாளர்கள் சபை

### தலைவர்

**திரு. ரோஷன வடுகே**
(19.02.2015 - 31.03.2017)

### செயற்பாட்டு பணிப்பாளர்

**திரு. மாதவ வத்தேகம**
(19.02.2015 – 31.03.2017)

**திரு. சந்தன பெல்பிட்ட**
(01.04.2016 – 31.12.2016)

### பணிப்பாளர்கள்

**திருமதி. ஜே.எம்.எஸ்.டி. ரத்னாயக்க**
(மேலதிக பணிப்பாளர் நாயகம்)
தேசிய கொள்கை
திட்டமிடல் திணைக்களம்
(10.03.2015 – 31.03.2017)

**திருமதி. அனோஜா ஹேரத**
அபிவிருத்திப் பணிப்பாளர்
விவசாய அமைச்சு
(25.02.2015 – 31.03.2017)

**திரு. ஹேமக்க லசித்த பாலசூரிய**
(19.02.2015 – 31.03.2017)

**திரு. உபுல் பீரிஸ்**
(19.02.2015 – 31.03.2017)

### நிறுவன செயலார்

**எஸ் & ஏ. கன்சல்டன்ட் பிரைவட் லிமிடட்**

# சிரேஷ்ட முகாமைத்துவ குழு

**திரு. பி.ஆர். சமரவீர**
பொது முகாமையாளர் (பதில்)
முகாமையாளர் (நிதியியல்)

**திரு. பி.டி.எல். குமாரசிறி**
சிரேஷ்ட உள்ளக கணக்காளர்

**பொ. டி.எம்.என்.எ. திஸ்ஸாநாயக்க**
முகாமையாளர் (தொழில்நுட்பம்)

**திரு. ஆர்.எ.பி. பெரேரா**
முகாமையாளர் (விநியோகம்)

**திருமதி. ஆர்.பி.எஸ். போதிபால**
முகாமையாளர் (விற்பனை மற்றும்
சந்தைப்படுத்தல்)

**திருமதி. யூ. பெரேரா**
முகாமையாளர்
(ஆய்வுகூடம்)

**திரு. எம்.பி.பி. புலத்சிங்கஹல**
முகாமையாளர் (பதில்)
(நிர்வாகம் மற்றும் மனிதவள)

**திரு. ஜி.ஜி. சமன்**
முகாமையாளர் (பதில்)
(கொள்முதல் மற்றும் இறக்குமதி)

# தேயிலை



## தேயிலை பயிர்ச்செய்கைக்கு

டீ. -65, டீ-200, டீ-750, யூ.டீ. -1625. யூ-397,
யூடீ. -752, வீ.பீ.எல்.சீ. -880, வீ.பீ.எல்.சீ. -945 வீ.பீ.யூ.எம்-910,
யூ-625. எஸ்டீ/யூஎம்-400, எஸ்.டீ.யூ.வீ.ஏ-435. யூ-709

## குறிக்கோள்

உயர்ந்த சர்வதேச தரத்திற்கிணங்க உற்பத்தி செய்யப்பட்ட இரசாயன மற்றும் இயற்கை உரம் இலங்கையின் கைத்தொழில் சமூகத்திற்கு வழங்குதல்.

## இலக்கு

பல்வகைப்பட்ட விவசாய சேவைகளை வழங்குனர் என்ற வகையில் உன்னத நிலையில் இருத்தல் மற்றும் அரசதுறை நிறுவனங்களுக்கு ஒரு முன்மாதிரி நிறுவனமாக இருத்தல்.

## நோக்கு

அரசாங்கத்தின் கொள்கைகளுக்கு அமைவாக 'லக்பொஹொர' குடும்பத்தின் உச்ச பங்களிப்புடன் இலங்கையின் விவசாய மற்றும் கமநல சேவைத்துறையில் உற்பத்தி, வருமானம் மற்றும் உற்பத்தி திறன் ஆகியவற்றினை அதிகரிப்பதற்காக பல்வகை சந்தைக் கேள்விகளுக்கும் ஏற்ற விதத்தில் உர உற்பத்தி மற்றும் விற்பனையின் ஊடாக கம்பனி இலாபகரமாக நிலைத்து நிற்பதனை உறுதி செய்தல்.

## மதிப்புகள்

சுற்றுச்சுழல் நிலைத்தன்மையை பராமரித்தல் மற்றும் அடிமட்டத்தில் விவசாயிகளுடன் தொடர்பாக செயற்படுதல் எமது அடிப்படை மதிப்புகளாவதால், எம்மால் எமது எதிர்கால உற்பத்தி தொடர் அதனூடாகவே கட்டியெழுப்பப்பட்டது.



# இயற்கையினால் முன்னோக்கிச் செல்லும் உலகம்...

உலக மற்றும் உள்ளூர் போக்குகளில் சந்தை யதார்த்தங்களை புரிந்து கொண்டு, 2016 ஆம் ஆண்டு 2வது காலாண்டு இறுதியில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு இயற்கை உர பகிர்ந்தளிப்பவர்களின் ஒத்துழைப்புடன் இயற்கை விவசாய உரம், வணிக ரீதியாக உற்பத்தி செய்வதற்கு கம்பனியினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தொழிற்துறை சகாப்தத்தின் தேவைகளுக்கேற்ப இயற்கை வளங்களை பாதுகாத்தல் மற்றும் புதுப்பித்தல் சம்பந்தமாக கவனம் செலுத்தாமை அர்த்தமின்றி பாவிப்பதனால் உலகின் இயற்கை வளங்கள் விரைவாக அழிந்து செல்வதோடு அனைத்தும் இதுவரையில் உலகம் நான்கு நெறுக்கடிகளுக்கு முகம் கொடுத்துள்ளது. அவை காநிலை நெருக்கடி, உணவு நெருக்கடி, வலுசக்தி நெருக்கடி மற்றும் நிதி நெருக்கடி போன்றனவாகும். நாம் அறிந்த வகையில் இவற்றில் ஒன்றிலாவது மனித நாகரீகம் அழிந்து செல்வதோடு, இவை ஒன்றிணையும் பட்சத்தில் தீர்வு காணமுடியாத கடினமான சவாலாக அமையும்.
எவ்வாறிருப்பினும், ஐக்கிய இராஜ்ஜியம் போன்ற பொது ஒன்றிணைப்பின் கீழ் இணைந்துள்ள உலகின் பல்வேறு நாடுகளின் தலைவர்கள் இவ்வனைத்து சவால்களை வெற்றிகொள்வதற்கு நிலையான அபிவிருத்தி இலக்காக காணப்படும் 17 இலக்குகள் நிரந்தரமாக நிறுவப்பட்டுள்ளது. எமது ஜனாதிபதி அவர்கள் இலங்கைக்காக இவ்விலக்குகளுக்காக அர்ப்பணிப்பு தொடர்பாக செயற்பாடு இவ்விலக்குகளின்படி தயாரித்து நாட்டை ஆள்வதற்கு அவரை தெரிவுசெய்து கொள்வதற்கு அடிப்படையாக அமைந்த கொள்கை அறிக்கைக்கு இணையாக அவர் நேரடியாக செயல்படுவார்.

இலங்கை உரக் கம்பனியால் 2வது இலக்கு (பட்டினியைப் இல்லாதொழித்தல்), 3 வது இலக்கு (நல்ல ஆரோக்கியம்) 12 வது இலக்கு (நிரந்தரப் பாவனை மற்றும் உற்பத்தி), 13 வது இலக்கு (காலநிலை நடவடிக்கைகள்) மற்றும் 15 வது இலக்கு (பூமியின் வாழ்க்கை) போன்ற மிகவும் சிறப்பம்சமாக



கவனத்திற் கொள்வதில் அவ்வியாபார படிவத்திற்கு மற்றும் செயல்பாட்டு முறைகளுக்கு அவை நேரடியாக பாதிப்பதனாலாகும். அது இலங்கையில் பாரிய கைத்தொழில் சமூகத்திற்கு இயற்கை உற்பத்தி வழங்குவதன்படி அடிப்படை பசுமை உர யுகமொன்றை நோக்கி தன் அவதானத்தை செலுத்துவதற்கு இந்நிறுவனம் எடுத்த தீர்மானத்தில் பாதிக்கப்பட்ட முக்கிய காரணியாக இருந்தது.

இயற்கை கைத்தொழில் துறையானது மண்ணின் ஆராக்கியத்தை பராமரித்து, சுற்றுச்சூழல் அமைப்புகளை சீரமைப்பதோடு மக்களுக்கு வாழ்க்கை நிலைமைகளை உறுதிப்படுத்தும் உற்பத்தி முறையாகும். பாதகமான விளைவுகள் என கருதப்படும் பொருள் பாவனைக்கு பதிலாக பிராந்திய நிலைமைகளினுள் சுற்றுச்சூழல் நடவடிக்கைகள், பல்லுயிரினங்கள் மற்றும் இயற்கை சுழற்சிகளை அமைத்தல் போன்றறை இங்கு கவனத்திற் கொள்ளப்படும். இயற்கை கைத்தொழிலில் எமது பொது சுற்றுச்சூழலில் அல்லது பொது நிலைமைகளில் நல்வாழ்வுக்காக பாரம்பரியம், கண்டுபிடிப்புகள் மற்றும் விஞ்ஞானத்தை பயன்படுத்தும்போது, தேவை-வழங்கல் வலைப்பின்னல் மற்றும் சம்பந்தமான அனைவருக்கிடையில் சாதாரணமான தொடர்புகள் காணப்படும்.

அதிமேதகு ஜனாதிபதி அவர்கள் சர்வதேச சமூகத்திற்கு வழங்கிய உறுதிமொழிக்கு இணங்க அரசினால் தேசிய உணவு உற்பத்தி வேலைத்திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்துவதற்கு ‘நச்சுத்தன்மையற்ற தேசியத் திட்டம்’ என்ற பெயரில் தேசிய மட்டத்தில் கைத்தொழில் கொள்கையொன்று உருவாக்கப்பட்டது. இதில் ஒரு நோக்கமாக நாடு முழுவதும் விவசாய சமூகத்தில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ள சிறுநீரக நோயுடன் தொற்றா நோய்கள் பல உருவாகியிருக்கும் போக்கை குறைப்பதற்காக செயற்கை உரம், பூச்சிக்கொல்லிகள் பாவனையை குறைத்தல். அவற்றினால் இலங்கை சந்தைக்கு இரசாயன உரம் வழங்குவதை குறைக்கப்பட்டிருப்தோடு, உள்நாட்டு சந்தைக்காக இயற்கை உர உற்பத்தியை மேம்படுத்துவதற்கு ஊக்கப்படுத்துவதனால் இயற்கை கைத்தொழில் போன்ற குறைந்த பாதகமான விளைவுகளைக் கொண்ட விவசாய நடைமுறைகளை ஊக்குவித்தல்.

சந்தை யதார்த்தமானது உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு போக்குகளை அறிந்துகொண்டு நிறுவனத்தினால் 2016 இல் இரண்டாவது காலிறுதியில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு இயற்கை உரம் வழங்குவோரின் ஒத்துழைப்புடன் கூடிய இயற்கை விவசாய உரம் வர்த்தக ரீதியாக உற்பத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. உர வியாபாரத் துறையில் தனது எதிர்காலம் தங்கியிருப்பது இவ்வாறான மாற்று வழியை கையாழ்வதால் என புரிந்துகொண்டிருக்கும் சமூகம் இயற்கை உரத் துறையில் தலைவருக்கும் மேலான தலைவராக முன்னணியாக திகழ்வதற்கு திட்ட நடவடிக்கைகள் முதல் விநியோகம் மற்றும் விவசாயிகளுக்கு விழிப்புணர்வூட்டல் வரையிலான பரந்த வேலைத்திட்டங்கள் பல நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.




# ஏனைய பயிரச் செய்கைகளுக்கு

காய்கறிகள், பழங்கள், உருளைக்கிழக்கு, மிளகாய், காராமணி,
நிலக்கடலை, பச்சை பருப்பு, சோளம், கரும்பு மற்றும் பல பயிர்களுக்காக
விசேடமாக கலவை செய்யப்பட்ட உரவகைகள் உள்ளன.

# நிதி ரீதியிலான முக்கிய கட்டங்கள்




| வருமானத்தின் முக்கிய கட்டங்கள் மற்றும் விகிதங்கள் | | 2017 | 2016 | மாற்றம் |
|---|---|---|---|---|
| | | Rs. | Rs. | % |
| வருமானம் | ரூபா | 2,350,637,985 | 4,242,769,733 | -45% |
| வரிக்கு முன் இலாபம் | ரூபா | 127,804,541 | 836,604,005 | -85% |
| வருமான வரி செலவுகள் | ரூபா | 11,787,491 | 233,331,176 | -95% |
| ஆண்டுக்கான வரிக்கு பின் இலாபம் | ரூபா | 139,592,032 | 603,272,829 | -77% |
| பங்கிலாபங்கள் | ரூபா | 30,000,000 | 30,000,000 | - |
| ஒரு பங்கிற்கான சம்பாத்தியம் | ரூபா | 2.78 | 12.01 | -77% |
| சொத்துக்கள் மீதான இலாபம் | ரூபா | 0.39% | 1.65% | - |
| உரிமையாண்மை மீதான இலாபம் | ரூபா | 2.54% | 12.76% | - |
| | | | | |
| **நிதி நிலைமையின் முக்கிய கட்டங்கள் மற்றும் விகிதங்கள்** | | | | |
| மொத்த சொத்துகள் | ரூபா | 35,608,679,679 | 36,603,359,337 | -3% |
| மொத்த உரிமையாண்மை | ரூபா | 5,504,165,203 | 4,728,367,363 | 16% |
| வெளியிடப்பட்ட பங்குகளின் எண்ணிக்கை | இல. | 50,245,608 | 50,245,608 | - |
| ஒரு பங்கிற்கான தேறிய சொத்து | ரூபா | 110 | 94 | 17% |

# கடந்த 10 வருடங்களின் நிதி பற்றிய முக்கிய கட்டங்கள்

| | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | இ.க.அ. | இ.க.அ. | இ.க.அ. | இ.நி.அ. | இ.நி.அ. | இ.நி.அ. | இ.நி.அ. | இ.நி.அ. | இ.நி.அ. | இ.நி.அ. |
| | (7 மாதங்களுக்கு) | (7 மாதங்களுக்கு) | | | | | | | | |
| **விரிவான வருமானக்கூற்று** | | | | | | | | | | |
| வருமானம் | 900,461,713 | 1,370,080,315 | 1,904,299,851 | 2,246,402,738 | 2,496,268,383 | 2,450,132,816 | 2,563,549,727 | 3,835,989,834 | 4,242,769,733 | 2,350,637,985 |
| மொத்த இலாபம் | 204,414,682 | 221,286,371 | 322,826,103 | 414,124,001 | 310,189,751 | 621,684,097 | 575,467,461 | 855,558,167 | 1,097,447,923 | 231,025,777 |
| ஏனைய வருமானங்கள் | 76,899,044 | 130,892,642 | 132,287,779 | 157,164,017 | 197,912,757 | 108,809,998 | 93,172,755 | 142,197,667 | 122,926,594 | 29,096,825 |
| வரிக்கு முன் இலாபம் | 26,957,610 | 35,088,271 | 42,411,705 | 73,979,009 | 159,544,495 | 199,894,319 | 241,328,764 | 520,200,738 | 836,604,005 | 127,804,541 |
| வரி | (19,766,392) | (25,092,763) | (35,000,000) | (43,666,668) | (52,315,944) | (73,037,738) | (62,869,312) | 134,184,888 | (233,331,176) | 11,787,491 |
| வரிக்கு பின் இலாபம் | 7,191,217 | 9,995,508 | 7,411,705 | 30,312,341 | 107,228,551 | 126,856,581 | 178,459,452 | 386,015,851 | 603,272,829 | 139,592,032 |
| **நிதி நிலைமை பற்றிய கூற்று** | | | | | | | | | | |
| குறிப்பிடப்பட்ட மூலதனம் | 444,456,080 | 502,456,080 | 502,456,080 | 502,456,080 | 502,456,080 | 502,456,080 | 502,456,080 | 502,456,080 | 502,456,080 | 502,456,080 |
| மீள் மதிப்பீட்டு ஒதுக்கம் | 1,616,307,519 | 1,616,307,519 | 1,986,087,280 | 1,986,087,280 | 1,836,179,780 | 1,835,723,580 | 1,835,723,580 | 1,833,071,080 | 1,833,071,080 | 2,506,976,187 |
| வருமான ஒதுக்கங்கள் | 191,389,499 | 201,385,007 | 208,796,713 | 224,109,054 | 1,285,578,730 | 1,397,891,510 | 1,500,363,432 | 1,869,914,195 | 2,392,840,203 | 2,494,732,936 |
| மொத்த உரிமையாண்மை | 2,252,153,098 | 2,320,148,607 | 2,697,340,072 | 2,712,652,414 | 3,624,214,590 | 3,736,071,170 | 3,838,543,092 | 4,205,441,355 | 4,728,367,363 | 5,504,165,203 |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் | 1,642,814,214 | 1,686,442,553 | 1,902,075,430 | 1,895,412,152 | 1,908,557,760 | 1,882,887,059 | 1,879,174,306 | 1,865,055,225 | 1,838,655,988 | 2,683,237,393 |
| மூலதன தெரிப்பாட்டு வளர்ச்சி | 17,895,434 | 20,024,735 | 15,934,103 | 542,901 | - | - | - | 29,982,587 | 32,152,294 | 21,960,737 |
| தாமதப்படுத்தப்பட்ட வரிச் செலவுகள் | - | - | - | - | 4,862,949 | 73,037,738 | 5,561,375 | 37,484,888 | - | - |
| திறைசேரி உண்டியலகளில் முதலீடு | 146,109,366 | 172,614,796 | 332,205,456 | 434,767,955 | 471,025,753 | 338,620,163 | 471,894,936 | 489,125,747 | 514,903,604 | 532,548,539 |
| தொட்டு உணர முடியாத சொத்துக்கள் | - | - | - | - | - | 669,017 | 344,717 | 115,417 | 79,667 | - |
| பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் | - | - | - | 76,814,523 | 71,951,574 | - | - | - | - | - |
| தேறிய நடைமுறைச் சொத்து | 592,829,041 | 610,949,150 | 12,476,640,540 | 6,975,143,544 | 1,706,541,296 | 1,915,693,141 | 2,025,842,182 | 2,417,551,302 | 2,963,028,124 | 3,020,938,645 |
| தாமதப்படுத்தப்பட்ட வரி பொறுப்புகள் | - | - | - | - | - | 1,086,164 | 6,647,539 | 44,132,427 | 40,928,542 | 155,078,112 |
| குறுகிய/ நீண்டகால கடன்கள் | - | - | 11,837,929,928 | 5,369,929,928 | - | - | 17,728,367,618 | 31,304,325,268 | | - |
| **காசுப் பாய்ச்சல் கூற்றுக்கள்** | | | | | | | | | | |
| தொழி.நட.இரு. தேறிய காசு உட்/வெளிப்பாய்ச்சல் | (9,812,750,171) | (23,925,719) | (12,169,047,254) | (16,012,155,140) | 12,695,227,509 | (9,517,159,808) | (5,094,105,859) | (9,560,794,959) | (738,963,570) | 11,542,320 |
| முதலீ. நட.இரு. தேறிய காசு உட்/வெளிப்பாய்ச்சல் | 9,796,712,574 | (85,865,511) | 12,216,587,459 | (36,565,665) | (8,458,411) | 83,232,936 | (508,688,188) | (1,021,212,231) | (1,086,700,012) | (591,862,107) |
| நிதி சம. நட.இரு. தேறிய காசு உட்/வெளிப்பாய்ச்சல் | (19,176,247) | 46,739,763 | (159,725,222) | 16,168,483,382 | (13,079,312,780) | 9,575,483,282 | 5,654,013,585 | 10,614,850,014 | (3,843,885,272) | 834,304,831 |
| **ஏனைய தகவல்கள்** | | | | | | | | | | |
| ஒரு பங்கிற்கான சம்பாத்தியம் ரூபா | 0.16 | 0.22 | 0.17 | 0.60 | 2.13 | 2.52 | 3.55 | 7.68 | 12.01 | 2.78 |
| ஒரு பங்கிற்கான பங்கிலாபம் ரூபா | - | 0.06 | 0.06 | 0.18 | 0.18 | 0.76 | 1.05 | 2.3 | 3.60 | 0.83 |
| ஒரு பங்கிற்கான தேறிய சொத்து ரூபா | 51 | 46 | 54 | 54 | 72 | 74 | 76.4 | 83.7 | 94 | 110 |
| நடை மறை விகிதம் (நேரங்களின் எண்ணிக்கை) | 1.07 | 1.04 | 2.09 | 1.29 | 1.08 | 1.08 | 1.06 | 1.06 | 1.09 | 1.10 |




# தென்னைக்காக

வய்.பீ.எம். (டப்ளியூ)/ (டி), ஏ.பீ.எம்.
(டப்ளியூ)/ (டி), சீவல். (டப்ளியூ)/ (டி)



நீண்ட கால நிறுவன நிலையானத்தன்மையை நோக்கி அடிப்படைச் செயல்திறன் மற்றும் இலக்கை அடையாளம் காண்பது முக்கியமானதென கம்பனி நம்புகின்றது. வரையறுக்கப்பட்ட இலங்கை உரக் கம்பனியின் இலக்கானது அரச கொள்கைக்கு இணங்குவதோடு விவசாய சமூகத்தின் தேவையை நிறைவேற்றுவதாகும். இந்நாடு கைத்தொழில் துறையை பலப்படுத்துவதற்காக பரந்த அரச பரிந்துரைகள் மற்றும் வேலைத்திட்டங்களுடன் வலுவாக கட்டப்பட்ட 2017 ஆண்டின் நடவடிக்கைகளின் மூலம் கம்பனி சிறப்பான திருப்புமுனைக்கு நெருங்கியுள்ளது தெரியவருகிறது. இங்கிருந்து, கம்பனியின் நிலைத்தன்மை மற்றும் அதன் பிரதான மூலோபாயங்கள் மற்றும் தற்செயல் மற்றும் இணையான வழிமுறைகள் மூலம் எதிர்கால அபிவிருத்தி மூலோபாயங்களுக்காக கம்பனிக்கு பங்களிப்பளிக்கக்கூடிய முறைமை தொடர்பாக தெளிவுத்தன்மை ஏற்படுத்திக்கொள்வது அவசியமாகும்.

ஏனைய நாடுகளில் கைத்தொழிலில் முகம்கொடுக்கும் சவால்கள் மற்றும் பிரச்சினைகள் கருத்திற் கொள்ளும் போது இலங்கையின் விவசாயத் துறையில் சிறந்து விளங்கும் ஊக்குவிப்பை கைப்பற்றிக்கொண்டு நாட்டில் சிறந்த பொருளாதார அபிவிருத்தியொன்றை ஏற்படுத்திய முயற்சிக்கு மத்தியல் ஒரு முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது.

நாடு முழுவதும் பரவியுள்ள விநியோக வலையத்தின் மூலம் தேசத்தின் வெற்றி மற்றும் தொடர்ச்சியாக உரம் வழங்குவதற்கு கம்பனிக்குள் திறமை வரையறுக்கப்பட்ட இலங்கை உரக் கம்பயின் பொருளாதார வளர்ச்சிக்கு மற்றும் வெற்றிக்கு பாரிய பங்களிப்பை வழங்கியுள்ளதை நான் அறிவேன். இலங்கை உரக்கம்பனியில் எமது கடின உழைப்புடன் செயல்படுவதோடு எதிர்பார்க்கும் இலக்கை அடைவதோடு நாடு முழுவதும் பரவியுள்ள எமது விநியோக வலையமைப்பின் மூலம் தேசத்தின் வெற்றி மற்றும் தொடர்ச்சியாக உர பகிர்ந்தளித்து கம்பனியை முன்னோக்கிக் கொண்டு செல்லவும், அதன் பொருளாதார வளர்ச்சி மற்றும் மேம்பாட்டை வழங்கவும் சிறந்து விளங்கிறது. எமது குழுவில் அங்கத்தவர்களின் சிறந்த சேவை, அர்ப்பணிப்பு மற்றும் ஆர்வத்தை விசேடமாக மதிப்பளிப்பதற்கு அவர்களின் பாரிய பங்களிப்பு எமது இலக்கை அடைவதற்கான மிக முக்கிய காரணியாகும்.

இந்நிறுவனத்தின் நோக்கங்களை அடைவதற்காக ஆசீர்வாதம் மற்றும் ஆலோசனை பெற்றுக்கொடுத்தல் தொடர்பாக அதிமேதகு ஜனாதிபதி மைத்ரீபால சிரிசேன அவர்களுக்கும், மிகப்பெரிய அனுசரணையை வழங்கிய கௌரவ கைத்தொழில் அமைச்சர் துமிந்த திசாநாயக்க அவர்களுக்கும், நிரந்தர உதவியாக இருந்த அமைச்சின் செயலாளர் உட்பட அமைச்சின் பிரதான அதிகாரிகளுக்கும் எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கின்றேன்.

# தலைவரின் செய்தி

கம்பனியினால் இலங்கை முழுவதும் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் 1,750 வலையமைப்புகளை நிருவப்பட்டிருப்பதோடு, வாடிக்கையாளர்களுடன் நேரடியாக தொடர்பு கொள்வதால் கம்பனிக்கு உள்ள திறன் அதிகரிக்கும் 40 பிராந்திய உர பண்டகசாலைகளினால் கம்பனி தனது உற்பத்தியை விநியோகிக்கின்றது.

கடந்த 2017 மார்ச் 31 ஆம் திகதியில் முடிவடைந்த நிதி ஆண்டுக்காக எம்மால் அரசுக்கு செலுத்தப்படும் மொத்த வரி பெறுமதி 11 மில்லியன் ரூபாவாகும். ஒன்றிணைந்த அரச நிதியிலிருந்து எவ்வித நிதி அனுசரணையுமின்றி இலாபத்தில் செயல்பாட்டு நடவடிக்கைகளை கம்பனி மேற்கொண்டுள்ளது.

கம்பனியினால் இலங்கை முழுவதும் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் 1,750 வலையமைப்புகளை நிருவப்பட்டிருப்பதோடு, வாடிக்கையாளர்களுடன் நேரடியாக தொடர்பு கொள்வதால் கம்பனிக்கு உள்ள திறன் அதிகரிக்கும் 40 பிராந்திய உர பண்டகசாலைகளினால் கம்பனி தனது உற்பத்தியை விநியோகிக்கின்றது.

குறுகிய மற்றும் நீண்ட கால மூலோபாய இலக்கை அடைவதற்கு விநியோகப் படை மிகவும் பயனுள்ள முறையில் முகாமைத்துவப்படுத்துவதோடு அனைத்து ஊழியர்களுக்கும் திறமைகள் மற்றும் தகைமைகளின் அடிப்படையில் பதவி உயர்வு வாய்ப்புகள் பெற்றுக்கொள்ளும் திறன் திட்டமிட்டப்படி முகாமைத்துவ சேவைப் பரிவினால் அனுமதிக்கப்பட்டு ஊழியர்களை நியமித்தல் மற்றும் ஊக்குவிப்பு நடவடிக்கைகளின் கீழ் மேற்கொள்ளும் நியமனம் தரப்படுத்தப்பட்டுள்ளது.

உள்ளக காரியாலய நடவடிக்கையில் செயல்திறன் அதிகபட்சமாக கொண்டு செல்வதற்காக முகாமைத்துவ தகவல் அமைப்பு உயர் நிலையில் செயற்பாடு சிறந்த செயல்திறன் மிக்க தகவல்களை வழங்கும் தொழிநுட்பம் கம்பனியினால் நடைமுறைப்படுத்திச் செல்வதோடு புதிய மென்பொருள் பயன்பாடு தொடர்பாக விழிப்புணர்வூட்டுவதற்காக தொடர்ச்சியான பயிற்சி வேலைத்திட்டங்கள் நடாத்தப்படும்.

இலங்கை உரக் கம்பனி எப்போதும் சமூகத்திற்காக தமது பங்களிப்பை வழங்கும் சமூக பொறுப்பொன்றாக கருதுகின்றது. நீண்ட கால நிறுவன நிலைத்தன்மைக்காக அடிப்படை நடவடிக்கைகள் மன்றும் எதிர்கால இலக்கை அடையாளம் காண்பது முக்கியமென்பதை நிறுவனம் நம்புகின்றது. அதற்காக நீண்ட மற்றும் குறுகிய கால மூலோபாயங்களை இணங்கண்டு மற்றும் அவற்றில் ஈடுபட்டு மூலோபாய வழி வரைபடமொன்றை தயாரிக்கும் செயற்பாட்டில் கம்பனி தற்போது ஈடுபட்டுள்ளது.



**ரோஷன வடுகே**
தலைவர்



இன்னுமொரு வெற்றிகரமான நிதியியல் வருடம் நிறைவுக்கு வருகின்ற நிலையில் ஆய்வுசெய்யப்பட்ட எமது நிதியியல் அறிக்கை மற்றும் 2014/15 இற்கான வருடாந்த நிதியறிக்கையை சமர்ப்பித்து எமது வாடிக்கையாளர்கள் உட்பட உங்கள் அனைவரையும் இவ்வுரையின் ஊடாக சந்திப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

உற்பத்தியில் சிறந்து விளங்கும் வீழ்ச்சி மற்றும் மொத்த தேசிய உற்பத்தியில் விவசாயப் பிரிவில் வழங்கும் பங்களிப்பில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சி, தேவைக்கேற்ப வெள்ளப்பெருக்கு மற்றும் வரட்சியினால் விவசாய நடவடிக்கைகளுக்கு பாதகமான பாதிப்பை ஏற்படுத்திய பின்னணியில் இவ்வாண்டு கைத்தொழில் துறைக்கு ஒரு கடினமான காலமாகும்.

எவ்வாறாயினும், விவசாய இரசாயனப் பொருட்கள் மீது சார்ந்திருப்பதை குறைத்து, இலங்கை நிலையான அபிவிருத்திப் பாதையை நோக்கி கொண்டு செல்வதோடு முழு மனதுடன் நிலையான நடைமுறை விவசாயத்தில் உள்ள நாடுகளில் ஒன்றாக உலகிற்கு முன்னுதாரணமாக அமைவதற்கு அரச கொள்கைக்கு இணங்குவதோடு இவ்வாண்டில் தமது உற்பத்தியை மேலும் பரவலாக்குவதற்கும் கம்பனியினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

உள்நாட்டு சந்தைக்காக இயற்கைக் கட்டி உரம் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்ட முதல் அரச நிறுவனமான இலங்கை உரக் கம்பனி என நான் பெருமையோடு குறிப்பிடுகின்றேன். இந்நியாண்டில், தமது விநியோக வலைப்பின்னலிலும் விவசாயிகளிடத்திலும் சிந்தனை முறையை மாற்றுவதற்கு மேற்கொள்ளும் முயச்சிகளில் செயற்கை உர பயன்பாட்டிற்கு ஒத்த இயற்கை உரப் பயன்பாட்டில் உள்ள நன்மைகள் தொடர்பாக விவசாயிகளுக்கிடையில் காணப்படும் விழிப்புணர்வு மேலோங்குவதற்கு பெரிய அளவிலான உலகலாவியத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதோடு அதனூடாக எமது அடிப்படை இலக்கான விவசாய சமூகத்தினால் சாதகமான அணுகுமுறையொன்று உருவாக்குவதன் மூலம் விநியோக திறன் மேலோங்கிக் காணப்பட்டது.

இலங்கையில் விவசாய இரசாயன பயன்பாட்டை குறைத்து 2020 ஆம் ஆண்டில் எமது கைத்தொழில் துறை உற்பத்தி தொடர்பாக முழுமையாக இயற்கை உர பின்னணியை நோக்கி கொண்டு செல்லும் நோக்கில் ஒரு சிறந்த உலகமொன்றிற்காக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ரீதியாக காணப்படும் பங்களிப்புகளுக்காக நாம் அவ்வாரே அர்ப்பணித்துள்ளோம். அந்நோக்கத்தை அடைவதற்காக உறுதியாக மெ் மேலும்

உள்நாட்டு சந்தைக்காக இயற்கைக் கட்டி உரம் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்ட முதல் அரச நிறுவனமான இலங்கை உரக் கம்பனி என நான் பெருமையோடு குறிப்பிடுகின்றேன்.

# பொது முகாமையாளரின் அறிக்கை

பரவலாக்கப்படும் தினம் மற்றும் திரவ முறையிலான இயற்கை உர உற்பத்திகள் பல எதிர்காலத்தில் சமர்ப்பிப்பதற்கு கம்பனி மூலோபாய ரீதியாக திட்டமிட்டுள்ளது.

அற்புதமான நன்மைகளைப் பெற்றுக்கொள்வதற்காக பண்டைய பாரம்பரிய முறைகள் மீண்டும் உருவாக்குவதில் உள்நாட்டு கைத்தொழில் துறையில் மாற்றத்தை ஏற்படுத்திக்கொள்வதற்கான தொலைதூர நோக்குடன் இலங்கை முழுவதும் இயற்கை உர எண்ணக்கருவை ஊக்குவிப்பதற்காக மூலோபாயத் திட்டங்கள் பல வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தியது. தன்னைச் சுற்றியுள்ள இயற்கை உர உலக அன்றாக வாழ்க்கையின் ஓர் அங்கமாக கருதப்பட்ட உள்நாட்டு விவசாயிகளுக்கு இயற்கை உர பயன்பாடு தொடர்பாக எண்ணக்கருவான விருந்தோம்பல்கள் இல்லை. இந்நாடு பண்டைய வரலாற்றில் கூட இயற்கை வளங்கள் இலங்கை கைத்தொழில் துறையில் முக்கிய பொறுப்பொன்றை நிறைவேற்றியுள்ளது. தமது பயிர்செய்கைக்காக இயற்கை கரிம பொருட்களை பயன்படுத்திய எமது பாட்டன்மார் நெல், பழவகை மற்றும் மரக்கறி, தேயிலை, இறப்பர், தென்னை, பட்டை மற்றும் கிராம்பு பயிர்வகைகளில் எதிர்பார்க்க முடியாத அலவில் அறுவடையை பெற்றுக்கொண்டு உலகையே ஆச்சர்யமூட்டியிருப்பது குறிப்பிடத்தக்கது.

பண்டைய காலங்களில் இலங்கையில் மேலதிக விவசாய விளைச்சல்கள் உற்பத்தி செய்யப்பட்டதாகவும், அவற்றை உலகம் முழுவதும் பல்வேறு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளதாகவும் பதிவாகியுள்ளது. இவ்வனைத்து அற்புதங்களுக்கு பின்னால் எமது முப்பாட்டன்களின் பல்வேறு நன்மைகளைப் பெற்றுத் தந்து மற்றும் அவர்களின் சக வழ்க்கையினாலும், மிக நெருக்கமாகும் நட்பொன்றை ஏற்படுத்திவந்த இயற்கைச் சூழலில் பெற்றுக்கொண்ட இயற்கை உரமாகும். நிச்சயமாக எமக்கு இறந்தகாலத்தில் பல்வேறு விடங்கள் கற்றுக்கொண்டு, கைத்தொழில் நடவடிக்கைகளுக்காக இயற்கை உரத்தின் பயன்பாடு தொடர்பாக மேலும் முறையான மற்றும் அபிவிருத்தியுடனான முறைகள் உருவாக்கிக்கொள்ள முடியும் என்ற எண்ணத்தில் நாம் நாடு முழுவதும் விவசாயிகள் மற்றும் தோட்டத் தொழிலாளர்களுக்கு இடையில் இயற்கை உரம் ஊக்குவிப்பதற்கு புதிய செயற்திட்டங்கள் திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தியுள்ளோம்.

கடந்த பல்லாண்டு காலமாக சிறந்த தகுதிவாய்ந்த தொழில் வல்லுநர்களின் ஒத்துழைப்புடன் இயற்கை உரம் தொடர்பாக கற்றுக்கொள்வதற்கு பல்வேறு கற்றல்கள் மற்றும் ஆராய்ச்சிகள் மேற்கொண்ட எமது புரிந்துணர்வின் படி இயற்கை உரத்தில்

அடங்கியிருக்கும் புதிய மற்றும் உலர் தாவர பொருட்கள் முதல் விலங்குகளின் எச்சம் மற்றும் கழிவுகளுடன் கைத்தொழில் நடவடிக்கையில் ஒதுக்கப்படும் பொருட்கள் போன்ற பல்வேறு தாவரவகை பொருட்களினாலாகும்.

இயற்கை உரங்களில் ஊட்டச்சத்துக்கள் ஒவ்வொரு விதிகளின் படி பாரிய அளவில் மாற்றமடைவதோடு இலகுவில் மக்கும் பொருட்களில் அதிக ஊட்டச்சத்துக்கள் விதிகள் உள்ளது. இரசாயன உரங்களுடன் ஒப்பிடும்போது இயற்கை உரங்களில் நயிட்ரஜன் மற்றும் பொஸ்பரஸ் அமைப்பு சிறந்து விளங்கும் வகையில் மிகவும் குறைவாகும். உள்ளக ஈரத்தன்மை அளவானது இயற்கை உரங்களில் உள்ள நயிட்ரஜன் மற்றும் பொஸ்பரஸ் செறிவு குறைக்கப்படும் அல்லது நீர்த்தப்படும் மற்றுமொரு காரணியாகும். எனவே அதிக ஈரப்பதனுடைய இயற்கை உரம் நீண்ட தூர அளவு பிரயாணிப்பது பொருளாதார ரீதியாக நன்மை பயக்காததாகும்.

எவ்வாறாயினும், குறித்த விவசாய உற்பத்தி மூலோபாயங்களுக்கு உகந்ததாக அந்தந்த பிரதேசங்களைச் சுற்றியுள்ள பகுதிகளில் பெற்றுக்கொள்ளப்படும் உர விதிகளின் பயிர்களுக்கு பயன்படுத்துவது எல்லாவற்றிலும் உகந்ததாகும். வலங்கு உரங்களில் உள்ள ஊட்டச்சத்தின் மதிப்பு கைத்தொழில் நடவடிக்கைகளில் வெளியேற்றப்படும் பொருட்களில் உள்ள ஊட்டச்சத்து மதிப்பை விட மாறிய நிலைகளில் காணப்படும். விலங்குகள் உட்கொள்ளும் உணவு, செயலாக்க பொருள் வகைகள் மற்றும் பாவனை, அவற்றின் வயது மற்றும் பண்டகமாற்றப்பட்ட முறை உட்பட காரணி உரங்களின் ஊட்டச்சத்தின் மதிப்பு பாதிப்படையும். இக்காரணிக் காலத்துக்கேற்ப பண்ணையின் தன்மை மற்றும் பிராந்திய ரீதியாக பாரிய புவியியல் அளவின் மூலம் மாற்றமடையும். இருப்பினும் அதனுடன் ஒப்பிடும்போது கைத்தொழில் தாக்கத்தில் ஊட்டச்சத்துக் கலவை குறைந்த மாறுபாட்டுடன் காணப்படுவதோடு அதன் உற்பத்திக்காக பயன்படுத்தும் தொழில்துறை நடவடிக்கையில் அதற்கு பாதிப்பு ஏற்படும். எவ்வாறாயினும், இயற்கை உரங்களில் ஊட்டச்சத்துக் கலவை பகுப்பாய்வுடனான கண்டுபிடிப்பு சாலச்சிறந்தது என எப்போதும் வரவேற்கப்படுகிறது.

ஆராய்ச்சி, மூலோபாய திட்டம் மற்றும் அபிவிருத்தி போன்ற துறைகளில் நாம் அண்மைய காலத்தில் வகித்த முயற்சிகளின் இயற்கைக்கு எவ்வித பாதகமான விளைவு ஏற்பாடாதவாறு உள்நாட்டு கைத்தொழில் துறையில் மாற்றத்தை ஏற்படுத் எமக்கு உதவியாக இருக்கும் இயற்கை உர உற்பத்தி மற்றும் ஊக்குவிப்பு தொடர்பாக உயர் தரத்தினை நிறைவேற்றுவதற்கு முன்மொழியப்பட்ட எமது புதிய செயற்திட்டங்களுடன் முன்னோக்கி செல்ல சக்தியை வழங்கும் எதிர்பாக்கப்படும் பலனை நாம் பெற்றுக்கொண்டு வருகின்றோம். எமது உள்நாட்டு விவசாயிகளின் மற்றும் பயிர்செய்கையாளர்களின் தேவையை பூர்த்தி செய்வதற்காக முக்கியமாக அமைவது ஆராய்ச்சியின் மூலம் வெளிக்கொணர்ந்த தகவல்களின் படி இச்செயற்திட்டங்கள் இயற்கை உர பாவனையில் திட்டமிடப்பட்டிருப்பது அவர்களுக்கு அதிக பயனை அடையக்கூடிய வகையிலாகும். நான் நம்பும் வகையில், எமது அண்மைய கால அபிவிருத்தித் திட்டங்களினால் எதிர்காலத்தில் இலங்கையின் கைத்தொழில் துறை அடுத்த கட்டத்தை நோக்கி கொண்டு சென்று அதிக விளைச்சலை பெற்றுக்கொள்வதற்காக எமது இலக்குக்கு நெருங்குவதோடு விவசாய உபரிகள் ஏற்றுமதி செய்வது சாத்தியமாகும். இவ்விலக்கை அடையும் நோக்குடன் திட்டமிட்டு நடைமுறைப்படுத்தப்படும் எமது புதிய செயற்திட்டங்கள் இயற்கை எண்ணக்கரு அடிப்படையில், அதனூடாக உள்நாட்டு தைத்தொழில் துறையில் புதிய பாதைகள் திறக்கப்படும்.

இதுவரை தூரம் வந்த வெற்றிப் பயணமானது, எதிர்காலத்தில் நம்பிக்கைக்குரியதாக தெரிகிறது. பல்வேறு தடைகள், சவால்கள் மற்றும் சிரமத்திற்கு மத்தியில் மென்மேலும் வெற்றிகளை தனதாக்கிக் கொள்வதற்கு எமது குழுவில் வலுவான உறுதிப்பாடு மற்றும் மன உறுதி எமக்கு முக்கியமானதாகும். மேலும் அடையாளம் கண்ட பல்வேறு முறைகளின் சிறப்புத்தன்மை கைப்பற்றிக்கொள்ளும் திறன் எம்மிடம் உள்ளதென்பது நன்கு அறிவவோம் என்ற நம்பிக்கையுள்ளது. கைத்தொழில் துறையில் புதிய சகாப்தமொன்று உருவாக்கும் குழுவாக நியமிப்பதற்கு தேவையான திறன், அர்ப்பணிப்பு மற்றும் சிறப்புத்தன்மை எம்மிடம் உள்ளதென்பது எமக்குத் தெரியும். மலரும் நாளைய நாளில் எமது பாரிய கனவை நனவாக்கிக் கொள்ள நாம் கைகோர்த்து முன்னோக்கிச் செல்வோம்.

**பிரியந்த சமரவீர**
பொது முகாமையாளர்




# இறப்பர் பயிர்ச் செய்கைக்காக

ஆர்.ஏ.-465, ஆர்.யூ.-462, ஆர்.யூ.-465, ஆர்/வய்.பி,
ஆர்/எஸ்.ஏ. போன்ற விசேட கலவை உரம்

# பணிப்பாளர் சபை



**திருமதி. அனோஜா ஹேரத்**
பணிப்பாளர்

**திரு. மாதவ வத்தேகம**
செயற்பாட்டு பணிப்பாளர்

**திரு. ஹேமக்க லசித் பாலசூரிய**
பணிப்பாளர்



**திரு. ரோஷன வடுகே**
தலைவர்

**திரு. உபுல் பீரிஸ்**
பணிப்பாளர்

**திருமதி. ஜே.எம்.எஸ்.டீ. ரத்னாயக்க**
பணிப்பாளர்

# பணிப்பாளர் சபை



### திரு. ரோஷன வடுகே
தலைவர்

கொழும்பு மஹாநாம கல்லூரயின் பழைய மாணவரான இவர், அவுஸ்திரேலியாவில் வர்த்தக நிர்வாகத்தில் டிப்ளோமா பட்டத்தை பெற்றுள்ளதுடன் ஜப்பானில் மோட்டார் இயந்திரவியல் துறையில் தொழிற்தகைமை பயிற்சி நெறியையும் பூர்த்தி செய்துள்ளார்.

15 வயதிற்கு கீழ்ப்பட்ட பாடசாலை கிரிக்கெட் குழுவின் தலைவர் மற்றும் 17 வயதிற்கு கீழ்ப்பட்ட கிரிக்கெட் குழுவின் உறுப்பினராக கடமையாற்றியுள்ள இவர் லயன்ஸ் கழகத்தின் தலைவர், பாடசாலை ரேடியோ கழகத்தின் பிரதி தலைவராகவும் செயற்பட்டுள்ளதுடன் கோட்டே லயன்ஸ் கழகத்தில் 3 வருடகாலம் தலைவராகவும் சபை பணிப்பாளராக 3 வருடகாலம் கடமையாற்றியுள்ளதுடன் சர்வதேச லயன்ஸ் கழகத்தின் மாவட்ட 306C யின் பணிப்பாளராகவும் சேவையாற்றியுள்ளார்.

இவரினால் ஆர்யா லங்கா அமைப்பு ஸ்தாபிக்கப்பட்டுள்ளதுடன் இது அரச நிறுவனமாக அல்லாத சமூக சேவை அமைப்பாக உள்ளது. ஸ்தாபனத்தின் தலைவராக இவர் உள்ளதுடன் இலங்கை வாகன இறக்குமதியாளர்கள் சங்கத்தின் பிரதி தலைவராகவும் கடமையாற்றுகின்றார்.

இலங்கை ஐக்கிய நாடுகளின் நட்பு அமைப்பினால் கடந்த 2006 ஆம் ஆண்டு இவருக்கு ஜீவனா சூரியா விருது வழங்கப்பட்டுள்ளது.



### திரு. மாதவ வத்தேகம
செயற்பாட்டு பணிப்பாளர்

இரண்டாம் நிலை கல்வியை கொழும்பு நாலந்த கல்லூரியில் பூர்த்திச் செய்துள்ள இவர் New Castle பல்கலைக்கழகத்தில் இளமாணி பட்டத்தையும் வர்த்தக நிர்வாகத்தில் பெற்றுள்ளதுடன் லண்டன் வர்த்தக நிறைவேற்று சங்கத்தின் பரீட்சை I மற்றும் II இன் தகைமைகளை பெற்றுள்ளார். டிப்ளோமா தகைமையினை அதணி Auto Cad மற்றும் Cad Windows இல் பெற்றுள்ளார்.

தற்போது இவர் Silver Bird International (pvt) நிறுவனத்தின் தலைவராகவும் முகாமைத்துவப் பணிப்பாளராகவும் செயற்படுவதுடன் Independence Architectural Homes நிறுவனம் மற்றும் Global Shipping நிறுவனம் ஆகியவற்றின் தலைவராக கடமையாற்றும் இவர் மத்திய கலாசார நிதியத்தின் செயற்பாட்டு பணிப்பாளராகவும் கடமையாற்றுகின்றார்.



## திருமதி. ஷிரந்தி தம்மிக்க ரத்னாயக்க
பணிப்பாளர்

களனி பல்கலைகழத்தில் அறிவியல் இளமாணி பட்டதாரி (பௌதீக விஞ்ஞானம்) பட்டத்தை பெற்ற இவர் கொழும்பு பல்கலைக்கழத்தில் பொருளாதார அபிவிருத்தியில் பட்ட பின் பட்டதாரி பட்டத்தையும் ஜப்பானின் டோக்யோவிலுள்ள IDEAS பாடசாலையில் அபிவிருத்தி கற்கைகளையும் பயின்றுள்ளார். இதேவேளை அவுஸ்திரேலியாவின் மெல்போன் பல்கலைக்கழத்தில் அரச கொள்கைகள் மற்றும் முகாமைத்துவத்தையும் இவர் கற்றுள்ளார்.

இலங்கை பொருளியியல் சங்கம், இலங்கை கொள்கை திட்டமிடல் சங்கம் ஆகியவற்றின் உறுப்பினரான இவர் இலங்கை கட்டளைகள் கல்வியகத்தில் (1993- 1994) கட்டளைகள் அதிகாரியாக கடமையாற்றியுள்ளதுடன் நிதி மற்றும் தேசிய அமுலாக்கத் திணைக்களத்தில் (1994- 2004) உதவி பணிப்பாளராகவும் அபிவிருத்தி நிதி திணைக்களத்தில் உதவி பணிப்பாளர் மற்றும் அதே திணைக்களத்தில் கிராமிய நிதி பிரிவு அபிவிருத்தியின் செயற்றிட்ட பணிப்பாளராகவும் கடமையாற்றியுள்ளார். நிதியமைச்சின் 2011 - 2013 ஆகிய காலப்பகுதியில் வரவு - செலவு செயற்றிட்ட பணிப்பாளராகவும் தற்போது இவர் தேசிய அமுலாக்க அமைச்சின் பணிப்பாளர் நாயகமாக கடமையாற்றுகின்றார்.

மேலும் இவர் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பல்கலைக்கழங்களில் ஆய்வு கற்கைகளில் பங்காளராகவுள்ளார். குறிப்பாக அவுஸ்திரேலியாவின் மெல்போர்ன் பல்கலைக்கழகம், ஜப்பானில் IDEAS பாடசாலை, கொழும்பு பல்கலைக்கழம்.

# பணிப்பாளர் சபை





## திரு. ஹேமக்க லசித் பாலசூரிய
பணிப்பாளர்

வெல்லச பல்கலைக்கழத்தில் வர்த்தக நிர்வாகத் துறையில் பட்டப்பின் பட்டதாரி பட்டத்தையும் பட்ட பின் பட்டதாரி டிப்ளோமாவையும் பட்டய சந்தைப்படுத்தல் கல்வியகத்திலும் பெற்றுள்ளார்.

இலங்கை தேசிய முகாமைத்துவ கல்வியகத்தில் Six Sigma பிரிவில் கறுப்பு பட்டியை பெற்றுள்ள இவர். பல்வேறு துறைகளிலும் 16 வருடங்களுக்கு மேற்பட்ட சிறந்த அனுபவத்தை பெற்றுள்ளதுடன் பல்வேறு துறைகளிலும் கடமையாற்றியுள்ளார். குறிப்பாக தொலைத் தொடர்பாடல் செயற்பாட்டாளர், வர்த்தக உற்பத்திகள், விற்பனை முகாமைத்துவம், குழு முகாமைத்துவம், வாடிக்கையாளர் பிடிமானம், வர்த்தக திட்டமிடல் மற்றும் நிர்வாகம், அறிவு முகாமைத்துவம் மற்றும் வாடிக்கையாளர் அனுபவ முகாமைத்துவம் போன்ற துறைகளில் கடமையாற்றியுள்ளார்.

## திரு. உபுல் பீரிஸ்
பணிப்பாளர்

கல்கிசை சென். தோமஸ் கல்லூரி மாணவரான இவர் இலங்கை பெருந்தோட்ட கூட்டாண்மை மற்றும் இலங்கை காணி மறுசீரமைப்பு மற்றும் அபிவிருத்தி சபை ஆகியவற்றின் முன்னாள் பணிப்பாளராவார்.

ஊவா மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சரின் இணை செயலாளராக இவர் கடமையாற்றியுள்ளதோடு இலங்கை உரக் கம்பனியின் பணிப்பாளர்கள் சபை உறுப்பினராக 2015, பெப்ரவரி 4 முதல் செயற்பட்டு வருகின்றனர்.



## திருமதி. அனோஜா ஹேரத்
பணிப்பாளர்

கொழும்பு தேவி பாலிக்க கல்லூரியின் பழைய மாணவியான இவர், பேராதனை பல்கலைக்கழத்தில் விசேட அறிவியல்மானி (விவசாயம்) பட்டத்தையும் களனி பல்கலைக்கழத்தில் சமூகவியல் துறையில் முதுமானிப் பட்டத்தையும் பெற்றுள்ளார்.

பேராதனை பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக தமது செயற்பாடுகளை ஆரம்பித்த இவர் சுற்றாடல் விவகார அமைச்சு மற்றும் இயற்கை வள ஆராய்ச்சி ஆகியவற்றில் உதவியாளராகவும் இணைந்து கொண்டார்.

மேலும் இவர் காணி முடிவு திணைக்களத்தின் உதவி ஆணையாளர், சுற்றாடல் மற்றும் மீள் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சின் உதவி பணிப்பாளர், தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சி அமைச்சின் பணிப்பாளர் என பல்வேறு பதவிகளை வகித்துள்ளதுடன் தற்போது விவசாய அமைச்சில் பணிப்பாளராக கடமையாற்றுகின்றார்.

இவர் சர்வதேச மாநாடுகளிலும் பங்கேற்றுள்ளார். இதற்கமைய சுற்றாடல் மற்றும் உறுதியான அபிவிருத்தி மாநாட்டில் இலங்கையின் சார்பாக பங்கேற்றுள்ளதுடன் ஐக்கிய நாடுகள் சபையின் மாநாடுகளிலும் பங்கேற்றுள்ளார்.

இவர் பல்வேறு ஆராய்ச்சிகளை முன்னெடுத்துள்ளதுடன் இலங்கையின் இயற்கை தேயிலை தொடர்பான ஆராய்ச்சிகளையும் முன்னெடுத்துள்ள விசேட நிபுணராவதோடு, தற்போது இலங்கை உரக் கம்பனின் நேரடி அமைச்சகமான கைத்தொழில் அமைச்சில் பிரதிநிதித்துவப் படுத்தும் அங்கத்தவராக செயல்கடுகின்றார்.

## எஸ் ரூ ஏ. கன்சல்டன்ட் பிரைவட் லிமிடட்

நிறுவனச் செயலாளர்
894/4, பீ,
அத்துருகிரிய வீதி,
மாலபே.

# சிரேஷ்ட முகாமைத்துவக் குழு



**திரு. பீ.ஆர். சமரவீர**
பொது முகாமையாளர் (பதில்) மற்றும் முகாமையாளர் (நிதி)



**திரு. பீ.டீ.எல். குமாரசிரி**
சிரேஷ்ட உள்ளக கணக்காய்வாளர்



**பொறி. டீ.எம்.என்.ஏ. திசாநாயக்க**
முகாமையாளர் (தொழிநுட்பம்)



**திரு. ஆர்.ஏ.பீ. பெரேரா**
முகாமையாளர் (விநியோகம்)



**திருமதி. ஆர்.பீ.எஸ். போதிபால**
முகாமையாளர் (விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல்)



**திருமதி. யூ. பெரேரா**
ஆய்வகத்தின் தலைவர்



**திரு. சீ.பீ.பீ. புலத்சிங்ஹல**
பதில் முகாமையாளர் (நிர்வாகம் மற்றும் மனிதவளம்)



**திரு. ஜி.ஜி. சமன்**
பதில் முகாமையாளர் (கொள்முதல் மற்றும் இறக்குமதி)

# சிரேஷ்ட முகாமைத்துவக் குழு



### திரு. பி.ஆர். சமரவீர

பொது முகாமையாளர் (பதில்) மற்றும் முகாமையாளரான (நிதியியல்)

இவர் ஸ்ரீ ஜயவர்த்தனப்புர பல்கலைக்கழகத்தில் வணிக பிரிவில் விசேட பட்டத்தை பெற்றுள்ளதுடன் இலங்கை அரச நிதி மற்றும் அபிவிருத்தி கணக்கியல் கல்வியகம், வர்த்தக நிர்வாக பட்டயக் கணக்காளர் சங்கம் ஆகியவற்றில் உயர் உறுப்பினராகவும் உள்ளார். இலங்கை உரக் கம்பனியில் 1987 ஆம் ஆண்டளவில் இணைந்துக் கொண்ட இவர் நீண்ட காலமாக எம்முடன் இணைந்து செயற்படுவதுடன் நிறுவனத்தின் சிரேஷ்ட முகாமையாளராகவும் உள்ளார்.



### திரு. பி.டி.எல். குமாரசிறி

சிரேஷ்ட உள்ளக கணக்காய்வாளர்

இவர் களனி பல்கலைக்கழத்தில் வணிக பிரிவில் விசேட பட்டத்தை பெற்றுள்ளதுடன் இலங்கை அரச நிதி கணக்காளர்கள் சங்கம், இலங்கை அரச நிதி மற்றும் அபிவிருத்தி கணக்காய்வு கல்வியகம் ஆகியவற்றில் உறுப்பினராகவுள்ளதுடன் அரச கணக்கு மற்றும் நிதி கல்வியகம் மற்றும் உள்ளக கணக்காய்வு கல்வியகம் ஆகியவற்றில் உள்ளக கணக்காய்வுக்கான சான்றிதழையும் பெற்றுள்ளார். கணக்காளர் மற்றும் சிரேஷ்ட உள்ளக கணக்காய்வாளராக தேசிய உபகரண இயந்திர ஸ்தாபனத்தில் கடமையாற்றியுள்ளார்.



### பொறியியலாளர் டி.எம். என்.எ. திஸ்ஸாநாயக்க

முகாமையாளர் (தொழில்நுட்பம்)

இவர் பேராதனை பல்கலைக்கழத்தில் பொறியியல் துறையில் Bsc பட்டத்தையும் களனி பல்கலைக்கழத்தில் வர்த்தக நிர்வாகத்தில் (நிதி) முதுமாணிப் பட்டத்தையும் பெற்றுள்ளார். இலங்கை பொறியில் கல்வியகத்தில் உறுப்பினராகவுள்ளதுடன் இக்கல்வியகத்தில் பொறியியல் பிரதேச குழுவிலும் அங்கத்தவராகவும் உள்ளார்.



### திரு. ஆர்.எ.பி. பெரேரா

முகாமையாளர் (விநியோகம்)

இவர் கொழும்பு பல்கலைக்கழத்தில் சமூகவியலில் விசேட பட்டத்தை பெற்றுள்ளதுடன் முகாமைத்துவம் மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறையில் மேலதிக டிப்ளோமா பட்டத்தையும் பெற்றுள்ளார். தேசிய உற்பத்தித்திறன் செயலகத்தில் உற்பத்தித்திறனில் டிப்ளோமா பட்டத்தை பெற்ற இவர், மனிதவள முகாமைத்துவம், தொழிற்துறை சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு, தீ பாதுகாப்பு, இயந்திர மற்றும் உபகரண பாராமரிப்பு ஆகிய துறைகளில் அனுபவம் வாய்ந்தவராகவுள்ளார்.






## திருமதி. ஆர்.பி.எஸ். போதிபால

முகாமையாளர்
(விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல்)

இவர் விஞ்ஞான பட்டதாரியாகவுள்ளதுடன் சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் விவசாயத்துறையில் (பெருந்தோட்ட முகாமைத்துவம்) விசேட பட்டத்தை பெற்றுள்ளார். பேராதனை பல்கலைக்கழகத்தில் விவசாய விஞ்ஞான பட்ட பின் பட்டதாரி கல்வியகத்தில் வர்த்தக நிர்வாகத்தில் முதுமாணி பட்டத்தையும் பெற்றுள்ளார். பெருந்தோட்டத்துறை முகாமைத்துவத்திலும் இவர் அனுபவம் வாய்ந்தவராகவுள்ளார்.

## திருமதி. யூ பெரேரா

முகாமையாளர்
(ஆய்வுகூடம்)

இவர் களனி பல்கலைக்கழகத்தில் விஞ்ஞானவியல் (உயிரியல் விஞ்ஞானம்) பட்டத்தைப் பெற்றுள்ளதுடன் கொழும்பு பல்கலைக்கழகத்தில் பகுப்பாய்வு இரசாயனவியலில் பட்ட பின் பட்டத்தையும் (Msc) பெற்றுள்ளார். 1996 இல் இலங்கை உரக்கம்பனயில் இணைந்த இவர் உர பகுப்பாய்வு சம்பந்தமான உயர் அனுபவம் உள்ளவரும் நீண்ட காலம் சேவைபுரிபவருமாவார்.

## திரு. சி.பி.பி. புலுத்சிங்ஹல

பதில் முகாமையாளர்
(நிர்வாகம் மற்றும் மனிதவளம்)

இவர் நிறுவனத்தில் 36 வருடகால அனுபவத்தை கொண்ட இவர் அகில இலங்கை சமாதான நீதவானராகவும் கடமையாற்றுகின்றார்.

## திரு. ஜி.ஜி. சமன்

பதில் முகாமையாளர்
(கொள்முதல் மற்றும் இறக்குமதி)

இவர் கொழும்பு பல்கலைக்கழகத்தில் கலைத்துறையில் பட்டத்தை பெற்றுள்ளதுடன் தற்போது இவர் இலங்கை நிர்வாக அபிவிருத்தி கல்வியகக் கொள்ளுதல் மற்றும் ஒப்பந்த முகாமைத்துவத்தில் டிப்ளோமா பாடநெறியினை கற்கின்றார்.



# முகாமைத்துவ மதிப்பீடு மற்றும் பகுப்பாய்வு

## கூட்டாண்மைத் தகவல்

### துறைப் பகுப்பாய்வு

இலங்கையின் பொருளாதாரம் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் காணப்படும் கடினமான சூழ்நிலையின் கீழ் 2015 ஆம் ஆண்டில் காணப்பட்ட நூற்றுக்கு 4.8% வீதத்தை ஒப்பிடுகையில் 2016 இல் நூற்றுக்கு 4.4% வீதத்தில் உண்மையாகவே வளர்ச்சியடைந்துள்ளது. உள்நாட்டில் பாரிய அளவிலான அரச உட்கட்டமைப்பு வசதித் திட்டங்கள் சில மீள ஆரம்பித்தல் மற்றும் தனியார் துறையில் முதலீட்டு நடவடிக்கைகள் பொருளாதார வளர்ச்சிக்கு உதவியாக இருந்தது. இருப்பினும், வருமானம் மேலோங்க மற்றும் குறிப்பாக ஒருங்கிணைந்த நிதித் திட்ட முறைகள் தொடர்ச்சியாக பராமரித்தல், விநியோகப் பிரிவு நெருக்கடிகள் மற்றும் வரி கொள்கை அடிப்படையின் மூலம் 2016 ஆண்டு அறையிறுதியில் பணவீக்கம் அதிகரித்தல், மத்திய வங்கியில் நிதிக் கொள்கை நிலை வலுவடைதல், வருடம் முழுவதும் காணப்பட்ட மோசமான காலநிலை நிலைமையினால் வளர்ச்சி வேகம் தடைப்பட்டது.

உற்பத்திப் பிரிவின் மதிப்பிற்கிணங்க, வளர்ச்சியானது பிரதானமாக 2016 ஆம் ஆண்டு முழுவதும் காணப்பட்ட

விமர்சனத்துக்குள்ளாகும் ஆண்டில் நேரடி உரம் 145,103.4 மெட்ரிக் டொன் தொகையாகவும் மற்றும் கலவை உரம் 32,846.8 மெட்ரிக் டொன் தொகையாகவும் விநியோகிக்கப் பட்டுள்ளதுடன், அதனூடாக மொத்த விநியோகத் தொகையாக 177,950.2 மெட்ரிக் டொன் ஆகும். பிரதானமாக நெல் பயிர்ச்செய்கைக்காக பயன்படுத்தப்படும் நேரடி உரத்தினால் இவ்விற்பனைத் தொகையில் 90% வீதம் பங்களிப்பை வழங்கியுள்ளது. அதில் 80% வீதத்திற்கு அதிகத் தொகையாக நெல் பயிர்ச்செய்கைக்காக நேரடி உரமாக வெளியிடப்படும் யூரியா, டீ.எஸ்.பி. மற்றும் எம்.ஓ.பி உரமாகும். ஏனைய விற்பனை அளவில் தென்னை, தேயிலை, இறப்பர், மரக்கறி, பழவகை மற்றும் பூக்கள், ஏற்றுமதிப் பயிர்கள், ஏனைய பயிர்கள் மற்றும் இயற்கை உரத்திற்காக விசேட உற்பத்திகளில் அடங்குவதாகும்.

மோசமான காலநிலையின் காரணமாக விவசாய நடவடிக்கைகள் தொடர்பாக அறிவிக்கப்பட்ட நெருக்கடியான நிலைமைக்கு மத்தியில் கைத்தொழில் விரிவடைதல் மற்றும் சேவை தொடர்பான நடவடிக்கைகள் விரிவடைவதினாலாகும். மிக மோசமான விளைவுகளுடன் கூடிய காலநிலை நிலைமை, இலங்கையின் பிரதான கைத்தொழில் உற்பத்தி ஏற்றுமதிக்காக ரஷ்யா மற்றும் சில மத்திய கிழக்கு நாடுகளின் தேவைகள் சரிவடைதல் மற்றும் குறைந்த விலைகள் போன்ற காரணிகள் கைத்தொழில் நடவடிக்கைகளின் வரையறை நிலைமைகள் ஏற்பட்டது.

மோசமான காலநிலை நிலைமைகளை காரணமாகக் கொண்டு கைத்தொழில் துறையில் 4.2% எதிர்மறை வளர்ச்சி ஏற்பாட்டதோடு, அந்நிறுவனம் மொத்த உள்நாட்டு உற்பத்தியைக் கொண்டு 2015 இல் காணப்பட்ட 7.8% மதிப்பு 2016 இல் 7.1% வரை சரிவடைந்ததோடு நெல், தேயிலை மற்றும் இறப்பர் உற்பத்திகள் முறையே 8.3%, 11.0% மற்றும் 10.7% வரை குறைந்து காணப்பட்டது. வருட முழுவதும் காணப்பட்ட மோசமான காலநிலை மற்றும் முக்கியமாக இரண்டாவது காலாண்டில் அதிக மழை காணரமாக ஏற்பட்ட வெள்ளப்பெருக்கினாலும் நீண்ட காலமாக காணப்பட்ட வரட்சியானது கைத்தொழில் நடவடிக்கைகளுக்கு மோசமாக பாதிக்கப்பட்டது.

அரசினால் இயற்கை உர மானியமொன்றை பெற்றுக்கொடுக்கப்பட்ட முதல் வருடமாக 2016 ஆண்டு காணப்பட்டது. அதற்காக உர மானியம் 2016 டீசம்பர் மாதத்தில் 37.5 பில்லியன் ரூபாய் மொத்த பெறுமதிக்கு ரூ. 25,000 கொடுப்பனவாக நியமிக்கப்பட்டது. மரக்கறி, பயறு, கௌபி, சோயா போஞ்சி, பெரிய வெங்காயம் மற்றும் இன்னும் பல பயிர்களை பயிரிடும் விவசாயிகளுக்கு உர மானியமாக வருடாந்தம் ஹெக்டயருக்கு ரூ. 10,000 வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

| வருடம் | நேரடி உரம் (மெ.டொ) | கலவை உரம் (மெ.டொ) | மொத்தம் |
|---|---|---|---|
| 2015/2016 | 98,804.912 | 27,840.517 | 126,645.429 |
| 2016/2017 | 46,298.535 | 5,006.250 | 51,304.785 |

நீண்டகால அடிப்படையில் இரசாயன உரம் பாவிப்பதனால் ஏற்படக்கூடிய தீங்கு விளைவிக்கும் பாப்புக்களை குறைத்துக்கொள்வதற்கு அடுத்த வருடம் முதல் ‘சங்க்ஸ்டா கொம்போஸ்ட்’ என்ற பெயரில் இயற்கை உரம் உற்பத்தியை அறிமுகப்படுத்துவதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகள் திட்டமிடுவதற்கு நிறுவனம் செயற்படுகின்றது.

## நிறுவன பகுப்பாய்வு

இலங்கை விவசாயிக்கு தேவையான தருணத்தில் உதவியாக வரும் நெருங்கிய நண்பராக செயல்படுவதோடு, இறக்குமதி செய்யப்பட்ட உரங்கள் கலவை மற்றும் ஒன்றுபட்ட வடிவங்களில் அவற்றை விநியோகிக்கும் வரையறுக்கப்பட்ட இலங்கை உரக் கம்பனியின் அடிப்படை இலக்கானது கைத்தொழில் துறையை அபிவிருத்தி செய்வதற்கு அர்ப்பணித்த அரச நிறுவனமாக செயல்படுவதாகும்.

நாடு முழுவதும் விவசாயிகளுக்குத் தேவையான எந்நேரத்திலும் தகுந்த நேரத்தில் சிறந்த உரத்தை பெற்றுக்கொடுப்பதற்கு முழுமையாக அர்ப்பணிப்புடன் காணப்படும் எமது நிறுவனம், இறக்குமதி செய்யப்படும் அனைத்து உர வகைகளும் தொழில்துறை ஆராய்ச்சி நிறுவனங்களினால் தர பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு அவற்றின் உயர் தரத்தை உறுதிசெய்துள்ளது. எமது பண்டகசாலைகளில் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு விநியோகிக்கப்படும் அனைத்து உர வகைகளிலும் மாதிரி, இலங்கை அமுலாக்கல் சபையினால் சக்தியைப் பெற்றுக்கொடுத்திருக்கும் மற்றும் ISO/IEC/17025:2005 சான்றிதழ் அளிக்கப்பட்ட எமது ஆய்வுகூடத்திலேயே பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகிறது.

வத்தளை, ஹூனுபிட்டியவில் அமைந்துள்ள எமது நிறுவனத்தின் மத்திய பண்டகசாலைத் தொகுதி 67,000 மெட்ரிக் டொன் கொள்ளளவைக் கொண்டிருப்பதோடு, பொலன்னருவையில் அமைந்துள்ள பிரதான பிராந்திய பண்டகசாலைத் தொகுதி 18,500 மெட்ரிக் டொன் கொள்ளளவைக் கொண்டுள்ளது. மேலும் நாடு முழுவதும் காணப்படும் 40 பண்டகசாலைளுடன் அடங்கிய வலைப்பின்னலில் மொத்தமாக 15,000 மெட்ரிக் டொன் கொண்டுள்ளது.

கலவை உர உற்பத்தியானது ஒவ்வொரு பயிர்களுக்கும் பொறுத்தமானவாறு அரசினால் பரிந்துரைக்கப்பட்ட விதிகளின் படி ஹூனுபிட்டிய மத்திய பண்டகசாலைத் தொகுதியில் இடம்பெறுகின்றது. நெல் பயிர்ச்செய்கைக்காக நேரடி உரம் வழங்குவதில் மாத்திரம் அல்லாமல் தேயிலை, தென்னை, இறப்பர், மரக்கறி வகை, பழவகை மற்றும் ஏனைய பயிர்களுக்கு விசேட கலவை உரத்தை வழங்கும் நாம், காலப்போக்கில் விவசாயிகளுக்கு ‘சங்ஸ்தா கொம்போஸ்ட்’ என்ற பெயரின் கீழ் இயற்கை உரத்தை அறிமுகப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளில் நாம் தற்போது செயல்பட்டு வருகின்றோம்.

விமர்சனத்துக்குள்ளாகும் ஆண்டில் நேரடி உரம் 145,103.4 மெட்ரிக் டொன் மொத்தத் தொகையாகவும் மற்றும் கலவை உரம் 32,846.8 மெட்ரிக் டொன் மொத்தத் தொகையாகவும் விநியோகிக்கப் பட்டுள்ளதுடன், அதனூடாக மொத்த விநியோகத் தொகையாக 177,950.2 மெட்ரிக் டொன் ஆகும். பிரதானமாக நெல் பயிர்ச்செய்கைக்காக பயன்படுத்தப்படும் நேரடி உரத்தினால் இவ்விற்பனைத் தொகையில் 90% வீதம் பங்களிப்பை வழங்கியுள்ளது. அதில் 80% வீதத்திற்கு அதிகத் தொகையாக நெல் பயிர்ச்செய்கைக்காக நேரடி உரமாக வெளியிடப்படும் யூரியா, டீ.எஸ்.பி. மற்றும் எம்.ஓ.பி உரமாகும். ஏனைய விற்பனை அளவில் தென்னை, தேயிலை, இறப்பர், மரக்கறி, பழவகை மற்றும் பூக்கள், ஏற்றுமதிப் பயிர்கள், ஏனைய பயிர்கள் மற்றும் இயற்கை உரத்திற்காக விசேட உற்பத்திகளில் அடங்குவதாகும்.

‘லக்பொஹொர’ என்ற சந்தைப் பெயரானது இந்நாட்டில் பரந்த விவசாய சமூகத்தில் விளம்பரப்படுத்தி நாடு முழுவதும் பரவியிருக்கும் எமது பிரதிநிதித்துவ வலைப்பின்னல்கள் மற்றும் ஆர்பிகோ, கார்கில்ஸ் மற்றும் கீல்ஸ் உட்பட சிறந்த விற்பனை நிலையங்களின் மூலம் எமது புதிய உற்பத்திகள் விநியோகிக்கப்பட்டு வருகின்றது.



இலங்கையில் பிரதிநிதித்துவத்துடன் கூடிய கொரியா நாட்டின் ஹியொசுங்க் ஓ.என.பீ. (பிரைவட்) லிமிடட் நிறுவனத்துடன் ஒத்துழைப்புடன் இந்நிகழ்ச்சி நடைபெற்றது





லக்பொஹொர வாடிக்கையாளர்களின் விநியோக வெற்றிகளுக்காக கொரியா நிறுவனத்தினால் மதிப்பழிக்கப்பட்டது

இயற்கை உர சந்தைகள் தொடர்பாக 2015 இல் காணப்பட்ட எதிர்பார்ப்பு 2016 ஆம் ஆண்டில் பரந்த புதிய வேலைத்திட்டங்களின் ஒரு தொடராக அமைக்கப்பட்டு கம்பனியினால் தனது முதல் இயற்கை உரத்தினை அறிமுகப்படுத்தியது. விலைக் காரணி தொடர்பாக சில சில திருத்தங்கள் செய்யப்பட்ட போதிலும், 295 மெட்ரிக் டொன் மொத்த இயற்கை உர அளவு கடந்த ஆண்டில் விற்பனை செய்யப்பட்டது. இவ்வேலைத்திட்டம் இலங்கையில் பிரதிநிதித்துவத்துடன் கூடிய கொரியா நாட்டின் ஹியொசுங்க் ஓ. என. பீ. (பிரைவட்) லிமிடட் நிறுவனத்துடன் இணைந்து நடைமுறைப்படுத்தப்பட்டது.

அறிமுகப்பட்டுப்பட்ட இயற்கை உர மாதிரிகளுக்கு இடையில் தேயிலை, நெல், மரக்கறி மற்றும் சிறு ஏற்றுமதி பயிர்ச்செய்கையாளர்களுக்காக 2 கி.கிராம் மற்றும் 20 கி.கிராம் பக்கட்டுகளுடன் கூடிய திண்ம இயற்கை கட்டி உரம், 2 கி.கிராம் மற்றும் 20 கி.கிராம் கொம்போஸ்ட் அடங்கியிருப்பதாகும்.

இயற்கை உர விநியோகத்திற்கான இலக்கானது 2,500 மெட்ரிக் டொன் ஆகும்.

விநியோகிப்பவர்களின் மற்றும் விவசாயிகளின் மனதில் ஒரு முன்னுரிமை அவதானமொன்று உருவாவதோடு இயற்கை உரம் தொடர்பாக விழிப்புணர்வு மேலோங்கிச்

செல்வதற்கு கைத்தொழில் அமைச்சின் மாகந்துர கைத்தொழில் பயிற்சி நிலையத்தின் ஒத்துழைப்புடன் நிதியியல் வருட முழுவதும் விழிப்புணர்வு வேலைத்திட்டங்கள் நடாத்தப்பட்டது. விழிப்புணர்வு வேலைத்திட்டற்கு முதல் விநியோக ஊழியர்களுக்கு விழிப்புணர்வை அளிப்பதுடன், அதனூடாக பிராந்திய முகாமையாளர்கள் மற்றும் 50 நிர்வாகிகளுக்கு பயிற்சியளிக்கப்பட்டது. அதன் பின் பொலன்னருவை, அனுராதபுரம், அம்பாறை மற்றும் மாத்தளை ஆகியபிரதேசங்களில் விழிப்புணர் வேலைத்திட்டங்கள் நடாத்தப்பட்டது. அதனூடாக மொத்தத்தில் 150 கைத்தொழில் ஆலோசகர்கள் மற்றும் 250 விவசாயிகள் பயிற்றப்பட்டனர்.

அதற்கு மேலதிகமாக, இயற்கை உரப் பிரிவு மற்றும் பசுமை உரத்திற்காக அவற்றால் பெற்றுத்தரும் அர்ப்பணிப்பினால் உயர்தர உற்பத்தித் திறனுடன் கூடிய இயற்கை கைத்தொழில் நிகழ்வொன்று ஹூனுபிட்டியவில் அமைந்துள்ள இலங்கை உரக் கம்பனி பிரதான காரியாலய வளாகத்தில் உருவாக்கப்பட்டது.

## நிதியியல் மீட்டல்

தாக்கத்தை ஏற்படுத்தும் திறனுடன் கூடிய காலநிலை நிலைமை உட்பட வெளிக்கள காரணிகள் மற்றும் தேசிய கொள்கைகளுக்கு இணங்கக்கூடிய செயல்படும் கடமைப்பொறுப்பு மாற்றங்களின் காரணியாகக் கொண்டு நிறுவனத்தின் வருமானத்துடன் ஒப்பிடுகையில் வருடத்திற்கான வருமானம் இலங்கை ரூபாவில் 4,243 மில்லியனிலிருந்து 2,350 மில்லியன் ரூபாய் வரை தெளிவான அளவில் குறைந்து சென்றதுடன், அவை 45% வீதம் சரிவடைந்தது.




## மொத்த இலாபம்

விமர்சனத்துக்குள்ளாகும் ஆண்டில் கம்பனியினால் 231 மில்லியன் ரூபாய் மொத்த இலாபத்தை பதிவு செய்துள்ளதுடன், 79% வீதம் சரிவடைந்ததில் அவை மேற்குறிப்பிட்ட காரணிகளுக்கு இணங்க கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் 28.7% உயர்வடைந்துள்ளது.




## நிர்வாக செலவுகள்

புதிய போக்கானது முன்னோக்கி கொண்டு செல்வதில், கம்பனியினால் வருடத்திற்கு ஒப்பிடும்போது நிர்வாக செலவுகள் 540 மில்லியன் ரூபா முதல் 445 மில்லியன் ரூபா வரை 18% வீதம் மேலும் சரிவடைந்து காணப்பட்டது.




## விநியோக செலவுகள்

காலநிலை நிலைமைகளை காரணமாகக் கொண்டு ஏற்பட்ட சிரமத்தினால் கம்பனியின் விநியோக செலவுகள் வருடத்துடன் ஒப்பிடுகையில் வருடத்திற்கு 66.7% அதிகரித்திருந்தது.



## நிதயில் வருமானம் மற்றும் செலவுகள்

நிதியாண்டில் நிறுவனத்தின் நிதியியல் வருமானமானது 333.5 மில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளது. உள்ளக ஆற்றல்கள் ஒழுங்கமைத்தல் காரணமாக நிதியியல் செலவுகள் வருடத்துடன் ஒப்பிடுகையில் வருடத்திற்கு 126.125 ரூபா வரை 93% வீத்தில் வீழ்ச்சியடைந்துள்ளது.




## வரிக்கு முந்திய இலாபம் (PBT)

2012 ஆம் ஆண்டு முதல் இதுவரை அறிக்கையிடப்பட்ட கம்பனியின் குறைந்த வரிக்கு முந்திய இலாபம் 127 மில்லியன் ரூபாவாக குறிப்பிட்டிருப்பதுடன், அது 85% வீழ்ச்சியாகும். இவ்வீழ்ச்சியானது கம்பனியினால் இதுவரையிலான அதிக இலாபம் வருடத்திற்கு ஒப்பிடும்போது வருடாந்த சதவீதம் வீழ்ச்சியடைவதற்காக பெற்றுக்கொடுக்கப்பட்ட கைத்தொழில் அறுவடை தொடர்பாக ஒரு சிறந்த வருடத்தின் பின் ஆகும்.




## வரி

நிதி வருடத்தின் வருமானம் வரிச் செலவு 11 பில்லியன் ரூபா ஆவதோடு, அது 2016:.2017 வருடத்தில் 223 பில்லியன் ரூபாவாகும். மாற்றமடைந்த வரிச் செலவு 69 பில்லியன் ரூபா வருமான வரிச் செலவில் உள்ளடங்கியுள்ளது.

## பங்கு வருமானம் (EPS)

கம்பனியினால் 139 ரூபா பெறுமதி அறிக்கை கிடைக்கப்பெற்றதுடன் பங்கின் வருமானம் 2013 இன் பின் அதன் குறைந்த மதிப்புவரை வீழ்ச்சியடைந்தது. இது வருடத்துடன் ஒப்பிடும்போது வருடத்திற்கு 77% வீழ்ச்சியாகும்.




## பங்குக்கான பங்கி இலாபங்கள் (DPS)

நிதியியல் வருடத்தில் பங்குக்கான பங்கிலாபம் 139 ரூபா ஆவதோடு, அது 77% வீழ்ச்சியாகும்




## சொத்துகள் மீதான திரும்பல்கள் (ROA)

விமர்சனத்திற்குள்ளாகும் ஆண்டில் மொத்த சொத்துக்களின் படி 0.39% மீள் இலாபத்தை பிறப்பிப்பதற்கு கம்பனிக்கு இயன்றது. இது வருடத்துடன் ஒப்பிடும்போது வருடத்திற்கு 76 % வீழ்ச்சியடைந்துள்ளது.




## பங்கு மீதான திரும்பல்கள் (ROE)

கம்பனியினால் 2.54மூ பங்கு மீதான திரும்பல்களின் அளவொன்று உருவாக்கப்படுவதோடு, இது வருடத்துடன் ஒப்பிடும்போது வருடத்திற்கு 80 % வீழ்ச்சியடைந்துள்ளது.




## சொத்து அடிப்படை

நடைமுறையல்லாத சொத்துகளுடன் நிறுவனத்தின் மொத்த சொத்து பெறுமதியானது 8% மற்றும் நடைமுறை சொத்துகள் 95% என்ற ரீதியில் 2016 ஆம் ஆண்டின் முடிவில் 35.6 பில்லியன் ரூபாவாக இருந்தது.

நிறுவனத்தின் நடைமுறை அல்லாத சொத்துக்கள் உத்தேச ஆண்டில் பிரதானமாக உடைமைகள், பொறுப்புகள் மற்றும் சாதனங்கள் உள்ளடக்கி 2.7 பில்லியன் ரூபாவாகும்.

கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போத மொத்த சொத்துக்கள் 2.72% ஆல் வீழ்ச்சி அடைந்துள்ளன.




## பணப்பாய்ச்சலும் பணப்புழக்கமும்

நிறுவனத்தின் பிரதான பண காரணிகளை செயற்பாடுகள் மற்றும் முதலீடுகளை வழியாகக் கொண்டு பணம் பெறப்பட்டுள்ளது. உத்தேச நிதியியல் ஆண்டில் செயற்பாடுகள் மூலமான பணப்பாய்ச்சல் 214 மில்லியன் ரூபா மற்றும் முதலீடுகள் மூலமான பணப்பாய்ச்சல் 591 மில்லியன் ரூபாவாகும். மதிப்பிடப்பட்ட ஆண்டில் நிறுவனத்தின் நிதியியல் செயற்பாடுகள் மூலமான பணப்பாய்ச்சல் 834 மில்லியன் ரூபாவாகும்.

## சேவை கடன் மற்றும் தொழில் மூலதன தேவைகள்

நிறுவனமானது மூலதன செலவுகள் மற்றும் பங்கிலாபங்களை செலுத்துவதற்கு போதுமான பணப்புழக்கத்தை பேணக்கூடியதாக இருந்தது.

## பங்குதாரர்களின் நிதிகள்

அரசாங்க திறைசேரியினால் 100மூ பங்குகள் நிர்வகிக்கப்படுகின்றன. பங்குகள் விநியோக எண்ணிக்கை 50,245,608.

# மனித வள முகாமைத்துவம்



## மனிதவள கொள்கைகளில் சிறந்த நடைமுறைகள்

எமது மனித வளங்கள் முகாமைத்துவ மூலோபாயங்கள் திறைசேரி மற்றும் நேரியல் அமைச்சினால் விநியோகிக்கப்படும் கடை மற்றும் அலுவலகச் சட்டம், வேதன சபை அவசர வழிகாட்டுகளுக்கு இணங்கவும் தற்போது இலங்கையில் நடைமுறையில் உள்ள சம்பந்தப்பட்ட தொழில் சட்டங்களுக்கு அமையவும் ஒழுங்காக தயாரிக்கப்பட்டுள்ளன. நிர்வாக ஒழுக்கக்கூற்று விதிகள் மற்றும் நாட்டின் மின் குறியீடினை கடைப்பிடிக்கும் முகமாக நிறுவனமானது அதன் மனித வளங்களின் முகாமைத்துவத்தை மேம்படுத்துவதற்கு முயற்சி செய்வதுடன் விடா முயற்சியுடனும் வெளிப்படையாகவும் நிறுவனத்தின் கட்டமைப்பை தோற்றுவிப்பதுடன் சம்பளங்கள் மற்றும் பணிநிலை ஆணைக் குழுவினால் வழங்கப்பட்டுள்ள வழிகாட்டல்களுக்கு எதிரான இடைவெளிகளை அடையாளம் கண்டு அவற்றை நிரப்புவதுடன் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் உருவாக்கப்பட்டுள்ள தரங்கள் மற்றும் வழிகாட்டல்களுக்கு அமைய பதவியுயர்வுகளை வழங்குவதுடன் ஊதியப் பொதிகளை அமைத்துக் கொள்ளல்.

## ஊழியர் பயன் திட்டம்

அரசாங்க வழிகாட்டல்களுக்கு இசைவாக நிறுவனமானது மொத்த சம்பளத்தில் 15% ஐ (அடிப்படை + வாழ்க்கைச் செலவு) ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் (EPF) மொத்த சம்பளத்தில் 3மூ யை (அடிப்படை + வாழ்க்கைச் செலவு) ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கும் (ETF) பங்களிப்புச் செய்கிறது.

## பயன் திட்டத்தின் அறிமுகம்

இலங்கையின் கணக்கியல் தரங்களுக்கு அமைய தகைமை வாய்ந்த மதிப்பீட்டாளர் ஒவ்வொரு வருட நிதியியல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள இலாபப் பொறுப்பினை கணக்கிடுவதுடன் ஒவ்வொரு ஊழியரினதும் முதலாவது சேவை வருடத்தில் இருந்து ஓய்வூதிய நலன் பொறுப்புக்கான ஒதுக்கீடுகள் கணக்கிடப்படும்.

## ஊழியர் செயலூக்கம்

நிறுவனமானது மனதுக்கு இசைவான பணி சூழலை உருவாக்குதல், வசதிகளை மேம்படுத்தல், அழுத்தத்தை குறைத்தல் ஆகியவற்றின் மூலம் தனது ஊழியர்கள் தமது ஆற்றலையும் உற்பத்தித்திறனையும் உச்சப்பட்சமாக வெளிப்படுத்துவதற்கு ஊக்கம் அளிப்பதில் மிகவும் அவதானமாக இருப்பதுடன் நிறுவனத்தின் நாளுக்கு நாள் வர்த்தக செயற்பாடுகளில் ஊழியர்களுக்கு உரித்துடமையில் வலுவான உணர்வினை அளிப்பதுடன் நிறுவனத்தின் குறுகிய மற்றும் நீண்ட தவணை இலாப பெறுபேறுகளில் குறிப்பிடத்தக்க தேய்வு ஏற்பட்ட போதிலும் இதனை பின்பற்றல்.

## நிதியியல் நலன்கள்

- பெறுபேறுகள் மதிப்பீட்டுக்காக சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தரங்களுக்கு அமைய ஒவ்வொரு ஊழியரினதும் தனிப்பட்ட பெறுபேறுகளை அடையாளம் காணும் ஒரு வருடாந்த ஊக்குவிப்பு திட்டம்.

- இலாபத்தின் அளவு சம்பந்தமாக திறைசேரியினால் அறிவிக்கப்படும் சுற்றறிக்கைக்கு இணங்க வருடாந்த போனஸ் ஊதியம் வழங்குதல்.

- நிதியியல் அழுத்தத்தை குறைக்கும் முகமாக தகுதியான ஊழியர்களுக்கு தேநீர், உணவு மற்றும் ஆடை போன்றவற்றுக்கு கொடுப்பனவுகளை வழங்கல்.

- தொழிலிடத்தில் உள்ள அனைத்து ஊழியர்களுக்கும் ஆண்டில் அதிகளவு பயன்படுத்தாக மருத்துவ விடுமுறைகளுக்கு அவற்றுக்கீடாக பணத்தினை வழங்குதல்.

- தகுதி வாய்ந்த ஊழியர்களுக்கு கையடக்கத் தொலைபேசிகளை வழங்குவதுடன் கையடக்க தொலைபேசிகள் மற்றும் நேரடித் தொலைபேசிகளுக்கான பற்றுச்சீட்டுக்குரிய தொகையை வழங்குதல், மீண்டும் நிறுவனத்தின் சார்பான வர்த்தக செயற்பாடுகள் காரணமாக ஊழியர்கள் மீது ஏற்படும் சுமையை இது குறைக்கிறது.

- ஊழியர்களுக்கான பொறுப்பினை புரிந்து கொள்ளும் முகமாக வேலைக்காக சிறிய பொருளாதார தொகையினை வழங்குதல், எமது ஊழியர்களின் பிள்ளைகளுக்கு தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் கல்வி, கலாசாரம் அல்லது விளையாட்டு செயற்பாடுகளுக்கு நிதியியல் உதவிகளை வழங்குதல்.

## ஏனைய நலன்கள்

- விறியோகத்தில் இலக்குகளை அடையும் பிராந்திய முகாமையாளர்களுக்கு உத்தியோகப்பூர்வ வாகனங்கள் வழங்கப்படும்.

- மாவட்ட சந்தைப்படுத்தல் நிறைவேற்று ஊழியர்களுக்கு சோர்வினை குறைத்து உற்பத்தித்திறனை அதிகரிக்கும் முகமாக மோட்டார் பைசிக்கிள்கள் வழங்கப்படுகின்றன.

- அனைத்து ஊழியர்களுக்கும் சலுகை விலை அடிப்படையின் கீழ் எமது விடுமுறை விடுதிகளை ஒதுக்கிக்கொள்ளலாம்.

- அனைத்து ஊழியர்களுக்கும் அவர்களது குடும்ப அங்கத்தவர்களுக்கும் சுகாதார சேவையினை மேம்படுத்தும் முகமாக மருத்துவ காப்புறுதி திட்டமானது உருவாக்கப்பட்டுள்ளது.

- அதிகளவில் விறியோகம் செய்யும் மாவட்ட விறியோக நிர்வாகிகளை ஊக்குவிக்கும் வகையில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணங்கள் வழங்கப்படும்

- திறந்த தொடர்பாடல் கொள்கைகளை ஊக்குவிக்கும் முகமாக கீழ் மட்டத்தில் இருந்து உயர்மட்டம் வரையில் தகவல்களை பரிமாறிக்கொள்ளும் முகமாக நிறுவன ரீதியிலான கலாசாரம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.







- எமது ஊழியர்களுக்கு மனநல சுகாதாரம் மற்றும் தொழில் ஆற்றல்களை மேம்படுத்தும் முகமாக ஆன்மீக மற்றும் ஆற்றல் சம்பந்தமான பயிற்சித்திட்டங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

## நலன்புரி மற்றும் மனிதவளங்கள்

நாம் இயங்கக்கூடிய சூழல் மாதிரியை தோற்றுவிப்பதன் முக்கியத்துவத்தை நாம் மிகவும் நன்கு புரிந்து கொண்டுள்ளதுடன் இந்த சூழலானது பெறுபேறுகளின் மேம்பாடு சுயமுன்னேற்றம் தலைமைத்துவம் மற்றும் எமது பெறுமதி மிகுந்த வாடிக்கையாளர்கள் எதிர்நோக்கும் சவால்களை பொறுப்பேற்றல் ஆகியவற்றுக்கு உதவியும் ஆதரவும் வழங்குவதுடன் இதற்கு நிறுவனத்தின் முகாமைத்தவமானது மிகச்சிறந்த முன்னுரிமையை வழங்கி வருகிறது.

மேலதிகமாக எமது ஒட்டுமொத்த மனிதவள அபிவிருத்தி செயற்பாடுகளின் ஒரு பகுதியாக பல துறைகளிலும் உள்ளக மற்றும் வெளியக ஆகிய இரு தரப்பு தொழில்சார் சேவைகளை பயன்படுத்துவதுடன் தொழில்நுட்ப மற்றும் தலைமைத்துவ ஆற்றல்களை அபிவிருத்தி செய்வதற்கான தொனிப்பொருள்கள் மற்றும் உந்துதலுடன் அதேவேளை அனுபவமூடாக செயலூ க்கத்தை அதிகரித்தல், கற்றலை ஊக்குவித்தல், ஆலோசனை கொள்ளவை மேம்படுத்தலும் ஆகும்.

கம்பனியின் உற்பத்தி தொடர்பாக விரிவான புரிந்துணர்வொன்றை பெற்றுக்கொள்ளும் நூற்றுக்கணக்கான ஊழியர்களுக்காக பரந்து காணப்படுவதாலும், விநியோகப் பிரிவின் ஊழியர்களுக்காக பிரதான காரியாலயத்தில் மற்றும் பிராந்திய பண்டகசாலைகளில் விசேட பயிற்சித் திட்டங்களினால் மேற்கொள்ளப்படுவதோடு, அங்கு அவர்களுக்கு இயற்கை உரம் தொடர்பான மிகச்சிறந்த பின்னணி அறிவைப் பெற்றிருத்தல்.

கற்றல் மிக முக்கியமானது என்பதோடு, புத்தகங்கள் அதில் அடிப்படையாகக் கொண்டிருப்பதால் ஊழியர்களுக்காக சிறந்த கற்றல் சூழலை வழங்குவதற்கு நிறுவனம் தூரநோக்கத்தில் செயற்படும் பயனாக சமீபத்திய புதிய அறிவுடன் மற்றும் அறிவை மேம்படுத்திக்கொள்ள ஊழியர்களுக்காக நூலக வசதிகளை வழங்கப்பட்டுள்ளது.

நிறுவனமானது தனது ஊழியர்களுக்கு மிகச்சிறந்த சாதகமான கற்கை சூழலை வழங்குவதில் அதாவது ஊழியர்கள் தமது அறிவினை அபிவிருத்தி செய்து கொள்ளும் முகமாக நூலக வசதிகளை வழங்குவது போன்ற தொலைநோக்கான செயற்பாடுகளில் ஈடுபடுகிறது. நவீன ஆய்வுகூடத்தில் ஆய்வுகூட ஊழியர்கள் மிகவும் சக்திவாய்ந்த அதிகளவு தொழில்நுட்ப சீரான உர ஆய்வாளர்களாக தரப்படுத்தப்படும் பொருட்டு விசேட தொழில்நுட்ப பயிற்சித் திட்ட நிகழ்வுகள் நடத்தப்படுகின்றன.

## பிடிமானம்

நிறுவனமானது இந்த நிதியியல் ஆண்டில் குறைந்த ஊழியர் செலவு மற்றும் குறைந்த மட்ட ஊழியர் தேய்வினை பேணுவதில் சாதனை நிலைநாட்டியுள்ளது தொடர்பாக பெருமை கொள்வதுடன் ஊழிய அபிவிருத்தி, சமத்துவம், நேரம் மற்றும் கற்கை சூழலுக்கான உருவாக்கம் ஆகியவற்றின் மூலம் தொழில் திருப்தி தன்மையை ஏற்படுத்தியுள்ளதுடன் இங்கு வசதிகளும் நலன்களும் தொழில்சார் திறமையை அபிவிருத்தி செய்யும் முகமாக வாய்ப்புகளை மேம்படுத்துவதற்காக வழங்கப்படுகின்றன.






# கூட்டான்மை ஆட்சி

நிறுவனமானது தரமான மனித வளங்கள் முகாமைத்துவ செயற்பாடுகளால் உறுதியான கூட்டாண்மை பெறுமதிகளின் குறியீடு மற்றும் படிநிலை வழிகாட்டலுடன் நிறுவனமயமாக்கப்பட்டுள்ளது.

இலங்கை உரக் கம்பனியின் கூட்டாண்மை வழிநடத்தலை பராமரித்தலின் பூரண பொறுப்புடமையானது பணிப்பாளர் சபையின் உயர்ந்ததர அம்சங்களுடன் இணைந்ததாக உள்ளது நிறுவனத்தின் கூட்டாண்மை வழி நடத்தலின் பொறிமுறையானது அனைத்து தரப்பினருடனும் உடன்பாட்டுனான மதிப்பினை உறுதி செய்கிறது. கூட்டாண்மை வழிநடத்தலானது பின்வரும் விதிமுறை சட்டங்கள் மற்றும் உத்தரவுகளுடன் இணைந்ததாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

1. நிறுவனங்கள் சட்ட இலக்கம் 2007 இன் 07.
2. நல்லாட்சியின் அரச வர்த்தகத் திணைக்களத்தின் அரச வர்த்தக வழிகாட்டி
3. நல்லாட்சியின் அரச வர்த்தகத் திணைக்களத்தின் கொள்கை ஆவனம்

## பணிப்பாளர்கள் சபை

பணிப்பாளர்கள் சபையின் பொறுப்பானது அரசாங்க கொள்கைகளுடன் இணைந்ததாக அரசாங்க நிறுவனத்தின் திறனையும் பயனையும் உறுதி செய்தல் இது வளங்களை பாதுகாக்கும் வழி, ஒழுங்கான கணக்குகளை பராமரித்தல், கொள்முதல்களின் சரியான அறிக்கைகளை உறுதிப்படுத்தல் மற்றும் முகாமைத்துவத்துடன் தொடர்புடைய அனைத்து சட்டரீதியான மற்றும் ஏனைய சட்ட தேவைகளுக்கு இணங்குதல் ஆகியவற்றின் மூலம் இலக்கை எய்யும்.

பணிப்பாளர்கள் சபையானது நிறுவனத்திற்கு மூலோபாய இலக்குகள் உள்ளது என்பதையும் நிறுவன செயற்பாடுகள் மூலோபாய இலக்குகளை எய்யும் என்பதையும் உறுதிப்படுத்துகிறது. அங்கு உள்ளக வழிநடத்தல்கள் மற்றும் இடர் முகாமைத்துவத்திற்கான பயனுள்ள முறைமை உள்ளது என்பதையும் அந்த முகாமைத்துவ செயற்பாடுகள் பயனுள்ள முறையில் செயற்படுவதையும் வளங்களும் சொத்துக்களும் பயனுள்ள முறையில் உபயோகிக்கப்படுவதையும் முறைமையுடன் மேற்பார்வை செய்ய வேண்டும். பணிப்பாளர்கள் சபையானது வருடாந்தம் பொது முகாமையாளர் மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவ ஊழியர்களின் பெறுபேறுகளை மதிப்பிடுவதுடன் நிதியில் விடயங்களில் போதுமான விபரங்களுடன் ஈடுபட்டுள்ளவர்களை வழங்குவதுடன் முறைமை அடிப்படையில் அதே விடயத்தில் ஏனைய தேவைகளை வெளிப்படுத்த வேண்டும்.

பணிப்பாளர்கள் சபையுடன் கணக்காய்வு மற்றும் இடர் முகாமைத்துவ குழுக்களை நியமிப்பதற்கான பொறுப்பு உள்ளது. நிறுவனமானது தரமான வழிகாட்டல்களுக்கான வழிகாட்டி, நெறிமுறைகள் குறியீடு மற்றும் கூட்டாண்மை வழிநடத்தலின் மூலோபாயங்களை அறிமுகம் செய்துள்ளது. பணிப்பாளர்கள் சபையானது செயற்பாடுகள் மற்றும் உரித்துடமையுடன் தொடர்புடைய எந்தவித முரண்பாடுகளும் தோற்றுவிக்கப்படாத நிலையில் அனைத்து அரசியலமைப்புகளும் வழிகாட்டிகளும் அரசாங்க சுற்றுநிரூபங்களுக்கு அமைய பின்பற்றப்படுகின்றன என்பதை உறுதி செய்ய வேண்டும்.

## பணிப்பாளர்கள் சபையினை நியமித்தல்

அரசாங்கத்தால் பணிப்பாளர்கள் சபை நியமிக்கப்படும்போது அந்த நியமனங்கள் தரம், போட்டி மற்றும் பொறுப்புணர்வு வழியில் மேற்கொள்ளப்பட வேண்டும். பணிப்பாளர்கள் சபையின் பொறுப்புகள், கடமைகள், பொறுப்புணர்வுகள் என்பவை பற்றிய நியமன கடிதத்தில் அதிகாரம் பெற்ற நபரினால் தெளிவாக குறிப்பிடப்பட வேண்டும்.

நியமிக்கப்பட்ட பணிப்பாளர்கள் சபையானது நிறுவனத்தின் மூலோபாய இலக்குகள் மற்றும் கூட்டாண்மை சாதனைகள் நிறுவனத்தின் கூட்டாண்மை வழிநடத்தல், முகாமைத்துவம் மற்றும் நிர்வாக முறைகள் மற்றும் செயற்பாடுகளுடன் தொடர்புடைய பொறுப்புடைமைகளுக்கு நியமிக்கப்படுவர்.

## பணிப்பாளர் சபை கூட்டங்கள்

பணிப்பாளர்கள் சபையானது 2014/2015 ஆம் நிதியாண்டில் 12 கூட்டங்களை நடத்தியுள்ளதுடன் பணிப்பாளர் சபை தாள்கள் ஊடாக முகாமைத்துவம் ஆனது சரியான நேரத்திற்கு குறிப்பிட்ட தகவல்களை சமர்ப்பித்துள்ளது.

## பணிப்பாளர்களின் கொடுப்பனவுகள்

பணிப்பாளர்களுக்கான கொடுப்பனவுகள் அரசாங்கத்தினால் வடிவமைக்கப்பட்ட கொள்கைகள் மற்றும் கொடுப்பனவு அளவுகளுக்கு அமைய வழங்கப்படுகின்றன. இந்த கொடுப்பனவு தொடர்பான தீர்மானங்களில் பணிப்பாளர்கள் தலையிட முடியாது.

## தலைவர்

பூரண கூட்டாண்மை கட்டமைப்பில் தலைவரின் பங்கானது மிகவும் முக்கியமானதாக திகழ்வதுடன் அவர் சரியான வழியில் நிறுவனத்தை செலுத்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது. அவர் கூட்டாண்மை பராமரிப்பினை வழிநடத்தல் ஒவ்வொரு பணிப்பாளரையும் சமமாக நடத்துதல், சரியான முறையில் பொறுப்புகளை விநியோகத்தல், சக்தியையும் அதிகாரத்தையும் சமப்படுத்தல், பணிப்பாளர் சபை கூட்டங்களை தொடர்ச்சியாக நடத்துவதை உறுதிப்படுத்தல், இந்த கூட்டங்களுக்கு அவர் தலைமை வசித்தல் ஆகியவை தொடர்பான செயற்பாடுகள் ஒழுங்கான முறையில் நடத்தப்படுவதை தலைவர் உறுதிப்படுத்த வேண்டும். அவர் தான் திறமைப் பெற்ற துறைகளில் பங்களிப்பினை வழங்குவதுடன் செயற்பாடுகளில் தீவிரமாக ஈடுபடுவதில் இருந்து விலகி இருத்தலுடன் மேற்பார்வை பங்கினை வகித்தல், ஆகியவற்றுடன் அனைத்து பணிப்பாளர்களும் தீவிர பங்கினை வகிப்பதை ஆதரிக்க வேண்டும்.

## பணிப்பாளர்கள் சபையின் செயலாளர்

பணிப்பாளர்கள் சபையில் தொழில்சார் தகைமை பெற்ற செயலாளர் பணிப்பாளர்கள் சபை கூட்டங்கள், மற்றும் வருடாந்த பொது கூட்டங்கள், ஆகியவை தொடர்பாக பணிப்பாளர் சபைக்கு அறிவித்தல், நேரத்திற்கு நேரம் பொருத்தமான விதிமுறைகள் மற்றும் ஒழுங்குமுறைகள் ஆகியவற்றை பணிப்பாளர் சபைக்கு மேம்படுத்தல் போன்றவற்றுக்கு பொறுப்பாக இருப்பார்.

பணிப்பாளர் சபை கூட்டங்களை நடத்துவது பின்பற்றப்படுவது, தொர்பாடன நடைமுறைகளை செயலாளர் உறுதிசெய்வதுடன் பணிப்பாளர்சபை பயனுள்ள வகையில் இயங்குவது, பணிப்பாளர் சபை தாள்கள் நேரத்திற்கு விநியோகிக்கப்படுவது, பொறுப்புணர்வு தொடர்பான வழிகாட்டல்கள், பணிப்பாளர் சபையுடன் தொடர்புடைய தொடர்பான விதிமுறைகளும் நிபந்தனைகளும், பணிப்பாளர் சபை அங்கத்தவர்களும் உதவும் வகையிலான அறிவுறுத்தல்கள் என்பன அவரால் வழங்கப்படும்.

## பொதுமுகாமையாளரும் சிரேஷ்ட முகாமைத்துவமும்

பொதுமுகாமையாளரும் அவரது சிரேஷ்ட முகாமைத்துவமும் நிறுவனத்தின் வர்த்தக முகாமைத்துவத்தை தாங்கிச் செல்வதற்கு பொறுப்புடையதாக இருப்பர். அவர்கள் பணிப்பாளர் சபை மேற்கொள்ளும் தீர்மானங்களுக்கு அமைய கொள்கைகளை திறப்பட ஆரம்பித்து கொடுப்பனவு கட்டன பிரேரணை அறிவுறுத்தல்கள் பொது முகாமையாளர் மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவத்தினருக்கான கட்டணங்களை உறுதி செய்வதற்கு பின்பற்றப்படுகின்றன.

## நிதியியல் அறிக்கைகள்

பணிப்பாளர்கள் சபையானது நிறுவனத்தின் வருடாந்த நிலையையும் பெறுபேறுகளையும் மிகவும் துல்லியமான முறையில் குறிப்பிடும் வகையிலான வருடாந்த நிதியியல் அறிக்கைகளை தயாரிப்பதற்கு பொறுப்புடைவர்களாவர். இலங்கையின் நிதியியல் பதிவு தரங்கள் மற்றும் நிறுவனங்களின் 2007 இன் 7 ஆம் இலக்க சட்டத்திற்கு இணங்க நிதியியல் அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு கையளிக்கப்பட வேண்டும். நிதியியல் அறிக்கைகள் பொது முகாமையாளரை உள்ளடக்கியதாக பணிப்பாளர்கள் சபை மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவத்தினர் தேவைப்படும் போது முக்கியமான தகவல்களை வெளிப்படுத்துவதாக இருத்தல் வேண்டும்.

## வருடாந்த கணக்காய்வு

பட்டயக் கணக்காளர்களின் பட்டியலில் கணக்காய்வாளர் / திறைசேரியினால் பரிந்துரைக்கப்படும் மற்றும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் பரிந்துரைப்படி பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட வெளிப்புற கணக்காய்வாளரால் கம்பனியின் வருடாந்த கணக்காய்வு செய்யப்படுகிறது. வருடாந்த கணக்காய்வு அறிக்கையானது பணிப்பாளர் சபையினால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டதன் பின் வருடாந்த சம்மேளனத்தின் அனுமதிக்காக முன்வைக்கப்படும். கணக்காய்வு நடவடிக்கையின் போது பாரபட்சமின்றி மற்றும் சுதந்திரமான தீர்மானத்தில் ஏற்படும் பாதிப்புக்களின் ஆலோசனை மற்றும் ஏனைய சேவைகள் வழங்குவதில் விலகியிருப்பதோடு, இவ்வெளிக் கணக்காய்வாளர்கள் ஒவ்வொரு 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை மாற்றப்படுவார்கள்.

## கணக்காய்வு மற்றும் இடர் முகாமைத்துவ குழு

நிறுவனத்தின் கணக்காய்வு மற்றும் இடர் முகாமைத்துவ குழுவானது நிர்வாகப் பணியில் பணிப்பாளர்கள் சபைக்கு உதவுவதில் முக்கிய பங்கினை வகிக்கிறது. இந்த குழுவானது திறைசேரியில் நிதியியல் தகைமை பெற்ற பிரதிநிதியுடன் பணிப்பாளர் சபையின் 3 நிறைவேற்று தகைமையற்ற அங்கத்தவர்களை உள்ளடக்குகிறது. இந்த பிரதிநிதி கணக்காய்வு குழுவின் தலைவர் பதவியை வகிக்கிறார்.

# கம்பனியின் நிறுவன ரீதியிலான கட்டமைப்பு




| | | |
|---|---|---|
| **D.M** | - | பிரதி முகாமையாளர் |
| **A.M** | - | உதவி முகாமையாளர் |
| **J.M** | - | கனிஷ்ட முகாமையாளர் |
| **M.A** | - | முகாமை உதவியாளர் |
| **E.P.S.C** | - | ஆரம்ப தொழில் தேர்ச்சி சேவைகள் பிரிவு ஊழியர்கள் |
| **E.P.S.C** | - | ஆரம்ப அறை – தொழில் தேர்ச்சி சேவைகள் பிரிவு ஊழியர்கள் |
| **E.N.P.S.C** | - | ஆரம்ப நிலை அல்லாத தொழில் தேர்ச்சி பெற்ற சேவைகள் பிரிவு ஊழியர்கள் |




# இடர் முகாமைத்துவம்

## இடர் முகாமைத்துவ செயல்முறை

நிறுவனத்தின் இடரை வெளிப்படுத்துவதற்கான அடையாளமும் அங்கீகாரமும் இடர் முகாமைத்துவத்தினால் தீர்மானிக்கப்படுகிறது. நிறுவனமானது நஷ்டங்களை புறக்கணிக்கவும் நஷ்டங்களால் ஏற்படும் பாதிப்புகளை புறக்கணிக்கவும் பயனுள்ள திட்டத்தை தயாரிக்கிறது என்பதை இது உறுதிப்படுத்துகிறது. இடர் முகாமைத்துவமானது இடர்களை அடையாளம் காணும் முகமாக தெளிவான ஒரு கட்டமைப்பு வழியை வழங்குகிறது. அனைத்து கட்டுப்பாடுகள் தொடர்பாக தெளிவான ஒரு புரிந்துணர்வினை அடைவதற்கு நிறுவனமானது மதிப்பீடு செய்து அதற்கு முன்னுரிமை அளிப்பதுடன் இந்த இடர்களை குறைப்பதற்கு தேவையான படிகளை எடுக்க வேண்டும்.

நிறுவனமானது இந்த கவனக்குறைவினை அடையாளம் காணவும் மதிப்பீடு செய்யவும் குறைக்கவும் மாற்றவும் உடனடியாக விருத்தி செய்யப்பட்ட செயற்பாடுகளை பின்பற்ற வேண்டும். எமது இடர் முகாமைத்துவ முறைமையின் பிரதான நோக்கமானது எமது வர்த்தகம் சார்ந்த செயற்பாடுகளின் இடர்கள் தொடர்பாக பூரண அவதானம் செலுத்தி உதவுவதாகும். இடர்களை அடையாளம் காண்பதுடன் மதிப்பீடு செய்வதும் முதன்மையானதாகும். பல விடயங்கள் செய்யப்படுவது அவசியம். இதன் பின்னர் அடையாளம் காணப்பட்ட இடர்களை புறக்கணிக்கவும் குறைக்கவும் மாற்றவும் திட்டமிடப்பட்ட மூலோபாயங்கள் பயன்படுத்தப்பட வேண்டும். பணிப்பாளர்கள் சபையானது நிறுவன செயற்பாடுகளை மையமாகக் கொண்ட பயனுள்ள இடர் முகாமைத்துவ முறைமையை உறுதி செய்ய வேண்டும்.

## பிரதான இடர் காரணிகள்

எமது நிறுவனத்தில் சில இடர் காரணகளுக்கான தன்மைகள் காணப்படுவதுடன் செயற்பாட்டு அமைப்பில் நிச்சயமற்ற நிலையில் இவை நிலவுகின்றன. நிறுவனத்தினால் எதிர்நோக்கப்படும் அந்த இடர்காரணிகளை குறைப்பதற்கான படிகள் பற்றி பின்னர் கலந்துரையாடப்படும்.

## மூலோபாய இடர்பாடுகள்

இடர்கள் எமது மூலோபாய நோக்கங்களில் பாதிக்கப்பட்ட நிச்சயமற்ற தன்மை காரணமாகவும் பயன்படுத்தப்படாத வாய்ப்புகள் காரணமாகவும் ஏற்படும் போது மூலோபாய இடர்கள் என அழைக்கப்படுகின்றன. நிறுவனத்தின் இலக்குகளுக்கு அமைய பணிப்பாளர்கள் மேற்கொள்ளும் பிரதான முடிவுகளில் இருந்து பிரதானமாக இவ்வகையான இடர்கள் எழுகின்றன. மூலோபாய இடரின் பின்னால் உள்ள பிரதான தத்துவமானது எமது பிரேரிக்கப்பட்ட நிறுவன இலக்குகளை அடைவதில் தோல்வியாகும்.

இதனை கருத்திற்கொண்டு பணிப்பாளர்கள் சபை மற்றும் முகாமைத்துவ குழு என்பன 5 வருடங்களை கொண்ட எதிர்கால கூட்டுத்திட்டம் ஒன்றையும் 3 வருடங்களை கொண்ட செயற்றிட்டம் ஒன்றையும் மற்றும் வருடாந்த திட்டம் ஒன்றையும் அடிப்படையாக் கொண்ட திட்டமிட்ட பிந்திய ஆய்வு ஒன்றினை மேற்கொள்ளவுள்ளது.

## வர்த்தக இடர்கள்

இந்த இடர்கள் உற்பத்தியை பாதிக்கும் உற்பத்தி, சந்தைப்படுத்தல், உற்பத்திகளின் விற்பனை, பொருளாதார இடர்கள் ஆகியவற்றுடன் தொடர்புடைய இடர்களை உள்ளடக்குவதுடன் தொழில்நுட்ப சூழல் மற்றும் வாடிக்கையாளர் தெரிவுகள் மாற்றங்களினால் ஏற்படும் இடர்கள். எமது வர்த்தகத்துடன் தொட்புடைய பிரதான உள்ளக இடர்கள் பழைய உற்பத்திகளுடன் ஒப்பந்தம் செய்யக்கூடிய இயலாமை மற்றும் புதிய உற்பத்திகளுடன் தொடர்புடைய இடர்கள் பழைய உற்பத்திகளுடன் ஒப்பந்தம் செய்வதற்கான இயலாமை 4 மடங்காகும். அதாவது வாடிக்கையாளர்களின் தேவைகளை புரிந்து கொள்வதற்கான இயலாமை, தொழில்நுட்பம், கைத்தொழில் மற்றும் பொருளாதார காரணிகள் மற்றும் தத்துவார்த்த தேவைகள்.

நிறுவனமானது வாடிக்கையாளர்களின் மாற்றங்கள் நிமித்தம் வாடிக்கையாளர்களுக்கு திருப்தி மற்றும் மதிப்பீடுகள் மீதான திட்டமிட்ட புள்ளிவிபர ஆய்வினை நடத்துகிறது. நிறுவனத்தின் சட்ட விதிகள் மற்றும் சிபாரிசுகளின் எதிர்கால மாற்றங்களை அறிந்து கொள்வதற்கு நிறுவனமானது முன்னணி சட்ட சபைகள் மற்றும் நிறுவனங்களான அரசாங்க தென்னை ஆய்வு நிலையம், தேயிலை ஆராய்ச்சி நிலையம், இறப்பர் ஆராய்ச்சி நிலையம் ஆகியவற்றுடன் நெருங்கி செயற்படுகிறது.

சந்தை மற்றும் வாடிக்கையாளர்களின் தேவைகளுக்கு ஏற்ப பூரண கற்கைகளின் பின்னரே புதிய உற்பத்திகள் அறிமுகப்படுத்தப்படுகின்றன.

## வர்த்தகமற்ற இடர்கள்

இந்த இடரானது பிரதான வர்த்தகத்துடன் தொடர்பற்று இருப்பதுடன் இது பிரதானமாக நீண்டகால நிதியியலுடன் தொடர்புடையதாக உள்ளது. இந்த நிதியியல் தேவைகளை நிறைவேற்றுவதற்கு நீண்ட காலத்துக்கான நிதி பெறுதலை கருத்திற்கொண்டு எதிர்கால 5 வருடங்களுக்கான செயற்றிட்டம் எனும் காரணிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. பணம் உள்ளே வருவதும் நிறுவனத்தில் இருந்து வெளியே செல்வதும் திட்டமிட்ட வருடாந்த வரவு - செலவு திட்டம் மூலம் திறனுள்ளதாக ஆக்கப்பட்டுள்ளதுடன், கொள்முதலீட்டு திட்டம் மற்றும் எந்தவித உடனடி பண தேவைகளும் எழம்பமாட்டாது.

## செயற்பாட்டு இடர்கள்

நிறுவனத்தின் அடிமட்டப்பகுதியில் என்ன நடக்கிறது என்பது தொடர்பான யோசனையை இது உங்களுக்கு அளிக்கிறது. செயற்பாட்டு இடர்கள் நேரடியாக நிறுவனத்தின் பிரதானமாக உள்ளக வளங்கள், முறைமைகள், செயற்பாடுகள் மற்றும் ஊழியர்களில் தங்கியுள்ளது. அத்துடன் இது இயற்கை சூழ்நிலைகளான அதாவது கடைகளின் பன்முக செயற்பாடுகள் மற்றும் இயந்திரம், ஊழியர்களுக்கான செலவு மற்றும் மோசமான காலநிலை செயற்பாடுகள் ஆகியவற்றை உள்ளடக்குகிறது.

- பாரிய தீ பாதுகாப்பு முறையானது போதுமான தீயணைப்பாளர்கள் மற்றும் எச்சரிக்கை முறைமையை கொண்டதாக நிறுவனத்தால் பராமரிக்கப்படுகிறது.

- தீ காரணமாக சேதங்கள் ஏற்படும் போது அதனை ஈடு செய்யும் முகமாக நிறுவனமானது தீ காப்புறுதி காப்பீடு ஒன்றினை கொள்வனவு செய்துள்ளதுடன் மேலதிக இலத்திரனியல் காப்புறுதியை அல்ட்ரா தன்மையான ஆய்வுகூட சாதனத்துக்காக கொண்டுள்ளது.

- கொள்கை மற்றும் ஊழல் காரணமாக ஏற்படும் தாக்கத்தை குறைக்கும் முகமாக பண பாதுகாப்பு காப்புறுதியும் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

- ஒவ்வொரு இறக்குமதி செய்யப்படும் பொதி சரக்கு கப்பலுக்கும் போதுமான கடல் காப்புறுதி சான்றிதழ்கள் கொள்வனவு செய்யப்படுகின்றன.

- பணம் மற்றும் பணம் தொடர்புபடாத ஊழியர் திட்டங்களுக்கு அமைய நிறுவனத்தின் ஊழியர்களுக்கான செலவு குறைந்த மட்டத்தில் உள்ளது.

## பண இடர்கள்

பண சாதனத்தை பயன்படுத்துவதில் கடன் இடர், திரவ இடர் மற்றும் சந்தை இடர் ஆகியவற்றை உள்ளடக்கியதாக நிறுவனமானது பண இடரினை கொண்டுள்ளது.

## கடன் இடர்

நிறுவனத்தின் பொறுப்புகளுக்கு அமைய தொடர்புடைய தரப்பினர் உடன்படாத பட்சத்தில் கடன் இடர் ஆனது நிறுவனத்தின் நிதியியல் நஷ்டத்துடன் தொடர்புடைய இடர் ஆகிறது. கடன் இடர் ஆனது பிரதானமாக நிதியியல் நிறுவனங்களுடன் கடன் மற்றும் பண வைப்புகள் மீதான விற்பனைகள் காரணமாக கடன் இடர் எழுகிறது. இடர்களை குறைப்பதற்கு

- விநியோகஸ்தர்களை நியமிக்க முதல் பிராந்திய சந்தைப்படுத்தல் முகாமையாளர்கள், பிரதம உள்ளக கணக்காய்வாளர், நிதியியல் முகாமையாளர் மற்றும் நிறுவனத்தின் சட்ட உத்தியோகஸ்தர்கள் உள்ளிடக்கிய குழுவில் ஒவ்வொருவரும் விரிவான ஆராயச்சியினை செய்யக்கூடிய திறன் படைத்தவர்கள் ஆவர்.

- கடன் வசதிகளை வெளியிட முன்னர் விநியோகஸ்தர்கள் மற்றும் தொடர்புடைய தரப்பினரிடமிருந்து வங்கி உத்தரவாதங்கள் பெறப்படுகின்றன.

- கடன் காலங்கள் மற்றும் பெறுமதி வரையறைகள் விநியோகஸ்தர்கள் மற்றும் தொடர்புடைய தரப்பினருக்கு கடன் ஆய்வாளர்களினால் செய்யப்படும் முடிவுகளுக்கு அமைய குறிப்பிடப்படும்.

## திரவ இடர்

நிறுவனத்தால் நிதியியல் பொறுப்புகளை எதிர்நோக்க முடியாத நிலைமை ஆனது இயலாமை என அழைக்கப்படுகிறது. திரவநிலையை முகாமைத்துவம் செய்யக்கூடிய நிறுவனத்தின் அணுகு முறையானது பொதுவான மற்றும் எதிர்பாராத பொறுப்புகள்



# இடர் முகாமைத்துவம்

எழும்போது அதனை எதிர்நோக்கக் கூடிய போதுமான அளவு பணம் உள்ளது என்பதை உறுதி செய்ய வேண்டும். எதிர்கால 5 வருடங்களுக்கான கூட்டு திட்டம் மற்றும் எதிர்கால 3 வருடங்களுக்கான செயற்றிட்டம் நிறுவனத்தின் பண வெளிப்பாய்ச்சலின் முன்கூட்டிய அடையாம் காண உதவுவதுடன் இந்த பணப்பாய்சசலின் காரணிகள் மேலும் நிறுவனத்திற்கு வரும் நிறுவனத்தில் இருந்து செல்லும் பணப்பாய்ச்சல்கள் பயனுள்ள வகையில் ஆக்கப்படுவதுடன் வருடாந்த அறிக்கை மற்றும் கொள்முதல் திட்டத்திற்கு இணங்க அனைத்து நிதியியல் பொறுப்புகளை முடித்து வைப்பதற்கு வசதிகள் வழங்கப்படுகின்றன.

## சந்தை இடர்

ஏற்ற இறக்கமான வெளிநாட்டு பணப்பரிமாற்றத்திற்கு இணங்க வட்டி வீதங்கள் ஏறி இறங்குவதால் சந்தை விலையின் ஏற்ற இறக்கமானது சந்தை இடர் என அழைக்கப்படுகிறது. இது நிறுவனத்தின் வருமானம் மற்றும் நிதியியல் சாதனத்தை பராமரிக்கும் கொள்ளவை பாதிக்கிறது.

## நாணய பரிமாற்ற இடர்

பரிமாற்று நாணய இடரானது அமெரிக்க டொலருக்கு எதிராக இலங்கை ரூபாவின் வலு ஏறி இறங்குவதால் நிறுவனத்தை பரிமாற்று நாணய இடருக்கு உள்ளாக்குகிறது.

## வட்டி இடர்

குறிக்கப்பட்ட வட்டி வீதம் மற்றும் வங்கி வைப்புகளுக்கான வட்டி வீதத்தின் கீழ் கடன் கொள்வனவுகளுக்கான சந்தை வட்டி வீதங்களுக்கான ஏற்ற இறக்கம் வட்டி இடர் என அழைக்கப்படுகிறது.

## ஒழுக்காற்று இடர்

உரத்தின் இறக்குமதி, உற்பத்தி, விநியோகம் மற்றும் நுகர்வு தொடர்புடைய அரசாங்க விதிகள் மற்றும் அரசாங்க நிறுவனங்களான அதாவது தென்னை ஆராய்ச்சி நிலையம், தேயிலை ஆராய்ச்சி நிலையம், இறப்பர் ஆராய்ச்சி நிலையம் போன்றவற்றினால் வலியுறுத்தப்படும் சிபாரிசுகள் என்பனவற்றில் மாற்றங்கள் மேற்கொள்ளப்படும்போது இதன்படியே நடப்பதற்கு நிறுவனத்திற்கு ஒழுக்காற்று அதிகாரம் உள்ளது. இந்த ஒழுக்காற்று அமைப்பில் ஏதாவது சாத்தியமான மாற்றத்தினை அடையாளம் காண்பதற்கு நிறுவனமானது இந்த நிறுவனங்களுடன் நெருங்கி செயற்படுகிறது.

எவ்வாறாயினும் இந்த இடர் காரணிகள் இந்த பட்டியலினை வரையறை செய்யாததுடன் நிறுவனமானது இவ்வாறான மாற்றங்கள் தனது செயற்பாடுகளை பாதிக்கக்கூடாது என்பதில் எச்சரிக்கையாக உள்ளது.

# கணக்காய்வு மற்றும் இடர் முகாமைத்துவ குழுவின் அறிக்கைகள்

2017 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டில் பணிப்பாளர்கள் சபையினால் சிபாரிசு செய்யப்பட்ட பணி விதிகளுக்கு அமைய கணக்காய்வு மற்றும் இடர் முகாமைத்துவ குழுவானது செயற்பட்டுள்ளது.

## கூட்டுக்குழு

கணக்காய்வு மற்றும் இடர் முகாமைத்துவ குழுவானது பணிப்பாளர்கள் சபையினால் நியமிக்கப்பட்டுள்ளதுடன் மூன்று நிறைவேற்று தகைமையற்ற பணிப்பாளர்கள் மற்றும் குழுவின் தலைவராக திறைசேரி பிரதிநிதி ஒருவரையும் கூட்டங்களில் பங்குபற்றும் அவதானிப்பாளர்களையும் கொண்டுள்ளது. 2015/2016 ஆம் ஆண்டுக்கான குழு அங்கத்தவர்கள்

1) திருமதி ஜே.எம்.எஸ்.டி. ரத்னாயக்க
குழு தலைவி

2) திருமதி. அனோஜா ஹேரத்
குழு அங்கத்தவர்.

3) திரு. ஹேமக்க லசித்த பாலசூரிய
குழு அங்கத்தவர்

4) திருமதி. ஆர்.பி. சுனந்த பத்மினி
அவதானிப்பாளர்

5) திரு.பி.எல். நாமசேன
அவதானிப்பாளர்

## குழு கூட்டங்கள் மற்றும் வருகைகள்

கணக்காய்வு குழுவானது இந்த நிதியாண்டில் 4 தடவைகள் முறையாக கூடியிருந்தது. பிரதம உள்ளக கணக்காய்வாளர் கணக்காய்வு குழுவின் கூட்டுனராக செயற்பட்டதுடன் குழுவின் அமைப்புக்கிணங்க பொது முகாமையாளர், சம்பந்தப்பட்ட பிரிவு தலைவர்கள், மற்றும் ஏனைய அதிகாரிகள் இந்த கூட்டங்களில் கலந்து கொண்டு விளக்கங்களை வழங்கியிருந்தனர். கூட்டங்களுக்கான வருகையின் விபரங்கள் கீழ் காணலாம்:

## கூட்டங்களும் வருகையும் -2016/2017

| திகதி | திருமதி. ஜே.எம்.எஸ்.டி. ரத்னாயக்க | திருமதி. அனோஜா ஹேரத் | திரு. ஹேமக்க லசித்த பாலசூரிய | திருமதி. ஆர்.பி. சுனந்த பத்மினி | திரு.பி.எல். நாமசேன |
|---|---|---|---|---|---|
| 27.02.2017 | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ |
| 19.12.2016 | ✓ | × | ✓ | ✓ | ✓ |
| 13.09.2016 | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ |
| 17.05.2016 | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ |
| | **4/4** | **3/4** | **4/4** | **4/4** | **4/4** |

## குழுவின் கடமைகள்

1. நிதியியல் அறிக்கைகளை சரியாகவும் நேர்மையாகவும் பகுப்பாய்வு செய்வது நிதியியல் அறிக்கைகள் இலங்கை மற்றும் சர்வதேச கணக்கியல் தரங்களுக்கு அமைய தயார் செய்யப்பட்டுள்ளன என்பதை உறுதிப்படுத்துவதற்கு ஆகும்.

2. உறுதிப்படுத்தல், பொருளாதாரத்தை மீள்பாவனை செய்தலும் மதிப்பீடு செய்தலும், நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையின் திறனும் பயன்களும்

3. நிறுவனத்தின் இடர் முகாமைத்துவ முறைமையின் பயன்களை மீள்பார்வை செய்தல்.

4. வெளியக கணக்காய்வாளர்களுடன் கலந்துரையாடல் மேற்கொள்வதுடன் கணக்காய்வாளரின் முகாமைத்துவ கடிதத்தை மீள்பார்வை செய்தல்.

5. சங்கத்தின் கட்டுரைகள், விதிமுறைகள், நிபந்தனைகள் மற்றும் சுற்று நிரூபங்கள் தொடர்பான இணக்கத்தை உறுதிப்படுத்தல்.

6. உள்ளக கணக்காய்வு அறிக்கைகள்ஃ வெளியக கணக்காய்வு அறிக்கைகளை மீள்பார்வை செய்தல்.

7. அரசாங்க நிறுவனங்களின் குழுவின் சிபாரிசுகளையும் ஆணைகளையும் நிறைவேற்றுதல்.

## வருடத்தின் நடவடிக்கைகள்

குழுவானது நிதியியல் அறிக்கையிடல் முறைமைய மீள் பார்வை செய்வது ஆனது சம்பந்தப்பட்ட தரப்புகள் துல்லியமானதும் நம்பகத் தன்மையானதுமான தகவல்களை வழங்குவதை உறுதிப்படுத்துடன் அதன் அவதானிப்புகள் இலங்கை மற்றும் சர்வதேச கணக்கியல் தரங்கள் மற்றும் சம்பந்தப்பட்ட பகுதி சார்ந்த பரிவர்த்தனைகள் தொடர்பாக விசேட கவனத்தை செலுத்துகிறது.

## உள்ளக கணக்காய்வு

நிறுவனமானது மிகச்சிறந்த உள்ள கணக்காய்வு பிரிவினை கொண்டுள்ளதுடன் அதன் ஊழியர்கள் கணக்காய்வு, நிதியியல் கணக்காய்வு, வரி மற்றும் வர்த்தக நிர்வாகம் போன்றவை உள்ளடங்கலாக பல்வேறு பகுதிகளை பிரதிநிதித்துவப்படுத்தும் அனுபவம் வாய்ந்த தொழிற்தகைமையாளர்களையும் கொண்டு விளங்குகிறது.

### உள்ளக கணக்காய்வு பிரிவின் பிரதான நோக்கங்கள்

1. கணக்கியல் மற்றும் உள்ளக கட்டுப்பாட்டு முறைமைகளை மீட்டல்.

2. நிதித் தேர்வு மற்றும் செயற்பாட்டுத் தகவல்

3. செயற்பாடுகளின் பொருளாதாரம், திறன் மற்றும் பயன்களை மீள்பார்வை செய்தல்.

4. முகாமையாளர்களிடம் ஒப்படைக்கப்பட்ட செயற்பாடுகள் மற்றும் திட்டங்கள் சிறந்த மதிப்பீட்டுடன் கட்டுப்பாட்டில் உள்ளதை உறுதிப்படுத்துவதுடன் இந்த செயற்பாடுகளும் திட்டங்களும் திட்டமிட்டதற்கு இணங்க முன்னெடுக்கப்பட்டதையும் செயற்பாட்டு பெறுபேறுகள் நிர்ணயிக்கப்பட்ட இலக்கு நோக்கி பயணிப்பதையும் உறுதிப்படுத்துகிறது.

5. சட்டங்கள், விதிகள் மற்றும் ஏனைய வெளியக தேவைகள் முகாமைத்துவ கொள்கைகளுக்கிணங்க இருப்பதை உறுதிப்படுத்தல்.

6. விசேட கண்டுபிடிப்புகளை நடத்துதல்.

கணக்காய்வு குழுவானது அறிக்கையிடல் காலத்தில் உள்ளக கணக்காய்வு செயற்பாடுகளையும் உள்ளக கணக்காய்வு திட்டம், பிராந்திய உர விற்பனையகங்களின் கணக்காய்வு திட்டங்கள், இடர்களை அடிப்படையாகக் கொண்ட ஒழுக்காற்று இடர் மதிப்பீட்டு முறைமை மற்றும் கணக்காய்வு திட்டங்களை மையமாகக் கொண்டும் மேற்பார்வை செய்கிறது. இந்த கணக்காய்வு குழுவானது மதிப்பீட்டுக்குரிய ஆண்டில் உள்ளக கணக்காய்வாளரின் அறிக்கைகள் மற்றும் சிபாரிசுகள் தொடர்பாக உள்ளக கணக்காய்வாளருடன் கலந்துரையாடுகிறது.

40 பிராந்திய உர நிலையங்கள் மற்றும் 8 பிரதான பிரிவுகளின் உள்ளக கணக்காய்வு அறிக்கைகள் மதிப்பீடு செய்யப்பட்டதுடன் மொத்த உள்ளக கட்டுப்பாட்டு முறைமைகள் மற்றும் உள்ளக கணக்காய்வு செயற்பாடுகளில் இருக்கத்தக்க வளர்ச்சி அவதானிக்கப்பட்டது.

நிறுவனத்தின் பிரதம உள்ளக கணக்காய்வாளர் விவசாய அமைச்சில் காலாண்டு அடிப்படையில் முக்கிய விடயங்களை கலந்துரையாடுவது தொடர்பாக இடம்பெறும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டங்களிற்கு சமூகமளிக்கிறார். தகவல் தொழில்நுட்ப கணக்காய்வு பிரிவானது துணை உர விற்பனையாளருக்கு உர விநியோகத்தின் போது ஊழலை கட்டுப்படுத்துவதற்கு தகவல்களை வழங்க விரும்பும் அரசாங்க மற்றும் விரும்பும் தரப்பினருக்கு தகவல்கள் வழங்குவதை இரகசியமாக உறுதிப்படுத்துவதற்கு அமைக்கப்பட்டது. இவ்விடயம் தொடர்பாக கணக்காய்வாளர் நாயக திணைக்களம், வழக்கறிஞர் நாயக திணைக்களம், மற்றும் கொள்கை திணைக்களம் ஆகியவற்றின் ஆதரவு நீடிக்கப்பட்டமை வரவேற்கப்படுகிறது.

## வெளியக கணக்காய்வு

கணக்காய்வாளர்கள் நாயக திணைக்களமானது நிறுவனத்தின் வெளியக கணக்காய்வாளராக செயற்படுகிறது.

## குழுவுக்கு வழங்கப்படும் ஆதரவு

குழுவின் தலைவர் மற்றும் முகாமைத்துவ குழு அங்கத்தவர்கள், ஆகியோரால் எதிர்பார்க்கப்பட்ட ஆதரவு குழுவுக்கு வழங்கப்படுவதுடன் அறிக்கையிடும் காலத்தில் குழுவானது பயனுள்ள முறையிடல் இயங்குவதற்கு இது பாரிய உதவி ஆகும்.

## குழு மதிப்பீடு

குழுவின் பணி செயற்பாடுகள் பணிப்பாளர்கள் சபையினால் மதிப்பீடு செய்யப்படுவதுடன் மீளாய்வினை சிறப்பாக செயற்படுகின்றனர். பணி செயற்பாடுகளை பயனுள்ளவை என முடிக்கின்றனர்.

**திருமதி ஜே.எம்.எஸ்.டி. ரத்னாயக்க**
தலைவி,
கணக்காய்வு மற்றும் இடர் முகாமைத்துவ குழு,
31 மே 2017

# தகவல் மற்றும் தொழிநுட்பப் பிரிவு அறிக்கை

தகவல் தொழில்நுட்பப் பிரிவானது தகவல் தொழில்நுட்ப கொள்கை மற்றும் திட்டமிடல், மென்பொருளுக்கான விண்ணப்பம் மற்றும் பராமரிப்பு, வன்பொருளுக்கான கையகப்படுத்தல் மற்றும் பராமரிப்பு, வலையமைப்பின் அபிவிருத்தி மற்றும் பராமரிப்பு, தரவு/ தகவல் முகாமைத்துவத்தின் திறனையும் பயனையும் உறுதி செய்தல், வலைத்தள பராமரிப்பு மற்றும் தகவல் பாதுகாப்பினை உறுதி செய்தல் ஆகிய செயற்பாடுகளை செயற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. விமர்சனத்துக்குள்ளாகும் ஆண்டில் அதன் நடவடிக்கைகள் கீழ்வருவனவாகும்.

- இலங்கை உரக் கம்பனி தலைமையகத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட நிறுவன வளங்கள் திட்டத்தின் (ERP) மென்பொருள் முறைமையை நிறைவேற்றுதல்.

- ஆரம்பத்தில் பொலனறுவை, வீரவில, குருவிற்ற, மத்துகம உட்பட பல்வேறு 10 பிராந்திய உர நிலையங்களை ERF முறைமையுடன் VPN ஊடாக இணைத்தல்.

- தலைமை அலுவலக கட்டிடத்தில் 250 கணினிகளை இணைப்பதற்காக உள்நாட்டு பகுதி வலையமைப்பினை தரமுயர்த்தல் (ஏற்கனவே 130 இணைக்கப்பட்டுள்ளது)

- தலைமை அலுவல கட்டிடத்தில் இருந்து அலுவலக கையடக்க தொலைபேசிகள் மற்றும் மடிக்கணினிகள் வரை பாதுகாப்பு Wi-Fi வலையத்தை அறிமுகப்படுத்தல்.

இலங்கை உரக்கம்பனியின் வர்த்தக வள திட்ட செயற்திட்டத்தின் அடிப்படை நோக்கமானது மொத்த கொள்முதல் முதல் திட்ட நடவடிக்கைகள் வரை, வாடிக்கையாளர்களுக்கு மேற்கொள்ளும் இறுதிக் கப்பலேற்றம் வரை அதன் விநியோக வலைப்பின்னல் செயல்பாடுகள் பரிசீக்கப்படும். நிறுவனத்தின் தரவுகள் தொடர்பாக இவ்வொன்றிணையும் இலக்கினால் செயல்பாட்டு மற்றும் நிறுவன எல்லைகளின் மூலம் தகவல்களை பகிர்ந்தளித்தல் மற்றும் ஒத்துழைப்புடன் செயல்படுவது வளர்ச்சிக்கான நோக்கமாகும்.

கம்பனியினால் வியாபார வளத்திட்டத்தை பயன்படுத்துவது அதன் உள்ளக நடவடிக்கைகள் மிகவும் ஆற்றல் மிக்கதனாலாகும். அக்காலத்தில் இவ்வமைப்பின் தகவல் பரிமாறலினால் தரவுகளை சேகரிக்கத்தல், பகுப்பாய்வு மற்றும் அறிக்கையிடல் இலகுவாக்குதோடு, அதனூடாக தீர்மானம் எடுக்கும் திறன் மேலோங்கிக் காணப்படும். வியாபார வளத்திட்டத்திற்காக திட்டமிடுதல், தொகைகளை மீண்டும் சேமித்தல் மற்றும் உற்பத்திக் கால திட்டமிடல் தேவைப்படுவதோடு, அதனூடாக பல்நிலை தரவு கோப்புகள் மற்றும் வெவ்வேறான அறிக்கையிடப்படும் அமைப்புகள் பயன்பாட்டின் தேவைகள் குறையும். முகாமைத்துவத்திற்கு ஏற்ற அதே நேரத்தில் உருவாக்க முடியுமென்பதால் இச்செயல்பாட்டினால் உற்பத்தித் தாமதங்களை குறைத்துக்கொள்ள முடியும். விபாயார வளத்தேவையானது குறைவதோடு அதன் செலவுகளும் குறையும்.

## சிறப்பு அம்சங்கள்

### கொள்முதல் மற்றும் கப்பல்

- திட்டமிடல்
  - பொருள்/ விற்பனையாளர்/ கொள்முதல் கோட்/ முன்னறிவிப்பு/ திட்டமிட்ட உற்பத்தி ஒழுங்கு
- ஒழுங்கு நடைமுறைப்படுத்தல்
  - விலைமனுக் கோரல்
  - போர்த்தியின் விலைமனுக் கோரல்
  - கொள்முதல் ஒழுங்கு - உள்நாடு/ இறக்குமதி
  - கொள்முதல் விலைப்பட்டியல்
- தொகை மற்றும் செலவு
  - பொருள்/ SKU / N சேமிப்புப் பொருள்
- வரலாறு
  - GRN / விலைப்பட்டியல் (AP)
- பகுப்பாய்வு மற்றும் அறிக்கை

### விநியோகம் மற்றும் சந்தைப்படுத்தல்

- விநியோகம்
  - தொடர்பாளர்
  - வாடிக்கையாளர்
  - விநியோகிப்பவர்
- ஒழுங்கு நடைமுறைப்படுத்தல்
  - விலைமனுக் கோரல்
  - போர்த்தியின் விலைமனுக் கோரல்
  - விற்பனை ஒழுங்கு - விநியோகம்
  - விற்பனை விலைப்பட்டியல்
- வரலாறு
  - தபால் செய்யப்பட்ட விற்பனை விலைபட்டியல்
  - தபால் செய்யப்பட்ட கப்பல் தொகை
- அறிக்கை மற்றும் பகுப்பாய்வு

### நிதியியல் முகாமைத்துவம்

- பொது லெஜர்

- பண முகாமைத்துவம்
- செலவு கணக்கு
- காசுப் பாய்ச்சல் கணிப்பு
- வரவுகள்
- கொடுப்பனவுகள்
- நிலையான சொத்துக்கள்
- இருப்பு
- காலக்கெடு செயற்பாடுகள்

## விநியோகம், பண்டகசாலை மற்றும் இருப்பு

- ஒழுங்குகள் மற்றும் தொடர்புகள்
  - இடம்/PO/SO/TO/ உற்பத்தி ஒழுங்குகள்

- திட்டமிடல் மற்றும் நடைமுறைப்படுத்தல்
  - பொருள் மறுசீரமைப்பு

- இருப்பு
  - பொருள் விபரம்
  - பரிமாற்று ஒழுங்குகள் - இடமாற்றம்
  - மீள் மதிப்பீட்டு விபரம்
  - உடல் ரீதியான விபரம்

- வரலாறு
  - பரிமாற்ற ரசீதுகள் / கப்பலேற்றம் / GRN

- பகுப்பாய்வு மற்றும் அறிக்கை

## உற்பத்தி

- உற்பத்தி திட்டம்
  - உற்பத்தி BOM
  - வழிகள்

- கொள்ளளவு
  - இயந்திர மையம்
  - சேவை மையம்

- திட்டமிடல்
  - தொகை இருப்புப் பிரிவு
  - உற்பத்திக் கணிப்பு

- நடைமுறைப்படுத்தல்
  - தெளிவான திட்ட உற்பத்தி ஒழுங்குகள்
  - வெளியிட்ட உற்பத்தி ஒழுங்குகள்

- செலவு - SKU

## முகப் பக்கம்

- மைக்ரொசொப்ட் அவுட்லுக்
- பொது வரைபடங்கள் - முப்பரிமானம்
- பாவனையாளரின் அடிப்படை இடைமுகம்
- காசுப் பாய்ச்சல் கணிப்பு
- எனது அறிவிப்புகள்
- இணைய வாடிக்கையாளர்
- ஒன்லைன் தொடர்பு

## மனிதவளம் ஃ ஊதியம் மற்றும் நேர வருகை

- ஊழியர் விபரம்
- வருகை
- மேலதிக நேரம், ஊக்கத்தொகை, போனஸ் மற்றும் கொடுப்பனவுகள்
- கடன்
- ஒன்றிணைந்த சம்பள விபரம்
- அறிக்கைகள்
  - சம்பளத் தாள்
  - சம்பளத் துண்டு
  - சீ படிவம்
  - சில்லறை பகுப்பாய்பு
  - துண்டு பரிமாற்றம்

## BI கருவி

- நினைவக அடிப்படையில் BI கருவி
- அவ்வாறாயின் பகுப்பாய் என்ன
- வெளிக்கள பகுப்பய்வு
- பங்கு சார்ந்த பயனர் கட்டுபாடுகள்
- ஒரே நேரத்தில் பல தரவுத்தளங்கள்
- இணையம் சார்ந்த பயனர் அணுகல்



### முடிவுடனான தீர்வு

- அனைத்துக்கு ஒவ்வொரு தீர்வு
- தரவுகளுக்கு நகல் இல்லை
- ஏனைய SQL தரவு கோப்பு முறைமைகளுடன் ஒன்றிணைதல்.



### இலகுப் பாவனை

- மயிக்ரோசொப்ட் ஒபிஸ் - எக்சல், வர்ட், ஈ-மேல், O365 போன்றவற்றுடன் உள்ளக ஒருங்கிணைப்பு
- பழக்கமான இடைமுகம்
- இணையத்தை அடிப்படையாகக் கொண்டது



### மென்பொருள் + சேவைகள்

- மயிக்ரோசொப்ட் சிறந்த நடைமுறைகளை அடிப்படையாகக் கொண்டது
- வாடிக்கையாளர்களுக்காக விசேடத் திட்டங்களுக்கான நெகிழ்த்தன்மை
- உள்நாட்டு ரீதியாக செயல்படும் குழு உள்ளது



### செலவு

- மொத்த உரிமைத்ன்மை செலவு குறைவானது
- முதலீட்டுக்கிணங்க அதிக பயன்
- குறைந்த பராமரிப்புச் செலவு

# தொழிநுட்பப் பிரிவு அறிக்கை

உண்மையில் இலங்கை உரக் கம்பனி ஆனது உரவகைகளை இறக்குமதி செய்து விநியோகிக்கும் முன்னணி நிறுவனமாக திகழ்வதுடன் தொடர்ச்சியாக மீள தெளிவுபடுத்தப்படுவதற்கு அவசியம் அற்றதாக உள்ளது. நிறுவனத்தின் தொழில்நுட்பப் பிரிவு என்ற ரீதியில் எமது நுகர்வோருக்கு இறக்குமதி செய்து விநியோகிக்கும் வரையில் அவர்களது திருப்தி ஆனது உகந்ததாக உள்ளதா என்பதை உறுதிப்படுத்தி வருகிறோம். இந்த மூலாதாரமான இலக்கினை நோக்கி செல்வதற்கு நாம் கொள்முதல், நிதி, சில்லறை மற்றும் விநியோகம் பிரிவுகளுடன் இணைந்து எமது ஊழியர்களுக்கு 24 x 365 வேலை நெறிமுறைகள் ஊடாக மிகவும் உகந்த தொழில் சூழலை வழங்குவதன் மூலம் நிறுவனத்தின் அடித்தளம் முதல் மேம்படுத்தி வருகிறோம்.

தொழில்நுட்ப பிரிவில் தகைமை வாய்ந்த 20 ஊழிய அங்கத்தவர்களை கொண்ட தகைமை வாய்ந்த குழுவினர் எமது சம்பளப்பிரிவு ஊழியர்கள், அனைத்து பதிவு செய்யப்பட்ட போக்குவரத்து சேவை வழங்குனர்கள், மற்றும் அவர்களது பிரதிநிதிகள், அனைத்து பதிவு செய்யப்பட்ட சில்லறை விநியோகஸ்தர்கள், மேலும் நிறுவனங்களில் இருந்து எம்முடன் இணைந்துள்ளோர் ஆகியோர் பல்வேறு சேவைகளை வழங்கி வருகின்றனர். நட்புறவான சேவையை வழங்குவதானது தரும் நேரடி விளைவுகள் என்னவென்று பார்த்தால் இலாபங்களில் அதிகரிப்பை ஏற்படுத்துவதாகும் என்ற நிலையில் நாம் அனைத்து வேளைகளிலும் இவ்வாறான உயர்தரமான சேவைகளை வழங்கி வருகிறோம்.

# ஆய்வுகூடப் பிரிவு

## இலங்கை உரக் கம்பனியின் உர பரிசோதனைகள் நடைபெறும் ஆய்வுகூடத்தின் கட்டமைப்பு




ISO/IEC 17025:2005 சான்றிதழ் மற்றும் இலங்கை அங்கீகாரச் சபையின் அனுமதியைப் பெற்றுள்ள இலங்கை உரக் கம்பனியின் உர பரிசோதனை ஆய்வுகூடம் உரம் மற்றும் தொகுப்புப் பொருட்கள் பரிசீலினைக்கான வசதிகளைக் கொண்டதாகும்.

வசதிகள், நபர்கள் மற்றும் சமர்ப்பிக்கப்படும் தகவல்கள் போன்ற அனைத்தும் நேரத்திற்கு, திறமையாக மற்றும் உயர் தரத்தினைக் கொண்டதாகும் என உறுதிப்படுத்துவதற்காக தொடர்ச்சியாக செயற்படுவதால் வாடிக்கையாளர்களுக்கு பரிசோதனைகள் மற்றும் பகுப்பாய்வுகள் தொடர்பாக சிறந்த சேவையை வழங்குவதற்கு இலங்கை உரக் கம்பனியின் முகாமைத்துவம் மற்றும் நிர்வாகம் செயல்படுகிறது.

இலங்கை உரக் கம்பனியின் உர பரிசோதனைகள் நடைபெறும் ஆய்வுகூடத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட விதிமுறைகளுக்கு, வாடிக்கையாளர்களின் தேவைகள் மற்றும் குறித்த சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளின் தேவைகளுக்கிணங்க பரிசோதனை சேவைகள் நடைபெறும்.

ஆய்வுகூடத்தின் நோக்கமானது அனைத்து ஊழியர்களுக்கும் தனது கடமைப் பொறுப்புக்கள் முதன் முறையாக சரியான முறையில் நடைபெறுவதற்காக தெளிவான தேவைகள், பொருத்தமான கருவிகள்/ உபகரணங்கள் மற்றும் சிறந்த பயிற்சி பெறும் சூழலை உருவாக்குவதாகும். ஆய்வுகூடத்தின் அனைத்து ஊழியர்களுக்கும் தமது பொறுப்புக்கள் மற்றும் தொடர்புடைய செயல்பாடுகள் மற்றும் வழிமுறைகள் தொடர்பான பயிற்சி பெற்றுக்கொடுப்பதோடு ISO/IEC 17025:2005 தர அமைப்பு வெற்றியடையச் செய்யும் பொறுப்பை நிறைவேற்றுவதற்கு அவர்கள் உட்படுத்தப்படுவர்.

# சந்தைப்படுத்தல் பிரிவு அறிக்கை

சாவல்கள் நிறைந்த இவ்வருடத்தில், விநியோகப் பிரிவினால் இலங்கை உரக்கம்பனி என்ற பெயர் வளர்ச்சியடைவதற்காகவும் அதன் உற்பத்திப் பிரிவு விவசாயிகளுக்கிடையில் மேலோங்குவதற்காக பல வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டது. விமர்சனத்துக்குள்ளாகும் ஆண்டில் பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

- ஒரு வகையில் வலைப்பின்னலின் பலம் மேலோங்குவதற்கும், மறுபுறம் இயற்கை தின்ம உரம் அறிமுகப்படுத்துவதாலும் விற்பனை முகவர் சம்மேளனம் மற்றும் நட்புடனான சந்திப்பொன்று நீர்கொழும்பு கிராண்டீசா ஹோட்டலில் நடைபெற்றது

- கைத்தொழில் துறை வாரத்தில் விநியோகப் பிரிவினால் பல வேலைத்திட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டது.
    - அனுராதபுர ‘கலா வெவ’ க்கு அருகில் 2,000 விளக்குகளை ஏற்றிவைத்தல்.
    - விவசாய சேவைகள், விவசாய ஏற்பாடுகள் போன்ற அரச அலுவலகங்கள் மற்றும் விவசாயிகள், விற்பனை முகவர்கள் மற்றும் வாடிக்கையாளர்களுக்காக விழிப்புணர்வு வேலைத்திட்டங்களாக சிறு சந்திப்புகள் நடாத்தப்பட்டது.
    - இயற்கை உணவு ஊக்குவிப்பு விழாவில் கலந்துகொள்வதற்காக ஊக்குவிப்பு வேலைத்திட்டங்கள் நடாத்தப்பட்டது.

- வியூகங்களினூடாக ஊக்குவிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு கம்பனியினால் உலக சிறுவர் விழாவின்போது தொலைக்காட்சி விளம்பரமொன்று ஆரம்பிக்கப்பட்டது.

- இயற்கை உர பிரிவை நோக்காக் கொண்ட பெயர் அடையாளத்தை ஊக்குவிப்பும் வேலைத்திட்டங்கள் குருனாகலை, காலி, மற்றும் மாத்தரை விவசாய சேவை மைங்களில் ஏற்பாடு செய்யப்பட்டது.

- விவசாயிகள் மத்தியில் லக்பொஹொர பெயர் அடையாளத்தின் புறிந்துணர்வுத் தன்மை மேலோங்கப்பட்டதற்கு பிரதான அதிகாரமுள்ள பிரதிநிதிகள் மற்றும் பகிர்ந்தளிப்பவர்களுக்கு பனர், போஸ்டர் மற்றும் பெயர் பலகைகள் வழங்கப்பட்டது. இலங்கை உரக் கம்பனி மற்றும் உற்பத்திப் பிரிவு தொடர்பாக புதிய தகவல்களுடன் டீ.வீ.டீ. ஒன்றுடன் மேலும் விநியோக விளம்பர பொருட்கள் உருவாக்கப்பட்டது.

- சமூக வலைத்தளங்களின் முக்கியத்துவத்தை உணர்ந்துகொண்டு, இலங்கை உரக் கம்பனி மற்றும் அதன் பரந்த வாடிக்கையாளர் அடித்தளதிற்கு இடையில் உள்ளக செயல்பாட்டு பங்களிப்பு மேலோங்குவதற்கு விநியோகப் பிரிவினால் பேஸ்புக் பிரதிநிதித்துவமொன்று ஆரம்பிக்கப்பட்டது.

- ஊக்குவித்தல் மற்றும் விளம்பர வேலைத்திட்டங்களில் ஒரு கட்டமாக உயர்தர சேவை செயல்பாடொன்றை வெளிப்படுத்திய துறை அதிகாரிகளுக்காக உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் சுற்றுப்பயணங்கள் ஏற்பாடு செய்யப்பட்டது.



# கொள்முதல் பிரிவு

வரையறுக்கப்பட்ட இலங்கை உரக் கம்பனியின் நோக்கத்தை அடைவதற்காக கொள்முதல் பிவிரினால் நிறுவனத்தில் மிக முக்கிய கடமைப்பொறுப்புக்களை நிறைவேற்றியுள்ளது. மிகவும் பரந்து காணப்படுவதுடன் பன்முகத் தன்மையுடைய சந்தைக்காக உர உற்பத்தி மற்றும் விநியோகம் மேற்கொள்வதோடு இலங்கையில் கைத்தொழில் துறை மற்றும் விவசாயச் சேவைகளினால் உற்பத்தி வருமானம் மற்றும் இலாபத்தன்மை மேலோங்கிக் காணப்படுவதற்கு தீவிரமாக பங்களிப்பை வழங்கி அதிகபட்ட இலாபம் மற்றும் பராமரிப்பும் மேற்கொள்ளப்படும்.

இப்பிரிவில் அடிப்படைக் பொறுப்பாக அமைவது அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்ட கொள்முதல் வழிகாட்டிகள் மற்றும் பரிந்துரைகளின் படி பொருட்கள், சேவைகள், பொறுப்புக்கள் மற்றும் ஆலோசனைச் சேவைகள் வழங்குதலாகும். அடிப்படைக் கவனத்தை செலுத்துவதில் யூரியா, MOP மற்றும் TSP போன்ற முக்கியமான உர வகைகள் கொள்முதல் செய்யப்படுகின்றது.

இலங்கை உரக் கம்பனி நிதி ரீதியாக பலம்வாய்ந்த அரசுக்கு சொந்தமான வியாபாரமொன்று என்பதால் இலங்கையில் பொது திறைசேரி முறைக்கு சொந்தமாவதுடன், அது ஒன்றிணைந்த நிதியிலிருந்து எவ்வித நிதி உதவியையும் பெற்றுக்கொள்வதில்லை. அதேபோன்று, நெல் பயிர்ச்செய்கைக்காக நாட்டின் உர தேவைப்பாட்டின் ஒட்டுமொத்த அளவில் முக்கியப் பிரிவாக இந்நிறுவனத்தின் முறையான கொள்முதல் முறையினால் பூர்த்திசெய்யப்பட்டுள்ளது.

அரசின் கொள்கையானது “வச விசென் தொர ரடக் - நீரோகீமத் ஹெடக்” என்ற தலைப்பின் கீழ் இரசாயன உர பாவனையை குறைப்பதுடன், இயற்கை உரப் பாவனையை வளர்ச்சியடையச் செய்வதனால், கொள்முதல் பிரிவினால் அரச கொள்ளை மற்றும் அதற்கு ஏற்றாற்போல் இயற்கை திரவ உரம், திண்ம உரம் மற்றும் கொம்போஸ்ட் உரம் போன்ற இயற்கை உர உற்பத்தியை கொள்முதல் செய்வதற்காக உத்திகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.



# விநியோகப் பிரிவு

விநியோகப் பிரிவின் அடிப்படைப் பொறுப்புக்களானது நிறுவனத்தின் திட்டமிடல் நடவடிக்கைகள் முகாமைப்படுத்துவதாகும். நாடு முழுவதும் பரந்து காணப்படும் 44 பிராந்திய பண்டகச் சாலைகளுடன் காணப்படும் லக்பொஹொர விநியோக வலைப்பின்னலை பயன்படுத்திக்கொண்டு தேவை-வழங்கல் சமன்பாட்டுக்கேற்ப பராமரிப்பதற்கு இப்பிரிவு செயல்படுகின்றது.

இவ் விநியோகஸ்தர்களை நியமிப்பதனூடாக நிறுவனத்தின் பரவலாக்கலுக்கு பாரிய பங்களிப்பு பெற்றுள்ளதுடன், அதனூடாக விவசாயின் வீட்டுக்கே சென்று உரம் வழங்குவதற்கு வாய்ப்புள்ளது. இது விசேடமாக இயற்கை திரவ உரம் விநியோகிப்பவர்களுக்கே பொறுத்தமானதாகும்.

### விநியோகிப்பவர்களால் மேற்கொள்ளப்படும் விநியோக எல்லைப் பிரதேசங்கள்

- மொனராகலை
- மட்டக்களப்பு
- திருகோணமலை
- கண்டி
- பொலன்னருவை
- யாழ்ப்பாணம்
- கிளிநொச்சி
- புத்தளம்
- அம்பாறை
- ஹம்பாந்தோட்டை
- இரத்தினபுரி
- மன்னார்




## உற்பத்திச் செயல்திறன் 2016/17

கலவை உர உற்பத்தி இப்பிரிவினால் மேற்கொள்ளப்படும் இரண்டாவது பொறுப்பாவதுடன், இது ஆராய்ச்சி நிறுவனத்தினால் உருவாக்கப்பட்ட சூத்திரங்களின் படி செயல்படுகின்றது. கலவை உர உற்பத்தியின்போது நவீன தொழிநுட்பத்தை பயன்படுத்தக்கூடிய முன்னேற்றகரமான கலவை இயந்திரமாக பயன்படுத்துவதுடன் ஆய்வுக்குட்படுத்தப்படும் ஆண்டுக்காக அவ்வருடாந்த உற்பத்தி அளவு 8,488,455 மெட்ரிக் டொன் ஆகும்.






# எமது
# புவியியல் ரீதியான
# விரிவாக்கம்

# 44 நாடு தழுவிய உர விநியோக வலையமைப்பு....

## வரையறுக்கப்பட்ட இலங்கை உரக்கம்பனி
### நாடு தழுவிய உர விநியோக வலையமைப்பு

**வடமாநிலம்**
கொண்டவில்
கிளிநொச்சி
வாரணி
ஒலுமடு
முரங்கன்

**வட மத்திய மாநிலம்**
மதவச்சி
ஹொரொவ்பத்தன
நொச்சியாகம
ஹிங்குரக்கொட
வெலிகந்த
பொலன்னறுவ

**வடமேல் மாநிலம்**
ஆனமடுவ
மாஹோ
குருணாகலை
நாத்தண்டிய

**மத்திய மாநிலம்**
தம்புளை
நாகொல்ல
மாத்தளை
கம்பளை
ரிகில்லகஸ்கட
நுவரெலியா

**கிழக்கு மாநிலம்**
திருகோணமலை
கந்தளை
மட்டக்களப்பு
தெஹியத்தகண்டிய
அம்பாறை
பொத்துவில்

**மேற்கு மாநிலம்**
ஹூனுபிட்டிய
தொடங்கொட
மத்துகம
பெலவத்தை

**சபரகமுவ மாநிலம்**
கேகாலை
குருவிட்ட
எம்பிலிபிட்டிய

**ஊவா மாநிலம்**
மஹியங்கனை
பிபிலை
பதுளை
மொனராகலை

**தெற்கு மாநிலம்**
வீரவில
தெஹிகஹலந்த
பட்ட-அத்த
மெதவியங்கொட
அக்குரஸ்ஸை
கொக்கலை




+11,00.00



# நிதிக்கூற்றுகள்

31 மார்ச் 2017 முடிவடைந்த வருடத்திற்கானது

வரையறுக்கப்பட்ட இலங்கை உரக்கம்பனி

# பணிப்பாளர் பொறுப்புகளுக்கான அறிக்கை

நிறுவனங்களின் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க சட்டத்தின் 150 (1) மற்றும் 151 ஆம் பிரிவுகளின் கீழ் பணிப்பாளர்கள் ஒவ்வொரு நிதியாண்டிலும் உண்மையும் நேர்மையானதுமான விடயங்களை உள்ளடக்கிய தேவைகளுக்கு இணங்க நிதியாண்டின் இறுதியில் நிறுவனத்தின் இலாபத்தைக் குறிக்கும் அறிக்கைகளை தயாரிப்பதற்கு பொறுப்புடையவர்களாவர்.

பணிப்பாளர்கள் மேலும் 148 ஆம் பிரிவுக்கு இணங்க முடிந்தளவு துல்லியமாகவும் நிதியியல் நிலைமையை உறுதிப்படுத்தும் ஒழுங்கான கணக்கியல் பதிவுகள் பேணப்படுவதையும் மேலும் இவ்வாறான அறிக்கைகள் கணக்காய்வு செய்யப்பட்டு தயாராகவும் ஒழுங்காகவும் முன்னெடுக்கப்பட்டது என்பதையும் உறுதிப்படுத்தவும் பொறுப்புடையவர்களாகின்றனர்.

சபையானது உண்மையானதும் நேர்மையானதும் நிதியியல் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படுகின்றது என்பதற்கான பொறுப்பையும் ஏற்றுக்கொள்கிறது. நிதியியல் அறிக்கைகள் ஏற்ற கணக்கியல் கொள்கைகள் தெரிவு செய்யப்பட்டு சீராக விண்ணப்பிக்கப்பட்டு நியாயமான மற்றும் விவேகமான முறையில் பரிசீலிக்கப்பட்ட நிலையில் இதன் காரணமாக இந்த முறையும் மற்றும் கணிசமான நடவடிக்கைகள் ஒழுங்கான முறையில் பிரதிபலிக்கின்றன என்பதை உறுதிப்படுத்துகின்றனர்.

அவர்கள் நிதியியல் அறிக்கைகள் இலங்கை கணக்கியல் தரங்கள் SLFRS மற்றும் நிறுவனங்களின் 2007 இன் 7 ஆம் இலக்க சட்டத்திற்கு இணங்க தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படுகின்றன என்பதையும் உறுதிப்படுத்துகின்றனர்.

தவிர நிதியியல் அறிக்கைகள் நிறுவனங்கள் சட்டத்தில் கேட்கப்படும் தகவல்களை வழங்குகின்றன.

பணிப்பாளர்கள் நிறுவனத்தின் அவர்கள் எண்ணத்தின் அடிப்படையில் கருத்தாக விளங்குவதுடன் பிரதான செயற்பாடுகள் மற்றும் விசேட விசாரணைகள் போதுமான வளங்கள் ஆகியவற்றின் மூலம் அடுத்த ஆண்டு தொடர்ச்சியான முன்னெடுப்பு அடிப்படையில் நிறுவனத்திற்கு ஆதரவினை வழங்குகின்றனர். இந்த அடிப்படையிலேயே இந்த நிதியியல் அறிக்கைகள் தயார் செய்யப்படுகின்றன.

பணிப்பாளர்கள் குழுவின் சொத்துகளை பாதுகாப்பதற்கு நியாயமான அளவிடைகளை மேற்கொள்வதுடன் இந்த சூழலில் தவறுகளையும் ஏனைய ஒழுக்கசீர்கேடுகளையும் அழித்து உள்ளகக் கட்டுப்பாட்டை பாதுகாப்பதற்கு தகுந்த முறைமையானது நிறுவப்பட்டுள்ளது. நிறுவனங்கள் சட்டப்பிரிவு 56 (2) க்கிணங்க பணிப்பாளர்கள் சபையானது தறபோது பிரேரிக்கப்பட்டுள்ள பங்கிலாப விநியோகத்திற்கு அதிகாரம் பெற்றுள்ளதுடன் அது தொட்பாக கிடைக்கப்பெறும் தகவல்களின் அடிப்படையில் திருப்தியடைவதுடன் நிறுவனமானது நிறுவனங்கள் சட்டப்பிரிவு 57 க்கிணங்க இவ்வாறான விநியோகத்திற்கு பின்னர் திவால்தன்மை சோதனை குறித்து திருப்தி அடைவதுடன் கணக்காய்வாளர்களிடமிருந்து கடன்தீர்க்கும் தன்மை தொடர்பான சான்றிதழ் பெறுவதற்கு முயல்கிறது.

இலங்கை ஜனநாயக சோசலிஷ குடியரசின் யாப்பின் 19 ஆவது திருதத்தின் ஒதுக்கீடுகளுக்கு இணங்க கணக்காளர் நாயகம் இலங்கை உர நிறுவனத்தின் கணக்காய்வுகளை மேற்கொள்ள அதிகாரம் பெற்றுள்ளதுடன் நிதியியல் அறிக்கைகள் மீதான கருத்துகளுக்கு இணங்க தகுந்த சோதனைகளை மேற்கொள்வதற்கான ஒவ்வொரு வாய்ப்பும் வழங்கப்பட்டுள்ளது.

## இணக்க அறிக்கை

பணிப்பாளர்கள் தமது அறிவுக்கு இணங்க ஐந்தொகை திகதியின் படி நிறுவனத்தின் சார்பாக கொடுக்க வேண்டிய ஊழியர்கள் மற்றும் அரசாங்கம் தொடர்பான அனைத்து சட்டரீதியான கொடுப்பனவுகளும் செலுத்தப்பட்டுள்ளன அல்லது பொருத்தமான முறையில் வழங்கப்பட்டுள்ளன என்பதை உறுதிப்படுத்துகின்றனர்.

**ரோஷன வடுகே**
தலைவர்
பணிப்பாளர் சபை சார்பாக
இலங்கை உர நிறுவனம்
7 டிசம்பர் 2017

# தலைவர் மற்றும் நிதியியல் முகாமையாளரின் **பொறுப்பு அறிக்கை**

31 மார்ச் 2017 ஆம் ஆண்டுக்கான இலங்கை உர நிறுவனத்தின் நிதியியல் அறிக்கைகள் கீழ்வரும் தேவைகளுக்கு உடன்படும் வகையில் தயாரிக்கப்பட்டு கையளிக்கப்பட்டுள்ளன.

- இலங்கை பட்டய கணக்காளர்கள் நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட இலங்கை கணக்கியல் தரங்கள்.
- நிறுவனங்கள் இலக்கம் 2007 இன் 7
- பொது திறைசேரியினால் வெளியிடப்பட்ட கூட்டாண்மை வழிநடத்தல் மீதான சிறந்த பயிற்சிகளுக்கான குறியீடு

நிதியியல் அறிக்கைகளுக்கான குறிப்புகளில் வர்ணிக்கப்பட்டவாறு பொருத்தமாகவும் தொட்ச்சியாகவும் இருக்ம் வகையில் நிதியியல் அறிக்கைகளை தயாரிக்கும்போது குறிப்பிடத்தக்க கணக்கியல் கொள்கைகள் பயன்படுத்தப்படுவதை நாம் உறுதிப்படுத்துகிறோம். பரிந்துரைக்கப்படும் கணக்கியல் தரங்கள் எவ்வித விலக்கமும் இன்றி ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

குறிப்பிட்ட கணக்கியல் கொள்கைகள் மற்றும் மதிப்பீடுகள் இவைபற்றி உயர்ந்த தீர்ப்பு மற்றும் சிக்கல்களை உள்ளடக்கிய நிலையில் கணக்கியல் குழு மற்றும் கணக்காய்வாளர் நாயகத்துடன் கலந்துரையாடப்படுகின்றன.

தவறுகள் மற்றும் ஏனைய ஒழுக்க சீர்கேடுகளையும் அழித்து பாதுகாக்கும் வகையில் சொத்துக்களை பாதுகாப்பதற்கு உள்ளகக் கட்டுப்பாடு மற்றும் கணக்கியல் பதிவுகளில் முறைமைகளை நிறுவுவதற்கு ஒழுங்கானதும் போதியதுமான அக்கறையை எடுக்கிறோம். இவை மீளாய்வு செய்யப்படுவதுடன் மதிப்பீடு செய்யப்பட்டு தொடர்ச்சியான அடிப்படையில் மேம்படுத்தப்படுகின்றன. நியாயமான உத்தரவாதங்கள் அதாவது நிறுவனத்தின் விருத்தி செய்யப்பட்ட கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் தொடர்ச்சியாக பின்பற்றப்படுவது நிறுவனத்தின் உள்ளக கணக்காய்வாளர்களால் காலத்துக்குக் காலம் மேற்கொள்ளப்படும் கணக்காய்வுகளால் வழங்கப்படுகிறது. எவ்வாறாயினும் அங்குள்ள உள்ளார்ந்த வரைமுறைகள் உள்ளக கட்டுப்பாடுகள் மற்றும் கணக்கியலின் எந்த முறைமையினாலும் அளிக்கப்படும் உறுதிகளை எடை போடுவதற்கான அங்கீகாரத்தை வழங்குகின்றன.

நிறுவனத்தின் கணக்காய்வு குழுவானது காலத்துக்கு காலம் உள்ளக கணக்காய்வாளர்கள், மற்றும் சுயாதீன கணக்காய்வாளர்கள் ஆகியோரை கணக்காய்வுகளின் பலன்களை மீளாய்வு செய்வதற்கும் கணக்காய்வு தொடர்பாக கலந்துரையாடுவதற்கும் உள்ளக கட்டுப்பாடு மற்றும் நிதியியல் அறிக்கையிடல் விவகாரங்கள் தொடர்பாகவும் சந்திக்கிறது. கணக்காய்வாளர் நயகம் மற்றும் உள்ளக கணக்காய்வாளர்கள் எந்த விடயம் தொடர்பாகவும் கணக்காய்வு குழுவுடன் கலந்துரையாடுவதற்கு பூரணமானதும் சுதந்திரமானதுமான அணுகலை கொண்டுள்ளனர்.

நிதியியல் அறிக்கைகள் கணக்காய்வாளர் நாயகத்தினால் இலங்கை ஜனநாயக சோசலிஷ குடியரசுக்கு கணக்காய்வு செய்யப்படுகின்றன.

**ரோஷன வடுகே**
தலைவர்

**பிரியந்த சமரவீர**
நிதியில் முகாமையாளர்

7 டிசம்பர் 2017

## இலங்கை உரக் கம்பனியின் 2017 முடிவடைந்த மார்ச் 31 ஆம் திகதிக்கான

# கணக்காய்வாளர் நாயகத்தின் நிதியியல் அறிக்கை

**வரையறுக்கப்பட்ட லங்கா உரக் கம்பனி – 2016/2017 ஆம் ஆண்டு**

---

வரையறுக்கப்பட்ட லங்கா உரக் கம்பனியின் 2017 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் பிரிவின் பிரகாரம் என்னால் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென கருதப்படுகின்ற மீளாய்வாண்டின் கம்பனியின் செயற்படு நிலை தொடர்பான எனது அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காண்பிக்கப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව. - இல. 306/72, பொல்தூவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. - No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 oaggov@sltnet.lk www.auditorgeneral.gov.lk

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 கம்பனியைத் தாபித்தல்

1957 இன் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபன அதிகாரச்சட்டத்தின் கீழ் 1964 ஆம் ஆண்டின் போது ஜேர்மன் சமஷ்டிக் குடியரசின் நிதி மற்றும் தொழில்நுட்ப பங்களிப்புடன் வரையறுக்கப்பட்ட லங்கா உரக் கம்பனி உருவாக்கப்பட்டிருந்தது. 1987 இன் 23 ஆம் இலக்க அரசாங்கத்திற்கு கையேற்கப்பட்ட நிறுவனங்களை பொதுக் கம்பனியாக நியமதிக்கும் சட்டத்திற்கு இணங்க 1992 செப்தெம்பர் 15 ஆந் திகதி முதல் அமுலாகும் வகையில் வரையறுக்கப்பட்ட லங்கா உரக் கம்பனி என்ற பெயரில் மீண்டும் ஸ்தாபிக்கப்பட்டிருந்ததுடன் தற்போது 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு பேணிச் செல்லப்பட்டிருந்தது

## 1.5 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து வரையறுக்கப்பட்ட லங்கா உரக் கம்பனியின் 2017 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 ஏனைய சட்டரீதியான மற்றும் விதிகளின் தேவை தொடர்பான அறிக்கை

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் 163(2) ஆம் பிரிவின் மூலம் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் நான் பின்வரும் விடயங்களைக் குறிப்பிடுகின்றேன்.

(அ) அபிப்பிராயத்திற்கான அடிப்படை கணக்காய்வின் விடயப்பரப்பு மற்றும் வரையறையின் கீழே காண்பிக்கப்பட்ட பிரகாரம் இருந்தது.

- முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர கணக்காய்விற்குத் தேவையான தகவல்கள் மற்றும் விளக்கமளித்தல்கள் என்னால் பெறப்பட்டிருந்தமையும் எனது பரிசோதனையிலிருந்து எழுகின்ற தூரம் வரை கம்பனியால் முறையான கணக்கு அறிக்கை பேணப்பட்டிருந்தமையும்,

  கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் 151 ஆம் பிரிவின் தேவைகளுக்கு இணங்கியிருந்தமையும் என்னால் தெரிவிக்கப்பட்ட அபிப்பிராயமாகும்.

### 2.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.3.1 இலங்கை கணக்கீட்டு நியமம்

இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 19

-----------------------------------------------------

நியமத்தின் 63 ஆம் பந்தியின் பிரகாரம் நிறுவனத்தின் குறித்த ஊழியர் நலன்கள் தொடர்பான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் நிதி நிலைமைக் கூற்றில் வெவ்வேறாக இனங்காணப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் 39

-----------------------------------------------------

(i) நியமத்தின் 08 ஆம் பந்தியின் பிரகாரம் நிரந்தர அல்லது தீர்மானங்களுடன் மேற்கொள்ளக்கூடிய கொடுப்பனவுகளுடனான நிறுவனம் காலாவதியாகும் வரை வைத்துக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட மற்றும் காலாவதியாகும் வரை வைத்துக்கொள்ளப்பட்டு நிதிச்சொத்துக்களாக வகைப்படுத்த வேண்டியிருந்த போதிலும், ரூபா 3,844,988,912 தொகையான சொத்துக்கள் ஏனைய நிதிச்சொத்துக்களாக நிதிக்கூற்றுக்களில் வகைப்படுத்தப்பட்டிருந்தது.

(ii) நியமத்தின் 46(ஆ) ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட ரூபா 532,548,539 தொகையான முதிர்ச்சியடையும் வரை வைத்துக் கொள்ளப்பட்ட முதலீடுகள் சிறந்த வட்டி முறையை பயன்படுத்தி காலக்கழிவு முறைமைக்கு கணிக்கப்பட வேண்டிய போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

---------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 மார்ச் 31 இல் உள்ளவாறு நிலையான வைப்புக்கள் மற்றும் திறைசேரி உண்டியல்களின் அடிப்படையில் வட்டி வருமானம் ரூபா 12,632,701 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் அதன் பிரகாரம் செலுத்த வேண்டிய வருமான வரித் தொகையும் ரூபா 3,537,156 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி கணிப்பீடு செய்யும் போது நிதிக்கூற்றுக்களில் செயற்பாட்டு வருமானத்தில் உள்ளடக்கப்பட்ட ரூபா 7,498,445 தொகையான பங்களாக் கட்டணம், வாடகை வருமானம், போக்குவரத்தின் மூலம் உழைக்கப்பட்ட வருமானம் மற்றும் உர உறைகள் விற்பனை வருமானம் போன்றவை கவனத்தில் கொள்ளப்படாமையினால் அண்ணளவாக வரி வருமானம் ரூபா 130,724 தொகை குறைத்து மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது.

### 2.3.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

கம்பனியின் மீளாய்வாண்டிற்குரிய தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி விடுதலை விற்பனைப் புரள்வு ரூபா 253,056,860 ஆக இருந்த போதிலும், தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி அறிக்கையின் பிரகாரம் அது ரூபா 249,439,632 ஆகக் காண்பிக்கப்பட்டமையால் ரூபா 3,617,228 தொகையான வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

### 2.4 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

10 வருடம் முதல் 20 வருடம் வரையான காலத்தில் 04 நிறுவனங்களிலிருந்து கம்பனிக்கு அறவிட வேண்டிய ரூபா 87,474,958 தொகை மீளாய்வாண்டின் போதும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
| --- | --- |
| (அ) 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டம் | |
| (i) 131(1) ஆம் பிரிவு | 2017 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரையிலும் 2014/2015 இன் ஆண்டறிக்கை கம்பனியின் பதிவாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ii) | 223 ஆம் பிரிவு | 2015 மே 05 இல் உள்ளவாறு பணிப்பாளர் சபையில் ஏற்பட்ட மாற்றங்கள் 2017 செப்தெம்பர் 15 ஆந் திகதி வரையிலும் கம்பனியின் பணிப்பாளருக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 2006 இன் அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவை | |
| | 2.8.1, 2.8.5, 4.3.1, 4.3.2, 5.4.8, 7.9.2 ஆம் பிரிவுகள் | நான்காம் இலக்க களஞ்சியத்தின் கூரையைத் திருத்துவதற்கான ரூபா 1,992,175 பெறுமதியான ஒப்பந்தத்தின் கேள்வி மதிப்பீட்டிற்காக விரிவானதொரு மதிப்பீடொன்று சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் ஒப்பந்தகாரருடன் உடன்படிக்கையும் கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. மேலும், அதற்காக செயலாற்றல் பாதுகாப்புப் பிணையும் பெறப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2002 மே 24 ஆந் திகதிய பீஎவ்/பீஈ/21 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கை | மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களுடன் வரைவு வருடாந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான கம்பனியின் நிதி விளைவுகள் ரூபா 139,592,032 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 603,272,829 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகள் ரூபா 463,680,797 இனால் வீழ்ச்சியடைந்திருந்தது. நிதி வருமானம் ரூபா 164,008,366 இனால் அதிகரித்திருந்த போதிலும், நிர்வாகச் செலவினம் ரூபா 94,368,978 இனாலும், மொத்த இலாபம் ரூபா 866,422,146 இனாலும் குறைவடைந்தமை மேற்கூறப்பட்ட வீழ்ச்சிக்கு பிரதானமாகத் தாக்கமளித்திருந்தது.

மீளாய்வாண்டினதும் கடந்த நான்கு ஆண்டுகளினதும் நிதி விளைவுகளைப் பகுப்பாய்வு செய்த போது 2012/2013 ஆம் ஆண்டில் ரூபா 126,856,580 ஆகக் காணப்பட்ட தேறிய இலாபம் 2015/2016 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா 603,272,829 வரை தொடர்ச்சியாக அதிகரித்திருந்தது. எனினும், உர மானியத்திட்டம் அகற்றப்பட்டதுடன் மீளாய்வாண்டின் தேறிய இலாபம் ரூபா 139,592,032 வரை குறைவடைந்திருந்தது. நிதி விளைவில் ஊழியர் ஊதியம், ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதனத்தேய்வு மற்றும் அரசாங்கத்திற்குச் செலுத்திய வரி என்பவற்றை மீளச் சீராக்கியதன் பின்னர் 2012/2013 ஆம் ஆண்டில் ரூபா 428,414,541 தொகையான கம்பனியின் பங்களிப்பு 2016/2017 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா 476,433,758 வரை தொடர்ச்சியாக அதிகரித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

---

### 4.1 செயலாற்றல்

---

அரசாங்க கொள்கைகளுக்கு இணங்க, இலங்கை விவசாய மற்றும் கமநல சேவைத் துறைகளின் வருமானம் மற்றும் இலாபத்தன்மையை அதிகரிப்பதற்காக பல்நோக்கு சந்தைகளின் தேவைக்கு ஈடாகும் உர உற்பத்தி மற்றும் விற்பனைகளின் மூலம் கம்பனியின் இலாபத்தன்மையை நிலைபேறாக இருப்பதை உறுதிப்படுத்தும் நோக்கத்தின் கீழ் வரையறுக்கப்பட்ட லங்கா உரக் கம்பனி தாபிக்கப்பட்டிருந்தது.

இலங்கையில் விவசாயத் துறைகளில் நெற்பயிர்ச் செய்கை பிரதான பயிராக இருந்தமையால் அரச கொள்கையாக 2006 ஆம் ஆண்டு முதல் 2016 பெப்ரவரி 28 ஆந் திகதி வரை உரப் பொதியொன்று ரூபா 350 மானிய விலையில் விவசாயிகளுக்கு கொள்வனவு செய்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்ததுடன் அந்த மானிய நிகழ்ச்சித் திட்டத்திற்குத் தேவையான 65 சதவீத உரத்தேவை வரையறுக்கப்பட்ட லங்கா உரக் கம்பனியால் நிறைவேற்றப்பட்டிருந்தது.

யூரியா, எம்ஓபீ, ரீஎஸ்பீ போன்ற நேரடியான உர வகைகள் மற்றும் உரக் கலவை என்பனவற்றிலிருந்து ரூபா 12.197 பில்லியன் வருமானமொன்றைப் பெற்றுக்கொள்வதற்கு இலக்கிடப்பட்டிருந்த போதிலும், 2016 மார்ச் 01 ஆந் திகதி முதல் உர மானிய நிகழ்ச்சித்திட்டம் அகற்றப்பட்டமையின் காரணமாக உள்ளபடியான விற்பனை வருமானம் ரூபா 2.371 பில்லியனாக இருந்தது. அதன் பிரகாரம் அடைய முடியுமாக இருந்த விற்பனை வருமானம் 19.44 சதவீதமான ஆகக் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.

## 4.2 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

விவசாய அமைச்சின் நிதிஏற்பாட்டின் கீழ் உர மாதிரிகளை பரிசோதனை செய்யும் நோக்கில் ரூபா 17,617,653 பெறுமதியான ஆய்வுகூட உபகரணங்கள் மற்றும் ஏனைய உபகரணங்களை உள்ளடக்கிய 3000 சதுர அடி அளவான பூரணத்துவமான ஆய்வு கூடமொன்று அமைக்கப்பட்டிருந்ததுடன் ஆய்வுகூட முகாமையாளரின் கீழ் 04 ஆய்வுகூட உதவியாளர்களும் மாதிரிகளைச் சேகரிக்கும் ஒருவரும் சேவையில் ஈடுபட்டிருந்தனர். எனினும், உரச் செயலகத்தால் மேற்கொள்ளப்படுகின்ற உர மாதிரி நிலைமை பரிசோதனை எதுவும் இந்த ஆய்வுகூடம் மூலம் இடம்பெறாமையினால் இந்த சொத்துக்கள் குறைவான பயன்பாட்டுடன் காணப்பட்டது.

## 4.3 நிறுவனத்திற்கு எதிராக அல்லது நிறுவனத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்டவிடயங்கள்

வரையறுக்கப்பட்ட லங்கா உரக் கம்பனியில் 2005 ஆம் ஆண்டு முதல் 2007 ஆம் ஆண்டு வரை ஏற்பட்டிருந்த உர இருப்பு பற்றாக்குறை தொடர்பாக நான்கு விற்பனை முகவர்களுக்கு எதிராக கூட்டுமொத்தமாக ரூபா 268,335,298 நட்டஈடு கோரி வழக்கு தொடரப்பட்டிருந்தது.

## 4.4 முகாமைத்துவ செயற்பாடுகள்

2015 ஆம் ஆண்டில் பொத்துவில் பிரதேச உரக் கஞ்சியத்தின் முன்னாள் உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட்ட 281 மெட்ரிக்தொன் உர இருப்பு பற்றாக்குறையின் காரணமாக ஏற்பட்டிருந்த ரூபா 15,269,218 தொகையான நட்டத்தை அறவிடுவதற்காக 2017 திசெம்பர் 05 ஆந் திகதி வரையிலும் வழக்குத் தொடுத்தல் மாத்திரம் இடம்பெற்றிருந்தது.

## 4.5 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

கம்பனியால் மீளாய்வாண்டின் போது விளம்பரம் மற்றும் விற்பனை மேம்படுத்தல்களுக்காக அனுசரணைப் பங்களிப்பை பெற்றுக்கொள்ளல் மற்றும் சமூக உடனடித் தேவைகளுக்காக ரூபா 15,409,813 தொகை செலவிடப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 யூலை 29 ஆந் திகதி நீர்கொழும்பு குறண கிரண்டியா ஹோட்டலில் நடைபெற்ற சந்தைப்படுத்தல் முகவர்களின் சந்திப்பு மற்றும் சேதனப் பசளை உற்பத்தியை வெளிக்கொணரும் நிகழ்ச்சித்திட்டத்திற்காக பணிப்பாளர் சபையில் அங்கீகரிக்கப்பட்ட ரூபா 5,000,000 தொகையான செலவின எல்லையை விஞ்சி ரூபா 2,749,129 தொகை செலவிடப்பட்டிருந்தது.

மேலும், நிகழ்ச்சித்திட்டத்திலிருந்து ஒழுங்கமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம், மூன்று நிறுவனங்களிலிருந்து கூறுவிலை கோரப்பட்டிருந்த போதிலும், அந்த மூன்று நிறுவனங்களும் ஒரு நிறுவனத்தின் கீழ் உள்ள இணைந்த நிறுவனமாக கணக்காய்வின் போது உறுதிப்படுத்தப்பட்டது. அவ்வாறே விழா ஒழுங்கமைப்பு நடவடிக்கைகளுக்காக செலவிடப்பட்ட செலவினங்களில் ரூபா 3,232,500 தொகை அதாவது 43 சதவீத அளவு தலைவர் மற்றும் செயற்பாட்டுப் பணிப்பாளரின் ஆலோசனையின் அடிப்படையில் செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) நிறுவனத்தின் நோக்கங்களுக்கு புறம்பாக மீளாய்வாண்டின் போது நாடகம், விவாதம், ஒத்திகை மற்றும் பாடசாலைகளுக்காக அனுராதபுரம் மற்றும் பொலன்னறுவை மாவட்டங்களில் 97 "பக்மஹ" விழாவிற்காக ரூபா 2,813,140 தொகையும், 11 நல்லிணக்க சந்திப்புக்களுக்காக ரூபா 513,505 தொகையும், நாடு முழுவதும் விவசாய வாரத்திற்கான பூர்வாங்க ஆரம்ப தினத்தின் போது 2000 மெழுகுவர்த்திகள் ஏற்றி கலாவெவவையில் மிதக்க வைப்பதற்காக ரூபா 390,000 தொகையும், பிறந்த தின வாழ்த்து மடல்களுக்காக ரூபா 480,000 தொகையும் செலவிடப்பட்டிருந்தன.

### 4.6 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

---

கம்பனியால் 2015 சனவரி முதல் 2016 பெப்ரவரி வரை இறக்குமதி செய்யப்பட்ட 365,359 மெட்ரிக் தொன் உரத்தை கொழும்பு துறைமுகத்திலிருந்து 10 கிலோமீற்றருக்குள் உள்ள களஞ்சியத்திற்கு போக்குவரத்துச் செய்வதற்கான நிலுவை போக்குவரத்துக் கட்டணமாக ரூபா 35,848,212 தொகையைச் செலுத்துவதற்கு தீர்மானம் எடுத்தமை தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2014 சனவரி 01 ஆந் திகதி முதல் 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரை போக்குவரத்துச் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்காக தெரிவு செய்யப்பட்ட நிறுவனத்துடன் ஒரு மெட்ரிக் தொன் போக்குவரத்துச் செய்வதற்காக ரூபா 735

செலுத்துவதற்கு உடன்படிக்கை செய்யப்பட்டிருந்ததுடன் 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அந்த உடன்படிக்கை நீடிக்கப்பட்டிருந்தது. 2015 சனவரி 22 ஆந் திகதி ஏற்பட்ட டீசல் விலை குறைப்பின் அடிப்படையில் 2015 ஏப்ரல் 30 ஆந் திகதி பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் 2015 மார்ச் 25 ஆந் திகதி முதல் 2016 ஏப்ரல் 29 ஆந் திகதி வரையான காலஎல்லையில் ஒரு மெட்ரிக்தொன் போக்குவரத்துச் செய்வதற்காக ரூபா 629.16 வீதம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ii) உரிய போக்குவரத்து நிறுவனம் இந்த விலை குறைத்து கொடுப்பனவு செய்தமை தொடர்பாக 2016 பெப்ரவரி 23 ஆந் திகதி வரையும் எதிர்ப்பொன்று சமர்ப்பிக்காதிருந்ததுடன் முதலாது தடவையாக 2016 பெப்ரவரி 24 ஆந் திகதி விலை குறைப்பதற்கு இணங்காததாகக் குறிப்பிட்டு ரூபா 35,848,212 நிலுவைப் பணத்தை கோரி கடிதமொன்றைச் சமர்ப்பித்திருந்தது.

(iii) 2015 யூன் 16 ஆந் திகதி திறக்கப்பட்ட கேள்விகளுக்காக மேற்கூறப்பட்ட போக்குவரத்து நிறுவனம் ஒரு மெட்ரிக் தொன் உரத்தை போக்குவரத்துச் செய்வதற்காக ரூபா 635 தொகையொன்று சமர்ப்பிக்கப்பட்டமையின் காரணமாக அந்த நிலுவைப் பணத்தைச் செலுத்துவதற்கு தீர்மானம் எடுத்த அடிப்படை ஒன்று இல்லாமைஇருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

**4.7 பெறுகைகள் மற்றும் ஒப்பந்தச் செயற்பாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கம்பனியின் பிரதான அலுவலக வளவில் தார் இடுவதற்காக ஒப்பந்தகாரருடன் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டு வங்கிப் பிணை முறிகள் அடிப்படையில் ரூபா 8,859,708 தொகை வேலை ஆரம்பிப்பு முற்பணமொன்று 2014 பெப்ரவரி மாதத்தில் செலுத்தப்பட்டிருந்தது. 2014 மே 11 ஆந் திகதி ஒப்பந்தத்தின் நிர்மாண நடவடிக்கைகள் கைவிடப்பட்டமையின் காரணமாக செயலாற்றல் பிணை முறியின் பெறுமதியான ரூபா 2,214,927 அறவிடப்பட்டிருக்கவில்லை. எனினும், கணக்காய்வுத் திகதியான 2017 ஒக்தோபர் 30 கணக்காய்வுத் திகதி வரையிலும் கொடுப்பனவு செய்யப்பட்ட முற்பணமான ரூபா 6,644,781 தொகையை அறவிடுவதற்காக பிணைமுறி நீதிமன்றில் வழக்கொன்று (Arbitration) விசாரணையில் காணப்பட்டது.

(ஆ) கம்பனியால் ரூபா 27,188,304 செலவில் நுவரெலியா புளுஎல இல் அமுல்படுத்தப்பட்ட சுற்றுலா விடுதியொன்றை நிர்மாணிக்கும் ஒப்பந்தம் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) சுற்றுலா விடுதியை நிர்மாணிப்பதற்கு முன்னர் காணியின் உரித்து உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) மேற்கூறப்பட்ட ஒப்பந்தம் தொடர்பாக மதியுரைச் சேவையொன்றைப் பெற்றுக்கொள்வதற்காக பெறுகைகள் நடைமுறைகளுக்குப் புறம்பாக தனியார் நிறுவனமொன்று தெரிவு செய்யப்பட்டிருந்தது. நிர்மாணங்களுக்குரிய அளவிடைப் பத்திரங்களைத் தயாரிக்கும் போது அங்கீகரிக்கப்பட்ட விலை விகிதம் பயன்படுத்தப்படாமையின் காரணமாக ஒட்டுமொத்த ஒப்பந்தத்தின் மதிப்பீட்டுப் பெறுமதியில் ரூபா 576,728 முரணொன்று ஸ்தாபிக்கப்பட்டது.

(iii) ஒப்பந்தம் ஆரம்பிக்கப்பட்டு 180 நாட்களில் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், நிர்மாணங்கள் பூர்த்தி செய்தல் 136 நாட்களினால் தாமதமாகியிருந்ததுடன் இந்த தாமதத்திற்காக ரூபா 1,762,016 தொகையான தாமதக் கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(iv) 2017 ஒக்தோபர் 25, 26 மற்றும் 27 ஆம் திகதிகளில் களப் பரிசோதனையின் போது நிர்மாணங்கள் தொடர்பாக பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

- மண் பரிசோதனை அறிக்கை பெற்றுக்கொள்ளப்படாமல் அத்திவாரம் மற்றும் தூண்களின் நிர்மாணம் என்பன நிர்மாணித்தல் உரிய நியமத்திற்குப் புறம்பானதாகையால் முழுக் கட்டிடத்தினதும் சகல சுவர்களும் வேறாகும் வகையில் வெடித்திருந்தன. மேலும், Slab, Beam, க்ரோனைட் வேர்க் டொப் பிரிந்து செல்லும் வகையில் வெடித்திருந்தது.

- சகல கதவுகள், யன்னல்கள், Flashing மற்றும் கூரை ஓரங்கள் என்பவற்றைப் பொருத்துவதற்காக ரூபா 2,542,000 செலவிடப்பட்டிருந்த போதிலும், அவை உரிய நியமத்திற்குப் புறம்பாக இருந்தமை.

- கூரை நிர்மாணங்களிற்கான ஒப்பந்தம் Lump Sump முறைமையின் பிரகாரம் கையளிக்கப்பட்டமையின் காரணமாக ரூபா 464,900 தொகையொன்று ஒப்பந்தகாரருக்கு மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

- கட்டுக்களுக்காக ரூபா 959,500 தொகை செலவிடப்பட்டு பூர்த்திசெய்யப்பட்ட 100 சதுர மீற்றர் மருத பலகைத் தட்டு கழன்றிருந்ததுடன் ரூபா 3,081,568 செலவில் நிர்மாணிக்கப்பட்ட கல்கட்டு மற்றும் மதில்சுவர் என்பனவும் உரிய நியமத்தில் நிர்மாணிக்கப்படாமையினால் அனேக இடங்களில் வெடித்து வேறாகப் பிரிநித்ருந்தது.

(v) கட்டிடத்தின் நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்பட்டு ஒரு வருடமும் 04 மாத கால தாமதத்தின் பின்னர் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருந்தது.

**4.8 பதவியணியினர் நிர்வாகம்**

---------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கம்பனியின் ஆரம்ப மட்டத்தில் (Skilled) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் 163 ஆக இருந்த போதிலும், உள்ளபடியான பதவியணியினர் 184 ஆனமையால் 21 உத்தியோகத்தர்கள் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரமின்றி சேவையில் ஈடுபட்டிருந்தனர்.

(ஆ) 2016 யூன் 01 ஆந் திகதி ஒப்பந்த அடிப்படையின் கீழ் களஞ்சிய உதவியாளர்களாக 05 உத்தியோகத்தர்கள் சேவையில் ஈடுபட்டிருந்ததுடன் அதில் நான்கு உத்தியோகத்தர்களுக்கு அனுராதபுரம் மாவட்டத்தில் அமைச்சரின் பதவியணியின் கீழ் அமுல்படுத்தப்படுகின்ற சோயா செயற்திட்டத்திற்கும் ஒரு உத்தியோகத்தர் கம்பனியின் செயற்பாட்டு பணிப்பாளர் அலுவலகத்தின் அலுவலக உதவியாளராக சேவையில் ஈடுபட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது கம்பனியால் அவர்களின் சம்பளத்திற்காக முறையே ரூபா 425,333 மற்றும் ரூபா 350,578 தொகைகள் செலவிடப்பட்டிருந்தன.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 ஆண்டறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்

2015/2016 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை 2017 ஒக்தோபர் 31 ஆந் திகதி வரையிலும் பாராளுமன்றத்தில் சமர்பபிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டில் 113 விடயங்கள் பாதீடு செய்யப்பட்ட உள்ளபடியான வருமானத்திற்கும் செலவினத்திற்கும் இடையே 99 சதவீதம் முதல் 281 சதவீதம் வரையிலான முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படாதிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது கம்பனியின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விஷேட கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | பதவியணியினர் நிர்வாகம் | ஊழியர்களை ஆட்சேர்த்தல் முறையான பிரகாரம் இடம்பெறாமை |
| (ஆ) | ஒப்பந்த மற்றும் பெறுகை நடைமுறைகள் | பெறுகை நடைமுறைகளைப் பின்பற்றுதல் |
| (இ) | சொத்துக் கட்டுப்பாடு | குறைப்பயன்பாடுடையதாகக் காணப்படுகின்ற சொத்துக்களைப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காமை |
| (ஈ) | பாதீட்டுக் கட்டுப்பாடு | பாதீடு சரியானதாக தயாரிக்கப்படாமை |
| (உ) | புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் | கம்பனிச் சட்டத்தின் பிரகாரம் கணக்கு நடவடிக்கைகளுக்காக பேணப்படவேண்டிய புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாகப் பேணப்படாமை. |

# வரையறுக்கப்பட்ட இலங்கை உரக் கம்பனி
## 2017 மார்ச் 31 இல் முடிவடைந்த வருடத்தின்
## இலாப நட்ட மற்றும் முற்றுமடங்கிய வருமானக் கூற்று

(இலங்கை ரூபாவில்)

| | குறிப்பு | 2017 | 2016 |
|---|---|---|---|
| வருமானம் | 3 | 2,350,637,985 | 4,242,769,733 |
| விற்பனைக் கிரயம் | 4 | (2,119,612,208) | (3,145,321,810) |
| **மொத்த இலாபம்** | | **231,025,777** | **1,097,447,923** |
| ஏனைய செயற்பாட்டு வருமானம் | 5 | 29,096,825 | 122,926,594 |
| நிர்வாக செலவினம் | 6 | (445,490,134) | (539,859,112) |
| விநியோக செலவினம் | 7 | (20,490,594) | (11,712,957) |
| **செயற்பாடுகளிலிருந்து வருமானம்** | | **(205,858,126)** | **668,802,448** |
| நிதி வருமானம் | 8 | 333,536,542 | 169,528,176 |
| நிதிச் செலவினம் | 8 | 126,125 | (1,726,619) |
| **வரிக்கு முன் இலாபம்** | | **127,804,541** | **836,604,005** |
| வருமான வரிச் செலவினம் | 9 | 11,787,491 | (233,331,176) |
| **ஆண்டிற்கான இலாபம்** | | **139,592,032** | **603,272,829** |
| | | | |
| **ஏனைய முற்றுமடங்கிய வருமானம்** | | | |
| மறுமதிப்பீடு செய்யப்பட்ட சொத்து மற்றும் உபகரணங்கள் மீதான உபரி | | 847,136,318 | - |
| மறுமதிப்பீட்டு உபரி (செலவு) / ஒத்திவைக்கப்பட்ட வரிச் சலுகை | | (173,231,211) | - |
| **ஏனைய முற்றுமடங்கிய மொத்த வருமானம்** | | **673,905,107** | **-** |
| **ஆண்டிற்கான மொத்த முற்றுமடங்கிய வருமானம்** | | **813,497,139** | **603,272,829** |
| | | | |
| பங்கொன்றுக்கான அடிப்படை உழைப்பு | 10.1 | 2.78 | 12.01 |
| பங்கொன்றுக்கான பங்கிலாபம் | 10.2 | 0.83 | 3.60 |

அடைப்புக்குள் உள்ள தொகைகள் கழிப்பனவுகளை காட்டுகின்றன.

86 முதல் 110 வரையான பங்கங்களில் தரப்பட்டுள்ள குறிப்புக்கள் இந்த நிதிக்கூற்றுக்களுடன் இணைந்த ஒரு பகுதியாகும்.

(இலங்கை ரூபாவில்)

| | குறிப்பு | 2017 | 2016 |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| **நடைமுறையல்லாத சொத்துக்கள்** | | | |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் | 11 | 2,683,237,393 | 1,838,655,988 |
| மூலதன முடிவுறா வேலைகள் | 12 | 21,960,737 | 32,152,294 |
| அருவச் சொத்துக்கள் | 13 | - | 79,667 |
| **மொத்த நடைமுறையல்லாத சொத்துக்கள்** | | **2,705,198,130** | **1,870,887,948** |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| இருப்புகக்ள் | 14 | 2,043,336,119 | 251,765,999 |
| வியாபார மற்றும் ஏனைய வருமதிகள் | 15 | 26,288,316,003 | 30,803,548,992 |
| ஊழியர் கடன்களும் முற்பணங்களும் | 16 | 45,206,196 | 46,209,130 |
| முதிர்ச்சி வரை வைதத்துள்ள முதலீடுகள் (எச்ரீஎம்) | 17 | 532,548,539 | 554,361,934 |
| ஏனைய நிதிச் சொத்துக்கள் | 18 | 3,970,073,287 | 3,059,582,808 |
| காசும் காசுக்கு சமமானவைகளும் | 19 | 24,001,404 | 17,002,525 |
| **மொத்த நடைமுறைச் சொத்துக்கள்** | | **32,903,481,549** | **34,732,471,389** |
| **மொத்தச் சொத்துக்கள்** | | **35,608,679,679** | **36,603,359,337** |
| **உரிமைத்துவம் மற்றும் பொறுப்புகக்ள்** | | | |
| **உரிமைத்துவம்** | | | |
| கூறப்பட்ட மூலதனம் | 20 | 502,456,080 | 502,456,080 |
| மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் | 21 | 2,506,976,187 | 1,833,071,080 |
| நிறுத்திவைத்த உழைப்புகக்ள் | | 2,494,732,936 | 2,392,840,203 |
| **மொத்த உரிமைத்துவம்** | | **5,504,165,203** | **4,728,367,363** |
| **நடைமுறையல்லா பொறுப்புக்கள்** | | | |
| ஓய்வூதிய நலக் கடப்பாடுகள் | 22 | 66,893,460 | 61,731,050 |
| அரசாங்க மானியம் | 23 | - | 2,889,117 |
| பிற்போட்ட வரி | 24 | 155,078,112 | 40,928,542 |
| **மொத்த நடைமுறையல்லாத பொறுப்புக்கள்** | | **221,971,572** | **105,548,709** |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | |
| வியாபார மற்றும் ஏனைய சென்மதிகள் | 25 | 1,400,959,514 | 3,799,678,633 |
| வட்டியுடன் கூடிய பெறுகைகள் | 26 | 28,294,744,826 | 27,460,439,996 |
| பெற்ற வைப்புகக்ள் மற்றும் முற்பணங்கள் | 27 | 138,241,125 | 142,371,790 |
| நடைமுறை வரிப் பொறுப்பு | 28 | 8,266,616 | 180,984,083 |
| அட்டுறு செலவினமும் ஏற்பாடுகளும் | 29 | 39,571,679 | 164,200,505 |
| வங்கி மேலதிகப்பற்று | 19 | 759,143 | 21,768,258 |
| **மொத்த நடைமுறைப் பொறுப்புக்கள்** | | **29,882,542,904** | **31,769,443,265** |
| **மொத்த உரிமைத்துவமும் பொறுப்புக்களும்** | | **35,608,679,679** | **36,603,359,337** |
| | | | |
| **பங்கொன்றுக்கான தேறிய சொத்தின் பெறுமதி** | | **109.55** | **94.11** |

இந்த நிதிக்கூற்றுக்கள் 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் தேவைப்பாடுகளுடன் இணங்குகின்றன என்பதனை நான் உறுதிப்படுத்துகின்றேன்.

நிதி முகாமையாளர்

இந்த நிதிக்கூற்றுக்களை தயாரித்து சமர்ப்பிப்பதற்கு முகாமைத்துவம் பொறுப்பாகவுள்ளது. சபையின் சார்பாக அங்கீகரித்து கையொப்பமிடப்பட்டது.

தலைவர்
07.12.2017
கொழும்பு

பணிப்பாளர்

அடைப்புக்குள் உள்ள தொகைகள் கழிப்பனவுகளை காட்டுகின்றன.

86 முதல் 110 வரையான பங்கங்களில் தரப்பட்டுள்ள குறிப்புக்கள் இந்த நிதிக்கூற்றுக்களுடன் இணைந்த ஒரு பகுதியாகும்.

(இலங்கை ரூபாவில்)

| | கூறப்பட்ட மூலதனம் | மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் | நிறும்மிவைத்த உழைப்புக்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| **2015 ஏப்ரல் 01 இல் உள்ளவாறான மீதி** | **502,456,080** | **1,833,071,080** | **1,869,914,195** | **4,205,441,355** |
| ஆண்டிற்கான இலாபம் | - | - | 603,272,829 | 603,272,829 |
| முன்னைய ஆண்டுச் சீராக்கம் | - | - | 35,457,620 | 35,457,620 |
| பங்கிலாபத்திற்கான ஏற்பாடு | - | | (115,804,442) | (115,804,442) |
| **Balance as at 31 March 2016** | **502,456,080** | **1,833,071,080** | **2,392,840,203** | **4,728,367,363** |
| ஆண்டிற்கான இலாபம் | - | - | 139,592,032 | 139,592,032 |
| முன்னைய ஆண்டுச் சீராக்கம் | - | - | (7,699,299) | (7,699,299) |
| ஏனைய முற்றுமடங்கிய வருமானம் | - | 673,905,107 | - | 673,905,107 |
| பங்கிலாபத்திற்கான ஏற்பாடு | - | - | (30,000,000) | (30,000,000) |
| **2017 மார்ச் 31 இல் உள்ளவாறான மீதி** | **502,456,080** | **2,506,976,187** | **2,494,732,936** | **5,504,165,203** |

அடைப்புக்குள் உள்ள தொகைகள் கழிப்பனவுகளை காட்டுகின்றன.

86 முதல் 110 வரையான பங்கங்களில் தரப்பட்டுள்ள குறிப்புக்கள் இந்த நிதிக்கூற்றுக்களுடன் இணைந்த ஒரு பகுதியாகும்.

(இலங்கை ரூபாவில்)

| | 2017 | 2016 |
|---|---|---|
| **செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து காசுப் பாய்ச்சல்கள்** | | |
| வரிக்கு முன் இலாபம் | 127,804,541 | 836,604,005 |
| **சீராக்கங்கள்** | | |
| பெறுமானத்தேய்வு | 50,069,487 | 29,148,977 |
| அருவச் சொத்துக்களின் காலத்தேய்மானம் | 79,667 | 107,750 |
| அரசாங்க மானியங்களின் காலத்தேய்மானம் | (2,889,117) | (5,643,699) |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் விற்பனை (இலாபம்) / நட்டம் | (601,448) | (6,527,192) |
| வியாபார பெறவேண்டியவைகளின் காலக்கழிவு | - | 992 |
| ஆண்டிற்காக சாட்டப்பட்ட பணிக்கொடை | 11,001,717 | 17,591,797 |
| வட்டி வருமானம் | (333,536,542) | (169,528,176) |
| வட்டிச் செலவினம் | 126,125 | 1,726,619 |
| முன்னைய ஆண்டுச் சீராக்கம் | (7,699,299) | 35,457,620 |
| **தொழிற்படு மூலதன மாற்றத்திற்கு முன்னர் செயற்பாட்டு இலாபம்** | **(155,644,869)** | **738,963,570** |
| இருப்புக்கள் | (1,791,570,120) | 243,625,115 |
| வியாபார மற்றும் ஏனைய பெறவேண்டியவை | 4,515,232,989 | 8,874,174,868 |
| ஊழியர் கடன்களும் முற்பணங்களும் | 1,002,934 | (12,347,257) |
| வியாபார மற்றும் ஏனைய செலுத்தவேண்டியவை | (2,428,719,124) | (4,903,922,705) |
| பெறப்பட்ட வைப்புக்களும் முற்பணங்களும் | (4,130,665) | (21,968,213) |
| அட்டுறுச் செலவினம் மற்றும் ஏற்பாடுகள் | (124,628,826) | 44,015,170 |
| **செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து / (பயன்படுத்திய) காசுப் பாய்ச்சல்** | **11,542,320** | **4,962,540,547** |
| செலுத்திய பணிக்கொடை | (5,839,307) | (6,049,880) |
| செலுத்திய வட்டி | (126,125) | (1,726,619) |
| செலுத்திய வரி | (220,011,618) | (95,290,494) |
| **செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து / (பயன்படுத்திய) தேறிய காசுப் பாய்ச்சல்** | **(214,434,731)** | **4,859,473,554** |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து காசுப் பாய்ச்சல்கள்** | | |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் ஈட்டல்கள் | (14,082,872) | (5,698,774) |
| அருவச் சொத்துக்களின் ஈட்டுதல்கள் | - | (72,000) |
| முடிவுறா வேலைகள் | (23,276,640) | (3,629,474) |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் விற்பனை | 637,948 | 6,527,191 |
| திறைசேரி உண்டியல்கள் / நிலையான வைப்புக்களில் முதலீடுகள் | (2,162,425,736) | (1,479,404,640) |
| திறைசேரி உண்டியல்கள் / நிலையான வைப்புக்களில் முதலீடுகளிருந்து மீளஎடுத்தல் (தேறிய வட்டி) | 1,317,159,252 | 240,000,000 |
| பெறப்பட்ட வட்டி (மொத்தம்) | 290,125,942 | 155,577,685 |
| **முதலீட்டு நடவடிக்கைகளில் பயன்படுத்தி தேறிய காசு** | **(591,862,107)** | **(1,086,700,012)** |
| **நிதிமீட்டல் நடவடிக்கைகளிலிருந்து காசுப் பாய்ச்சல்கள்** | | |
| ஆண்டின் போது கடன் பெறுதல்கள் | 11,474,044,093 | 14,023,172,748 |
| ஆண்டின் போது கடன் தீர்ப்பனவுகள் | (10,639,739,262) | (17,867,058,020) |
| **நிதிமீட்டல் நடவடிக்கைகளிலிருந்து / (பயன்படுத்திய) தேறிய காசுப் பாய்ச்சல்** | **834,304,831** | **(3,843,885,272)** |
| **ஆண்டின் போது காசினதும் காசுக்கு சமமானவற்றினதும் தேறிய மாற்றம்** | **28,007,993** | **(71,136,605)** |
| ஆண்டின் தொடக்கத்தில் காசும் காசுக்கு சமமானவைகளும் | (4,765,733) | 66,370,872 |
| | | |
| **ஆண்டின் இறுதியில் காசும் காசுக்கு சமமானவைகளும் (குறிப்பு 19)** | **23,242,261** | **(4,765,733)** |

அடைப்புக்குள் உள்ள தொகைகள் கழிப்பனவுகளை காட்டுகின்றன.

86 முதல் 110 வரையான பங்கங்களில் தரப்பட்டுள்ள குறிப்புக்கள் இந்த நிதிக்கூற்றுக்களுடன் இணைந்த ஒரு பகுதியாகும்.

## 1. கூட்டிணைப்புத் தகவல்கள்

### 1.1 பொதுவானவை

வரையறுக்கப்பட்ட இலங்கை உரக் கம்பனி, பொறுப்பு வரையறுக்கப்பட்டு கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றாவதுடன் இலங்கையில் வதிவுள்ளதாகவும் இலங்கை அரசாங்கத்திற்கு முழுமையாக உரித்துடையதுமாக காணப்படுகின்றது.

### 1.2 பிரதான செயற்பாடுகளும் தொழிற்பாடுகளின் தன்மையும்

நெல், தேயிலை, தெங்கு, இறப்பர் மற்றும் ஏனைய பயிர்களிற்குத் தேவையாகவுள்ள உரத்தினை இறக்குமதி செய்து, அரைத்து சந்தைப்படுத்துதல் கம்பனியின் பிரதான செயற்பாடாக உள்ளது.

### 1.3 நிதியாண்டு

கம்பனியின் நிதி அறிக்கையிடல் காலம் மார்ச் 31 இல் முடிவடைகின்றது.

### 1.4 பதிவுசெய்யப்பட்ட அலுவலகம்

கம்பனியின் பதிவுசெய்யப்பட்ட அலுவலகம் பிசொப் ஹில், ஹூனுபிடிய, வத்தளை என்ற முகவரியில் அமைந்துள்ளது.

### 1.5 ஊழியர்களின் எண்ணிக்கை

2017 மார்ச் 31 இல் உள்ளவாறு கம்பனியின் ஊழியர்களின் எண்ணிக்கை 408 (2016 - 420) ஆகக் காணப்பட்டது.

### 1.6 பிரசுரிப்பதற்காக அதிகாரமளிக்கப்பட்ட திகதி

2017 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கம்பனியின் நிதிக்கூற்றுக்களை பிரசுரிப்பதற்காக, 2017 டிசம்பர் 07 ஆந் திகதிய பணிப்பாளர் சபைத் தீர்மானத்திற்கு அமைய அதிகாரமளிக்கப்பட்டது.

## 2. முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு

### 2.1 தயாரிப்புக்கான அடிப்படை

இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு (எஸ்எல்எவ்ஆர்எஸ்) அமைய கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. காணி கட்டிடங்கள் மீள் மதிப்பீடு செய்யப்பட்டதன் மூலம் திருத்தியமைக்கப்பட்டுள்ள, வரலாற்றுக் கிரய எண்ணக்கருவின் கீழ் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. நிதிக்கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்குவதனை உறுதிப்படுத்துவதற்காக சில சிக்கலான கணக்கீட்டு மதிப்பீடுகளை பயன்படுத்துதல் தேவைப்படுத்தப்படுகின்றது. கம்பனியின் கணக்கீட்டுக் கொள்கைகளை பிரயோகித்தல் செயன்முறையில் அதன் தீர்ப்புகளை நடைமுறைப்படுத்துவதற்கும் முகாமைத்துவதத்தினை அது வேண்டுகின்றது. உயர்ந்தளவான தீர்ப்புக்கள் அல்லது சிக்கலுக்குள்ளான பரப்புக்கள், அல்லது நிதிக்கூற்றுக்களிற்கு எடுகோள்கள் மற்றும் மதிப்பீடுகள் முக்கியமானதாகவுள்ள பரப்புக்கள் குறிப்பு 2.26 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

நிதி நிலைமைக் கூற்றிலுள்ள பின்வரும் விடயங்களிற்களைத் தவிர்த்து கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் வரலாற்றுக் கிரய அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன.

- குறித்துரைத்த நலன்களின் கடப்பாட்டுப் பொறுப்பானது குறித்துரைத்த நலக் கடப்பாட்டின் நிகழ்காலப் பெறுமதியாக அங்கீகரிக்கப்படுகின்றது.

- இறையில் காணியும் கட்டிடங்களும் கையேற்பின் போது கிரயத்திலும் அதனைத் தொடர்ந்து மீள் மதிப்பீட்டுத் திகதியிலுள்ள நியாயப் பெறுமதிகளின் அடிப்படையில் மீள் மதிப்பீட்டுத் தொகைகளிலும் அளவிடப்படுகின்றன.

நிதி நிலைமைக் கூற்று, முற்றுமடங்கிய வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று, அவற்றுடன் இணைந்த கணக்கீட்டுக்

கொள்கைகள் மற்றும் அவற்றுக்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் இலங்கை பட்டயக் கணக்கறிஞர் நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு (எல்கேஏஎஸ் மற்றும் எஸ்எல்எவ்ஆர்எஸ்) அமையவும் 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் தேவைப்பாடுகளுடன் இணங்கும் வகையிலும் தயாரிக்கப்பட்டுள்ளன.

### 2.2 கணக்கீட்டுக் கொள்கைகளில் மாற்றங்கள்

கீழே தரப்பட்டுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளின் மாற்றங்கள், வேறு விதத்தில் குறிப்பிடப்பட்டாலன்றி நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள காலத்திற்கு நிலையானதாக பிரயோகிக்கப்பட்டுள்ளது.

முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் சமர்ப்பித்தலும் வகைப்படுத்தலும், சிறந்த சமர்ப்பித்தலுக்காகவும் மீளாய்வாண்டுடன் அவற்றை ஒப்பிடக்கூடிய விதத்திலும் பொருத்தமான இடங்களில் திருத்தியமைக்கப்பட்டன.

### 2.3 அந்நியச் செலாவணி பரிமாற்றம்

#### 2.3.1 தொழிற்பாட்டு மற்றும் சமர்ப்பித்தல் செலாவணி

கம்பனியின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள கொடுக்கல் வாங்கல்களும் மீதிகளும் நிறுவனம் தொழிற்படுகின்ற முதலாந்தர பொருளியல் சுற்றாடல் நாணயத்தை பயன்படுத்தி அளவிடப்படுகின்றன. கம்பனியின் சமர்ப்பித்தல் நாணயமான இலங்கை ரூபாவில் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்படுகின்றன.

#### 2.3.2 கொடுக்கல்வாங்கல்களும் மீதிகளும்

கொடுக்கல் வாங்கல் திகதிகளில் நிலவிய நாணயமாற்று வீதங்களைப் பயன்படுத்தி அந்நியச் செலாவணிக் கொடுக்கல் வாங்கல்கள் தொழிற்பாட்டு நாணயத்திற்கு மாற்றப்படுகின்றன. அக் கொடுக்கல் வாங்கல்களைத் தீர்ப்பதிலிருந்தும் அந்நியச் செலாவணியில் குறிப்படப்பட்டுள்ள நாணயச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை வருட இறுதியிலுள்ள நாணயமாற்று வீதிங்களிற்கு மாற்றுவதிலிருந்தும் விளைந்த அந்நியச் செலாவணி நயங்களும் நட்டங்களும் முற்றுமடங்கிய வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றன.

நட்டக் கிரய மாற்றங்களுடன் தொடர்புடைய மாற்றல் வேறுபாடுகள் முற்றுமடங்கிய வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றன.

#### 2.4.1 ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் கம்பனியின் முகாமைத்துவத்தின் தேவைக்கேற்ப செயற்படுத்துவதற்கு இயலுமானதாக அச் சொத்துக்களை தேவையான இடத்திற்கும் நிலைக்கும் கொண்டுவருவதற்கு ஏற்பட்ட எனையேனும் நேரடிக் கிரயங்கள் உள்ளடங்கலாக ஆரம்பத்தில் கிரயத்தில் அங்கீகரிக்கப்படுகின்றன.

கம்பனியின் நிதித் தன்மையில் சொத்து, பொறி மற்றும் உபகரணங்கள் இலங்கை கணக்கியல் தரநிலைகளுக்கு இணங்க அறிக்கையிடப்பட்டுள்ளது. காணி மற்றும் கட்டிடங்கள் தவிரத்து ஏனைய சொத்து, பொறி மற்றும் உபகரணங்கள் செலவு மதிப்பில் அறிக்கையிடப்பட்டுள்ளது. காணி மற்றும் கட்டிடங்கள் தவிர்த்து ஏனைய சொத்து, பொறி மற்றும் உபகரணங்கள் மொத்த தேய்மானம் அல்லது சேதம் செலவில் குறைக்கப்பட்டு அறிக்கையிடப்பட்டுள்ளது. 2010 ஆண்டில் கம்பனி காணி மற்றும் கட்டிடங்களில் மீள் மதிப்பீட்டுத் தொகையை கணக்கிட்டு சொத்தின் சாதாரண மதிப்பில் ஏற்பட்ட மாற்றங்கள் வெகுஜன அறிக்கையில் அடையாளம் காணப்பட்டுள்ளது.

விடயத்துடன் இணைந்த எதிர்கால பொருளாதார நலன்களை கம்பனிக்கு பாய்ச்சுவதற்கான வாய்ப்புக்கள் காணப்படுகின்ற போதும் கிரயத்தினை நம்பகரமானதாக மதிப்பிடக்கூடியதாக உள்ள போதும் மாத்திரம் பிந்திய கிரயங்கள் சொத்தின் முன்கொணரற் தொகையில் அங்கீகரிக்கப்படுகின்றது அல்லது சொத்தொன்றாக அங்கீகரிக்கப்பட்டது. ஏனைய அனைத்து திருத்தங்களும் பராமரிப்புக்களும் அவை ஏற்படுகின்ற நிதிக் காலத்தில் முற்றுமடங்கிய வருமானக் கூற்றில் சாட்டப்படுகின்றது.

காணி பெறுமானத்தேய்வு செய்யப்படுவதில்லை. ஏனைய சொத்துக்களிற்கான பெறுமானத்தேய்வு அவற்றின் மதிப்பிடப்பட்ட பயனுள்ள ஆயுட்காலம் முழுவதற்கும் அவற்றின் கிரயம் அல்லது மீள்மதிப்பீட்டுத் தொகைக்கு நேர்கோட்டு முறையினை பயன்படுத்தி பின்வருமாறு கணிப்பிடப்படுகின்றது.

| | |
|---|---|
| கட்டிடங்கள் | 40 ஆண்டுகள் |
| பொறி மற்றும் இயந்திரங்கள் | 05 – 10 ஆண்டுகள் |
| மோட்டார் வாகனங்கள் | 05 ஆண்டுகள் |
| சைக்கிள்கள் | 03 ஆண்டுகள் |
| அலுவலக தளபாடங்கள் | 03 ஆண்டுகள் |
| அலுவலக உபகரணங்கள் | 03 ஆண்டுகள் |
| பட்டறைக் கருவிகள் | 05 ஆண்டுகள் |
| ஆய்வுகூட உபகரணங்கள் | 03 ஆண்டுகள் |
| ஏனைய உபகரணங்கள் | 03 ஆண்டுகள் |
| உணவக உபகரணங்கள் | 05 ஆண்டுகள் |
| கணனி துணைச்சாதனங்கள் | 03 ஆண்டுகள் |

சொத்தின் முன்கொணரற் தொகை அதன் மதிப்பிடப்பட்ட தேறக்கூடிய தொகையினைக் காட்டிலும் அதிகமானதாக் காணப்படின் சொத்தொன்றின் முன்கொணரற் தொகை உடனடியாக அதன் தேறக்கூடிய தொகைக்கு குறைத்தெழுதப்படுகின்றது.

### 2.4.2 அருவச் சொத்துக்கள்

ஈட்டப்பட்ட கணனி மென்பொருட்களும் தொழிற்பாட்டு முறைமைகளும் அவற்றை ஈட்டுவதற்காக ஏற்பட்ட மற்றும் பயன்படுத்துவதற்காக கொண்டுவரப்பட்ட கிரயங்களின் அடிப்படையில் மூலதனமாக்கப்படுகின்றன. ஈட்டப்பட்ட அருவச் சொத்துக்கள் திரண்ட காலத்தேய்மானம் மற்றும் திரண்ட காலக்கழிவு நட்டங்கள் கழிக்கப்பட்டு கிரயத்தில் குறிப்பிடப்படுகின்றன. இவற்றின் கிரயங்கள் அவற்றின் மதிப்பிடப்பட்ட பயன்தரும் ஆயுட் காலம் முழுவதற்கும் பின்வருமாறு காலத்தேய்மானம் செய்யப்படுகின்றன.

| | |
|---|---|
| கணனி மென்பொருட்கள் | 03 ஆண்டுகள் |

கணனி மென்பொருள் நிகழ்ச்சித்திட்டங்களை பராமரிப்பதுடன் சம்பந்தப்பட்ட கிரயங்கள், ஏற்படுகையில் செலவினமாக அங்கீகரிக்கப்படுகின்றன.

### 2.4.3 நிதி சாராத சொத்துக்களின் காலக்கழிவு

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களும் அருவச் சொத்துக்களும் காலக்கழிவுக்கு உட்பட்டுள்ளமைக்கு ஏதேனும் குறிகாட்டிகள் காணப்படுகின்றனவா என்பதனை நிச்சயிப்பதற்கு கம்பனி அச் சொத்துக்களின் முன்கொணரற் தொகைகளை ஒவ்வொரு அறிக்கையிடல் காலத்தின் முடிவிலும் மீளாய்வு செய்கின்றது. அவ்வாறான ஏதேனும் குறிகாட்டிகள் காணப்படின், காலக்கழிவு நட்டம் (எவையேனும்) காணப்படுகின்றமையினை உறுதிப்படுத்துவதற்காக சொத்தின் தேறக்கூடிய தொகை மதிப்பிடப்படுகின்றது. தனிப்பட்ட சொத்தொன்றின் தேறக்கூடிய தொகையினை மதிப்பிடுவதற்கான சாத்தியம் காணப்படாதிருப்பின், கம்பனி காசு உருவாக்கல் பிரிவினை நிச்சயித்து சொத்து உரித்தாகக் காணப்படுகின்ற காசு உருவாக்கல் பிரிவின் அறவிடக்கூடிய தொகையினை மதிப்பிடுகின்றது.

தேறக்கூடிய தொகையானது உயர் நியாயப் பெறுமதியிலிருந்து விற்பனைக்கான கிரயத்தினையும் பாவனையிலுள்ள பெறுமதியனையும் கழித்துவருதாகும். பாவனையிலுள்ள பெறுமதியினை மதிப்பிடுகையில், பணத்தின் காலப் பெறுமதியின் நடைமுறைச் சந்தை மதிப்பிடல்களை வெளிக்காட்டுகின்ற முன்கூட்டிய வரி கழிவிடல் வீதத்தினை பயன்படுத்தி மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப் பாய்ச்சல்களும் எதிர்கால காசுப் பாய்ச்சல்கள் சீராக்கப்படாதுள்ள மதிப்பீடுகளிற்கான சொத்துக்களிற்குள்ள குறித்துரைத்த இடர்களும் அவற்றின் தற்போதைய பெறுமதிக்கு கழிவிடப்படுகின்றன.

சொத்தொன்றின் தேறக்கூடிய தொகை (அல்லது காசு உருவாக்கல் பிரிவு) அதன் முன்கொணரற் தொகையினைக் காட்டிலும் குறைவாக மதிப்பிடப்படின், சொத்தின் முன்கொணரற் தொகை (அல்லது காசு உருவாக்கல் பிரிவு) அதன் தேறக்கூடிய தொகையின் அளவுக்கு குறைக்கப்படுகின்றது. காலக்கழிவு நட்டமானது உடனடியாக முற்றுமடங்கிய வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றது.

**2.5 நிதிச் சொத்துக்கள்**

**2.5.1 கம்பனி ஆரம்ப அங்கீகரிப்பின் போது அதன் நிதிச் சொத்துக்களின் வகைப்படுத்தலை நிச்சயிப்பதுடன் கம்பனி அதன் நிதிச் சொத்துக்களை பின்வருமாறு வகைப்படுத்துகின்றது.**

(அ) முதிர்ச்சிவரை வைத்திருக்கப்படும் முதலீடுகள்
(ஆ) கடன்களும் பெறவேண்டியவைகளும்

(அ) முதிர்ச்சிவரை வைத்திருக்கப்படும் முதலீடுகள் (எச்ரீஎம்)

கடன்கள் மற்றும் பெறவேண்டியவைகள் தவிர்ந்த நிலையான அல்லது நிச்சயிக்கப்படத்தக்க செலுத்துகைகள் மற்றும் நிலையான முதிர்வுகளுடன் கூடிய பிரதியீடற்ற நிதிச் சொத்துக்களே எச்ரீஎம் முதலீடு எனப்படும். கம்பனிக்கு நேர்மறையான நாட்டமும் முதிர்ச்சி வரை வைத்திருப்பதற்கான இயலுமையும் காணப்படுமாயின் முதலீடுகள் எச்ரீஎம் என வகைப்படுத்தப்படுகின்றன. எச்ரீஎம் முதலீடுகள் நடைமுறைச் சொத்துக்களில் உள்ளடக்கப்படுகின்றன.

(ஆ) கடன்களும் பெறவேண்டியவைகளும்

நிலையான முதிர்வினையும் செயற்பாடுடைய சந்தையில் விலை கூறப்படாதுள்ள நிரந்தர அல்லது நிச்சயிக்கப்படத்தக்க செலுத்துகைகளுடன் கூடிய பிரதியீடற்ற நிதிச் சொத்துக்களே கடன்கள் மற்றும் பெறவேண்டியவைகள் எனப்படும். அறிக்கையிடல் காலம் முடிவடைந்த பின்னர் 12 மாதங்களிற்கு மேற்பட்ட முதிர்ச்சிக் காலம் கொண்டு, நடைமுறையல்லா சொத்துக்களாக வகைப்படுத்தப்படுகின்ற கடன்களும் பெறவேண்டியவைகளும் தவிர்ந்தவை நடைமுறைச் சொத்துக்களில் உள்ளடக்கப்படுகின்றன. பெறவேண்டிய மானியங்கள், வியாபார மற்றும் ஏனைய பெறவேண்டியவைகள், மீள்கொள்வனவு அரசாங்கப் பிணைகள், நிலையான வைப்புக்கள், முற் செலுத்துகைகள், முற்பணங்கள், வைப்புக்கள், ஊழியர் கடன்கள் மற்றும் அறிக்கையிடல் கால முடிவிலுள்ள காசும் காசுக்கு சமமானவைகளும் கம்பனியின் கடன்கள் மற்றும் பெறவேண்டியவைகளில் உள்ளடங்குகின்றன.

**2.5.2 அங்கீகரிப்பும் ஆரம்ப அளவிடுதலும்**

கடன்களும் பெறவேண்டியவைகளுமாக வகைப்படுத்தப்பட்ட நிதிச் சொத்துக்கள் கம்பனி கொடுக்கல் வாங்கலை மேற்கொண்ட திகதியில் அங்கீகரிக்கப்படுகின்றது. நிதிக் கருவியின் ஒப்பந்த ஏற்பாடுகளிற்கான ஒரு தரப்பாக கம்பனி உருவாகும் வியாபாரத் தேதியன்று ஏனைய நிதிச் சொத்துக்கள் அங்கீகரிக்கப்படுகின்றன. சொத்து நியாயப் பெறுமதியில் காணப்படாத சந்தர்ப்பத்தில் நிதிச் சொத்தொன்று, ஆரம்பத்தில் நியாயப் பெறுமதியுடன் நேரடியாக தாக்கமளிக்கும் கொடுக்கல் வாங்கல் கிரயங்கள் கூட்டப்பட்டு இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக அளவிடப்படுகின்றது.

நிதிச் சொத்துக்கள் காலாவதியாதல் அல்லது மாற்றப்படுவதிலிருந்து காசுப் பாய்ச்சல் கிடைப்பதற்கான உரித்து காணப்படுகையில் நிதிச் சொத்துக்கள் மீள அங்கீகரிக்கப்படுவதுடன் கம்பனியானது அதனைத்தொடர்ந்து நிதிச் சொத்துக்களின் உரிமைத்துவத்தினது அனைத்து இடர்களையும் வெகுமதிகளையும் மாற்றியுள்ளது.

**2.5.3 பிந்திய அளவிடுதல்**

(அ) முதிர்ச்சிவரை வைத்துள்ள முதலீடுகள் (எச்ரீஎம்)

எச்ரீஎம் முதலீடுகள் தாக்கமுள்ள வட்டி முறையினை பயன்படுத்தி அதனைத்தொடர்ந்து காலத்தேய்மான கிரயத்தில் அளவிடப்படுகின்றன. காலத்தேய்மான கிரயமானது கையேற்றல் மற்றும் கொடுக்கல் வாங்கல் கிரயங்களின் மீதான கழிவினை அல்லது வட்டத்தினை கருத்திற்கொண்டு கணிப்பிடப்படுகின்றது.

(ஆ) கடன்களும் பெறவேண்டியவைகளும்

ஆரம்ப அங்கீகரிப்பினைத் தொடர்ந்து, கடன்களும் பெறவேண்டியவைகளும் தாக்கமுள்ள வட்டி முறையினை பயன்படுத்தி காலக்கழிவு ஏற்பாட்டினை கழித்த பின்னர் காலத்தேய்மான கிரயத்தில் அளவிடப்படுகின்றன.

### 2.5.4 நிதிச் சொத்துக்களின் காலக்கழிவு

காலத்தேய்மான கிரயத்தில் முன்கொணரப்பட்ட சொத்துக்கள்

நிதிச் சொத்தொன்றுக்கு காலக்கழிவு ஏற்படுவதற்கான சான்று காணப்படுகின்றதா என ஒவ்வொரு அறிக்கையிடல் காலத்தின் முடிவிலும் கம்பனி மதிப்பீடு செய்கின்றது. சொத்தின் ஆரம்ப அங்கீகரிப்பின் பின்னர் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நிகழ்வுகள் (நட்ட நிகழ்வொன்று) இடம்பெற்றமையின் விளைவாக காலக்கழிவுக்கான பொருத்தமான சான்றுகள் காணப்படுகையிலும், அந்த நட்ட நிகழ்வு (அல்லது நிகழ்வுகள்) நிதிச் சொத்தின் மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப் பாய்ச்சல்களில் தாக்கம் செலுத்துகின்றமையினை நம்பகரமாக மதிப்பீடு செய்ய முடிகின்ற போதிலும் மாத்திரம் நிதிச் சொத்தொன்று காலக்கழிவு அடைவதுடன் காலக்கழிவு நட்டங்களும் ஏற்படுகின்றன.

கடன்கள் மற்றும் பெறவேண்டியவைகளையும் முதிர்ச்சி வரை வைத்திருக்கப்படும் முதலீட்டினையும் காலத்தேய்மான கிரயத்தில் முன்கொணர்வதற்காக, நட்டத்தின் அளவானது சொத்தின் முன்கொணரற் தொகைக்கும் மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப் பாய்ச்சலின் (இதுவரை இடம்பெறாதுள்ள எதிர்கால கடன் நட்டங்கள் நீங்கலாக) தற்போதைய பெறுமதிக்குமிடையிலான வேறுபாட்டினை நிதிச் சொத்தின் ஆரம்ப பயனுள்ள வட்டி வீதத்தில் கழிவீடு செய்து அளவிடப்படுகின்றது. நிதிச் சொத்துக்களின் முன்கொணரற் தொகை குறைக்கப்பட்டு நட்டத் தொகை முற்றுமடங்கிய வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றது.

தொடர்ந்துவரும் காலப்பகுதியொன்றில் காலக்கழிவு நட்டத் தொகை குறைவடைந்து, குறைவினை காலக்கழிவு அங்கீகரிக்கப்பட்ட பின்னர் இடம்பெற்ற நிகழ்வொன்றுடன் தொடர்புபடுத்த முடியுமாயின், முன்னர் அங்கீகரிக்கப்பட்ட காலக்கழிவு நட்டத்தின் திருத்தம் முற்றுமடங்கிய வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றது.

### 2.6 இருப்புக்கள்

இருப்புக்கள் (நேரடியான மற்றும் கலவை உரங்கள்) மானியத்தினைக் கழித்து கிரயத்தில் குறிப்பிடப்படுகின்றன. கிரயமானது முதல் வந்தது முதல் சென்ற முறையினை (குஜகுமு) பயன்படுத்தி நிச்சயிக்கப்படுகின்றது. கலவை உரத்தின் கிரயமானது மூலப்பொருட்கள், நேர் ஊழியம், ஏனைய நேர் கிரயங்கள் மற்றும் தொடர்புடைய உற்பத்தி மேந்தலைகளை உள்ளடக்குகின்றது. உள்ளூரில் கொள்வனவு செய்யப்பட்ட இருப்புக்கள் கிரயத்தில் குறிப்பிடப்படுகின்றன. தேறிய நிகரப் பெறுமதியானது பிரயோகித்தக்க விற்பனை செலவினத்தைக் கழித்துவரும் வழமையான வணிக நடவடிக்கையிலுள்ள மானியப் பெறுமதியாகும்.

நுகரத்தக்க மற்றும் பொதியிடல் பொருட்கள் கிரயத்தில் குறிப்பிடப்படுகின்றன.

### 2.7 வியாபார வருமதிகள்

வழமையான வியாபார நடவடிக்கைகளின் போது பொருட்களை விற்பனை செய்தமைக்காக வாடிக்கையாளர்களிடமிருந்து பெறவேண்டியுள்ள தொகையே வியாபார வருமதியாகும். வழமையான வியாபார சுற்றில் சேகரிப்பு எதிர்பார்க்கப்படுவதுடன் அவை நடைமுறைச் சொத்தாக வகைப்படுத்தப்படுகின்றன. வியாபார வருமதிகள் ஆரம்பத்தில் பட்டியல் பெறுமதியான நியாய விலையில் அங்கீகரிக்கப்படுவதுடன் அதனைத்தொடர்ந்து காலக்கழிவு ஏற்பாட்டினைக் கழித்து மூல பட்டியல் பெறுமதியில் அளவிடப்படுகின்றது.

வியாபார வருமதிகளிற்கு காலக்கழிவு ஏற்படுவதற்கான சான்று காணப்படுகின்றதா என ஒவ்வொரு அறிக்கையிடல் காலத்தின் முடிவிலும் கம்பனி மதிப்பீடு செய்கின்றது. செலுத்துகைகளை சேகரிப்பதில் கம்பனிக்குள்ள கடந்தகால அனுபவங்கள் மற்றும் ஆகக்கூடிய 90 நாட்கள் கடன் காலத்தினை தாமதிக்கும் கடன்களின் எண்ணிக்கையில் ஏற்படுகின்ற அதிகரிப்பு என்பவற்றை வியாபார வருமதிகளின் காலக்கழிவுக்குரிய சான்றுகளில் உள்ளடக்க முடியும். காலக்கழிவுக்கான பொருத்தமான சான்றுகள் காணப்படுகையில் மாத்திரம், வியாபார வருமதிகள் காலக்கழிவு செய்யப்படுவதுடன் காலக்கழிவு நட்டங்கள் ஏற்படுகின்றன. அனைத்து வியாபார வருமதிகளும் காலக்கழிவுக்காக தனித்தனியாக மதிப்பிடப்படுகின்றன.

காலக்கழிவுக்காக வியாபார வருமதிகளை மதிப்பிடுவதற்குப் பயன்படுத்தப்படுகின்ற முறையும் அடிப்படையும் கீழே தரப்படுகின்றன.

தனிப்பட்ட மதிப்பிடல் முறை: பின்வரும் வகைகளைச் சார்ந்த வியாபார வருமதிகள் காலக்கழிவுநட்டத்தினை அளவிடுவதற்காக தனித்தனியாக மீளாய்வு செய்யப்படுகின்றன.

i) பல்நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள்
ii) கமநல சேவை நிலையங்கள்
iii) அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள்
iv) அரசாங்க நிறுவனங்களும் திணைக்களங்களும்

### 2.8 காசும் காசுக்கு சமமானவைகளும்

காசுப் பாய்ச்சல் கூற்றிலுள்ள காசும் காசுக்கு சமமானவைகளும் கையிலுள்ள காசு, வங்கியிலுள்ள அழைப்பு வைப்புக்கள், மூன்று மாதங்கள் அல்லது அதற்குக் குறைந்த முதிர்ச்சிக் காலத்தினைக் கொண்ட உயர் திரவத்தன்மையுள்ள ஏனைய குறுங்கால முதலீடுகளை உள்ளடக்குகின்றது.

### 2.9 கூறப்பட்ட மூலதனம்

இலங்கை அரசாங்கத்திற்கு வழங்கப்பட்ட சாதாரண பங்குகள் உரிமைத்துவமாக வகைப்படுத்தப்படுகின்றது.

### 2.10 நிதிப் பொறுப்புக்கள்

கம்பனி நிதிப் பொறுப்புக்களை ஏனைய நிதிப் பொறுப்புக்களில் வகைப்படுத்துகின்றது. கம்பனியின் ஏனைய நிதிப்பொறுப்புக்கள், கடன்பெறுகைகள், வியாபார மற்றும் ஏனைய சென்மதிகள்மற்றும்வங்கிமேலதிகப்பற்று ஆகியவற்றைஉள்ளடக்குகின்றது. ஆரம்பத்தில் நிதிப்பொறுப்புக்கள் நேரடியாக தாக்கமளிக்கின்ற கொடுக்கல் வாங்கல் கிரயங்களைக் கூட்டி நியாய பெறுமதியில் அங்கீகரிக்கப்படுகின்றன. ஆரம்ப அங்கீகரிப்பினை உடனடுத்து, இந்த நிதிப் பொறுப்புக்கள் தாக்கமுள்ள வட்டி வீதத்தினைப் பயன்படுத்தி காலத்தேய்மானத்தில் மதிப்பிடப்படுகின்றன. ஒப்பந்த கடப்பாடுகள் இல்லாதொழிகையில், இரத்துச் செய்யப்படுகையில் அல்லது காலாவதியாகும் போது நிதிப்பொறுப்பொன்றை கம்பனி அங்கீகரிக்கரிப்பதில்லை.

### 2.11 வியாபார மற்றும் ஏனைய சென்மதிகள்

வழங்குனர்களிடமிருந்து சாதாரண வணிக செயற்பாடுகளின் போது கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள் மற்றும் சேவைகளிற்காக பணம் செலுத்தப்பட வேண்டிய கடப்பாடுகள் வியாபார மற்றும் ஏனைய சென்மதிகளாகும். வியாபார மற்றும் ஏனைய சென்மதிகள், சாதாரண வணிக சுற்றோட்டத்தில் நடைமுறைப் பொறுப்புக்களாக வகைப்படுத்தப்படுகின்றன.

ஆரம்பத்தில் வியாபார மற்றும் ஏனைய சென்மதிகள் கொடுக்கல் வாங்கல் விலையான நியாய பெறுமதியில் அங்கீகரிக்கப்படுவதுடன் அவற்றை குறுங்காலத்தில் செலுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுவதனால் அதனையடுத்து மூல பட்டியல் பெறுமதியில் அளவிடப்படுகின்றன. ஆகையால் பணத்தின் நேரப்பெறுமதி முக்கியத்துவம் பெறுவதில்லை.

### 2.12 கடன்பெறுகைகள்

ஏற்பட்ட கொடுக்கல் வாங்கல் கிரயங்களின் தேறிய நியாய பெறுமதியில் ஆரம்பத்தில் கடன்பெறுகைகள் அங்கீகரிக்கப்படுகின்றன. அதன் பின்னர் தாக்கமுள்ள வட்டி முறையினைப் பயன்படுத்தி கடன்பெறுகைகள் காலத்தேய்மானக் கிரயத்தில் முன்கொணரப்படுகின்றன.

### 2.13 கடன்பெறுகைக் கிரயம்

கடன்பெறுகைக் கிரயங்கள் அவை ஏற்பட்ட காலத்தில் முற்றுமடங்கிய வருமானக் கூற்றில் அங்கிகரிக்கப்படுகின்றன.

### 2.14 அரசாங்க மானியங்கள்

மானியம் கிடைப்பதற்கான நியாயமான உறுதிநிலை காணப்படுகையிலும் அதிலுள்ள அனைத்து நிபந்தனைகளுடன் கம்பனி இணங்கும் பட்சத்திலும் அரசாங்கத்திடமிருந்தான மானியங்கள் நியாயப் பெறுமதியில் அங்கிகரிக்கப்படுகின்றன.

இறக்குமதி கிரயங்களுடன் தொடர்புடைய உர மானியங்கள், அவற்றுக்கேற்பட்ட கிரயங்களுடன் பொருத்தப்பாடு செய்வதற்காக முற்றுமடங்கிய வருமானக் கூற்றில் அங்கிகரிக்கப்படுகின்றன. ஏற்கனவே ஏற்பட்ட இறக்குமதிக் கிரயங்களுக்கான உர மானியங்களை சம்பந்தப்படுத்துவதற்கு மானியம் கிடைப்பதற்கான நியாயமான உறுதிநிலை காணப்படுகையில் அவை பெறவெண்டிய மானியமாக அங்கீகரிக்கப்படுகின்றன.

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களுடன் தொடர்புடைய அரசாங்க மானியங்கள், பிற்போட்ட அரசாங்க மானியங்களாக நடைமுறையல்லா பொறுப்புக்களில் உள்ளடக்கப்பட்டு தொடர்புடைய சொத்துக்களின் எதிர்பார்க்கப்பட்ட ஆயுள் முழுவதற்கும் நேர்கோட்டு முறை அடிப்படையில் முற்றுமடங்கிய வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றன.

### 2.15 நடப்பு மற்றும் பிற்போட்ட வரி

காலப்பகுதிக்கான வரிச் செலவினம் நடப்பு மற்றும் பிற்போட்ட வரியினை உள்ளடக்குகின்றது. ஏனைய முற்றுமடங்கிய வருமானத்தில் அங்கீகரிக்கப்பட்ட விடயங்களுடன் தொடர்புடையவற்றைத் தவிர்ந்த வரி, முற்றுமடங்கிய வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றது. இந்த விடயத்தில், வரியானது ஏனைய முற்றுமடங்கிய வருமானத்திலும் அங்கீகரிக்கப்படுகின்றது.

நடப்பு வருமான வரிக் கட்டணம், கம்பனிக்காக இறுதியில் பிரயோகிக்கத்தக்க அறிக்கையிடுதல் காலத்துடன் தொடர்புடைய வரிச் சட்டங்களின் அடிப்படையில் கணிப்பிடப்படுகின்றது. வரி அதிகாரத்தரப்பிற்கு செலுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற தொகையினை அடிப்படையாயக் கொண்டு பொருத்தமான வேளையில் முகாமைத்துவம் ஏற்பாடுகளை உருவாக்குகின்றது.

சொத்துக்களையும் பொறுப்புக்களையும் அடிப்படையாகக் கொண்ட வரிக்கும் நிதிக்கூற்றுக்களிலுள்ள அவற்றின் முன்கொணரற் தொகைகளிற்கும் இடையே எழுகின்ற தற்காலிக வேறுபாடுகளின் மீது பிற்போட்ட வரி அங்கீகரிக்கப்படுகின்றது. கொடுக்கல் வாங்கலொன்று இடம்பெறுகின்ற வேளையில் கணக்கீட்டினை அல்லது வரி விதிக்கத்தக்க இலாபம் அல்லது நட்டத்தினை பாதிக்காதிருக்கையில் வணிக இணைப்புக்கள் தவிர்ந்த கொடுக்கல் வாங்கல் ஒன்றினாலான சொத்தொன்றின் அல்லது பொறுப்பொன்றின் ஆரம்ப அங்கீகரிப்பிலிருந்து எழுகின்ற பிற்போட்ட வரி கணக்கீடு செய்யப்படுவதில்லை. அறிக்கையிடுதல் காலத்தின் இறுதியிலுள்ள மற்றும் தொடர்புடைய பிற்போட்ட வரிச் சொத்து தேறுகின்ற அல்லது பிற்போட்ட வருமான வரிப் பொறுப்பு தீர்க்கப்படுகின்ற வேளையில் பிரயோகிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்ட தொடர்புடைய வரி வீதங்களை பயன்படுத்தி பிற்போட்ட வரி நிச்சயிக்கப்படுகின்றது.

தற்காலிக வேறுபாடுகளை பயன்படுத்த முடிந்தமைக்கு எதிராக எதிர்கால வரி விதிக்கத்தக்க இலாபம் காணப்படுதல் சாத்தியமாகவுள்ள போது மாத்திரம் பிற்போட்ட வரிச் சொத்து அங்கீகரிக்கப்படுகிறனது.

நடப்பு வரிச் சொத்தினை நடப்பு வரிப் பொறுப்புக்கு எதிராக எதிரீடு செய்வதற்கு சட்டரீதியான உரித்து காணப்படுகையிலும் வருமான வரிகளை விதிக்கும் ஒத்த அதிகாரத்தரப்புடன் பிற்போட்ட வரிப் பொறுப்புக்களும் சொத்துக்களும் தொடர்புபடுகையிலும் பிற்போட்ட வரிச் சொத்துக்களும் பொறுப்புக்களும் எதிரீடு செய்யப்படுகின்றன.

### 2.16 ஊழியர் நலன்கள்

நிச்சயிக்கப்பட்ட நல மற்றும் நிச்சயிக்கப்பட்ட பங்களிப்புத் திட்டங்கள் ஆகிய கம்பனியில் காணப்படுகின்றன.

(அ) நிச்சயிக்கப்பட்ட பங்களித்தல் திட்டம்

வேறுபட்ட நிறுவனங்களிற்கு கம்பனி செலுத்துகின்ற நிலையான பங்களிப்புக்களின் கீழ் தொழிலின் பின்னரான நலத்திட்டமே நிச்சயிக்கப்பட்ட பங்களித்தல் திட்டமாகும். மேலதிக பங்களிப்பினை செலுத்த வேண்டிய சட்டரீதியான மற்றும் நியதிச்சட்ட கடப்பாடுகள் கம்பனிக்கு இல்லை. பங்களிப்புகள், அவை செலுத்தப்பட வேண்டியதாக காணப்படுகையில் ஊழியர் நலச் செலவினமாக அங்கீகரிக்கப்படுகின்றது.

கம்பனி ஊழியர்களின் மொத்தச் சம்பளத்தில் 15 சதவீதத்தினை ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் 3 சதவீதத்தினை ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கும் பங்களிப்புச் செய்கின்றது.

(ஆ) நிச்சயிக்கப்பட்ட நலத் திட்டம்

அறிக்கையிடல் காலத்தின் இறுதியில் உள்ளவாறான நிச்சயிக்கப்பட்ட நலக் கடப்பாட்டின் நிகழ்காலப் பெறுமதியே நிச்சயிக்கப்பட்ட நலத் திட்டம் தொடர்பிலான கம்பனியின் கடப்பாடாகும். எதிர்பார்க்கப்பட்ட அலகு கடன் முறையினைப் பயன்படுத்தி சுயாதீன மதிப்பீட்டாளரினால் நிச்சயிக்கப்பட்ட நலக் கடப்பாடு கணிப்பிடப்படுகின்றது. நடப்பு மற்றும் முன்னைய காலப் பகுதிகளில் அவர்களது சேவைகளிற்காக ஊழியர்கள் உழைத்த திரும்பலின் மதிப்பிடப்பட்ட எதிர்கால நலனை கழிவுநீக்கம் செய்து நிச்சயிக்கப்பட்ட நலக் கடப்பாட்டின் நிகழ்காலப் பெறுமதி தீர்மானிக்கப்படுகின்றது.

அனுபவச் சீராக்கல்கள் மற்றும் மதிப்பீட்டு எடுகோல்களின் மாற்றங்களிலிருந்து எழுகின்ற நயங்களும் நட்டங்களும் அவை எழுந்த காலத்தில் ஏனைய முற்றுமடங்கிய வருமானக் கூற்றில் உரிமைத்துவத்திற்கு சாட்டப்படுகின்றது அல்லது செலவு வைக்கப்படுகின்றது.

அறிக்கையிடல் காலத்தின் இறுதியில் தீர்மானிக்கப்பட வேண்டிய தொகையிலிருந்து நிதிக்கூற்றுக்களில் அங்கீகரிக்கப்பட்ட தொகைகள் பொருண்மையாக வேறுபடுமாயின் கம்பனி நிச்சயிக்கப்பட்ட நலக் கடப்பாட்டினை மீள அளவீடு செய்யும்.

கடந்தகால சேவைக் கிரயங்கள் உடனடியாக முற்றுமடங்கிய வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றன.

ஓய்வூதிய நலக் கடப்பாடுகள் வெளிவாரியாக நிதியிடப்படுவதில்லை.

(இ) குறுங்கால ஊழியர் நலன்

ஊழியரால் வழங்கப்பட்ட தொடர்புடைய சேவைகளிற்காக செலுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட தொகையினை கழிவுநீக்கம் செய்யாது குறுங்கால ஊழியர் நலக் கடப்பாடுகள் அளவிடப்படுகின்றன.

### 2.17 ஏற்பாடுகளும் நிகழத்தக்க பொறுப்புக்களும்

முந்திய நிகழ்வொன்றின் விளைவாக நிகழ்காலத்தில் கம்பனிக்கு சட்டரீதியான கடப்பாடு காணப்பட்டு, கம்பனியிலிருந்து பொருளாதார வளங்கள் வெளிப்பாய்வதற்கான சாத்தியம் காணப்படுகையிலும் தொகையினை நம்பகரமாக மதிப்பீடுசெய்ய முடியுமான போதிலும் செயற்பாட்டுச் செலவின ஏற்பாடுகள் அங்கீகரிக்கப்படுகின்றன.

